# உதயன்

விலை ரூபா 20
பக்கங்கள் 32

33°c - 26°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 111 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 03. புதன்கிழமை 16.03.2016


ஐ.நாவில் எதிரொலிக்கப் போகும் பிரபாகரனின் சாவு

பக். 12-13

# சேயா வன்புணர்வுக் குற்றவாளிக்கு சாவுத் தண்டனை

## ஆறு மாதங்களில் வழங்கப்பட்டது நீதி

கொழும்பு, மார்ச் 16
கொட்டதெனியாவ சிறுமி சேயா சந்தவமியை வன்புணர்வுக்கு உட்படுத்திப் படுகொலை செய்த வழக்கில், குற்றவாளியான சமன் ஜெயலத்துக்குக் கொலைக் குற்றத்துக்காக மட்டும் நீர்கொழும்பு மேல் நீதிமன்று நேற்றுச் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.
அதுமட்டுமன்றி, ஏனைய குற்றங்களான சிறுமியைக் கடத்தியமை, துன்புறுத்தியமை, வன்புணர்ந்தமை என்பவற்றுக்கு 20 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.
சேயா வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டு 184 நாள்களில் சேயாவின் கொலைக்கு நீதி வழங்கப்பட்டுவிட்டது. எனினும் புங்குடுதீவு மாணவி வித்தியா வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டு 310 நாள்களாகியும் இன்னும் ஆரம்பகட்ட விசாரணைகளே முடிவுறவில்லை. அது பற்றிய சுருக்க முறையற்ற விசாரணை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.
சிறுமியான பக். 28



## அன்னை திரேசாவுக்கு புனிதர் பட்டம்

வத்திக்கான், மார்ச் 16
அன்னை திரேசா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதியன்று புனிதராக அறிவிக்கப்படுவார் எனப் பாப்பரசர் பக். 06

# நல்லிணக்கத்தை சிதைக்கச் சதி ஆயினும் அச்சமடையவேண்டாம்

## மக்கள் கருத்தறியும் குழுவுக்கு மைத்திரி ஆலோசனை

கொழும்பு, மார்ச் 16
நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டைச் சிதறடிக்கச் சிலர் முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதனைப் பொருட்படுத்தாது, உங்கள் வேலையை அச்சமின்றித் தொடருங்கள் என்று, புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.
லால் விஜேநாயக்க தலைமையிலான மக்கள் கருத்தறியும் குழு, நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தது. இதன்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



இந்தச் சந்திப்புத் தொடர்பில் லால் விஜேநாயக்க உதயனுக்குத் தெரிவிக்கையில்,
நாங்கள் 25 மாவட்டங்களில் மேற்கொண்ட மக்கள் கருத்தறியும் பக். 06

# 2 அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவி

## உடன்பாடுகள் கைச்சாத்தாகும்



கொழும்பு, மார்ச் 16
இலங்கையின் அபிவிருத்திக்கு ஆதரவான இரண்டு திட்டங்கள் தொடர்பாக, ஐரோப்பிய ஒன்றியம் உடன்பாடுகளைக் கைச்சாத்திடவுள்ளதாக. ஐரோப்பிய ஒன்றியத்தின், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஆணையாளர் நிவென் மிமிகா தெரிவித்துள்ளார்.
மூன்று நாள் பயணமாக நேற்றுக் கொழும்பு வந்துள்ள அவர், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.
இந்தச் சந்திப்பின் பக். 29

## முறைகேடான வீட்டுத்திட்டத்தை வழங்க அனுமதியாது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16
வடக்கு-கிழக்கு மக்களுக்கு வீட்டுத் திட்டம் அவசியம் - அவசரம் என்பதற்காக, முறைகேடான திட்டத்தை வழங்கு பக். 29

# அரசுக்கு ஆதரவாக-எதிராக கொழும்பில் போராட்டங்கள்

கொழும்பு, மார்ச் 16
அரசுக்கு ஆதரவாகவும், எதிராகவும் நேற்றுக் கொழும்பில் இரு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ஆயிரக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றதால் கொழும்பில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.
இந்த ஆர்ப்பாட்டங்களால் தலைநகரில் ஏற்படும் அசௌகரிய நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பெருமளவான பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.
அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசுக்கு எதிராக கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் பக். 28

# ஏழரை மணி நேர மின்தடை இரண்டு நாள்கள் தொடரும்

கொழும்பு, மார்ச் 16
இன்றும் நாளையும் ஏழரை மணி நேரம் சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.
நுரைச்சோலை மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, இந்த மின்தடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
பகலில் ஐந்தரை மணி நேரமும், இரவில் 2 மணி நேரமும் இந்த மின் தடை இரண்டு கட்டங்களாக நடை பக். 27



முச்சந்தி முரளி



பழையபடி குப்பி விளக்குக்கு மவுசு வரப்போகுது கண்டியளே...

# திருட்டு நகையை வங்கியில் அடகு வைத்தவர் மாட்டினார்

யாழ்ப்பாணம், மார்ச் 16
திருடப்பட்ட தங்க நகைகளை வங்கியொன்றில் அடகு வைத்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கரவெட்டி யாக்கருவிலுள்ள வீடு ஒன்றினுள் புகுந்த திருடன் 8 பவுண் நகைகளையும் 30 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றிருந்தான்.
குறித்த நகையை வங்கியில் அடகு வைத்த குற்றச் சாட்டிலேயே பக். 27

## நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்

நேற்று முதல் உணவு தவிர்ப்பில் குதித்தனர்

பக். 02






மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்

## நேற்று முதல் உணவு தவிர்ப்பில் குதித்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 16
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றியவர்கள் நிரந்தர நியமனம் வழங்கக் கோரி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தனர். அவர்களுக்கு உரிய அதிகாரிகளால் இதுவரை உரிய பதில் வழங்கப்படாத நிலையில் அவர்களது போராட்டம் தொடர்கிறது.




யாழ். பண்ணையில் அமைந்துள்ள வடமாகாண சுகாதார அமைச்சரின் அலுவலகம் முன்பாக அவர்கள் இவ்வாறு போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றிய சுகாதாரத் தொண்டர்களும், யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் பணியாற்றிய சுகாதாரத் தொண்டர்களும் சேர்ந்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது நிரந்தர நியமனங்கள் பற்றி எவரும் கண்டு கொள்வதில்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டியதுடன், கடந்த 5 நாள்களாகத் தாம் போராட்டங்களை முன்னெடுத்துவரும்நிலையில்தம்மை யாரும் வந்து பார்க்கவுமில்லை என்றும் தமது போராட்டத்தைப் பற்றி எந்தக் கேள்விகளையும் கேட்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளனர். தாம் செய்த சேவைகளை மனதில் நிறுத்தி, தமக்குக் கட்டாயம் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், தமது குடும்ப நிலமைகளையும் கருத்திற் கொண்டு தமக்கு உரிய அதிகாரிகள் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். நேற்று முன்தினம் வரை கவனவீர்ப்பில் ஈடுபட்டு வந்த அவர்கள் நேற்றுத் தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என்றும் தெரிவித்தனர். (ஐ-4,106)

# தட்டாதெரு வாள்வெட்டு; இரு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 16
தட்டாதெரு ஐயனார் ஆலயம் முன்பாகஉள்ளமரக்காலையில் 17 வயதுச் சிறுவன் மீது மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டுத் தாக்குதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் தட்டாதெரு ஐயனார் ஆலயம் முன்பாக உள்ள மரக்காலையில் 17 வயதுச் சிறுவன் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்தார்.

இந்தக் கொலை வெறித் தாக்குதலை மேற்கொண்டவர்கள் குறித்த சிறுவனை மரக்காலையில் வைத்து வாள், பொல்லுகள் மற்றும் கூர்மையான ஆயுதங்களால் தாக்கியுள்ளனர். அங்கு நின்றிருந்த வாகனங்களையும் அடித்து நொறுக்கினர்.

அதன்போது அயலவர்கள் திரண்டு குறித்த இளைஞர்களை மடக்கிப் பிடிக்க முற்பட்டபோது ஒரு மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு அவர்கள் தப்பியோடினர். பாதிக்கப்பட்ட சிறுவன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததோடு, யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

இதேவேளை நேற்று முன்தினம் குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்படும் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் இருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் 18 வயதையுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளுமாறு மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார்.

இத்தகைய ரவுடித்தனத்தில் ஈடுபடும் இளைஞர் குழுக்களை உடனடியாகக் கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு புதிதாகப் பொறுப்பேற்றுள்ள யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் வீரசிங்கவுக்கு கடந்த திங்கட்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவர் நேரடியாக உத்தரவிட்டிருந்தார். (ற-ஐ-4,101)

# சாராயம் என்று கிருமி நாசினி குடித்த தோட்டத் தொழிலாளி

## அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்

நுவரெலியா, மார்ச் 16
தனது காற்சட்டைப் பைக்குள் இருந்த கிருமிநாசினிப் போத்தலை, சாராயப் போத்தல் எனக் கருதித் தவறுதலாக கிருமிநாசினியை அருந்திய தோட்டத் தொழிலாளியொருவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிப் பிழைத்துள்ளார். இந்தச்சம்பவம்நுவரெலியாப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

48 வயதான குறித்த நபர் நுவரெலியா மாவட்டம், டயகம, சந்திரிகம தோட்டத்தில் தோட்டத் தொழிலாளியாக வேலை செய்து வருகின்றார். அவர் தனக்குக் கடும் வயிற்று வலி என்றும் அதற்கு மருந்து எடுக்க வேண்டியுள்ளது என்றும் மனைவியிடம் கூறியுள்ளார்

மனைவியும் அயலவர்களிடம் ஆயிரம் ரூபா பணத்தைக் கடனாகப் பெற்றுக் கணவரிடம் கொடுத்து, வயிற்று வலிக்கு மருந்தெடுத்து வருமாறு கூறியுள்ளார். அத்துடன் வீட்டுத் தோட்டத்துக்குத் தெளிக்க கிருமிநாசினிப் போத்தலொன்றையும் வாங்கி வருமாறு கூறியுள்ளார்.

டயகம நகருக்குச் சென்ற குறித்த நபர் வைத்தியசாலைக்குச் செல்வதற்குப் பதிலாக, மதுபான விற்பனை நிலையம் ஒன்றுக்குச் சென்று சாராயம் வாங்கியுள்ளார்.

இரு காற்போத்தல் சாராயப் போத்தல்களை வாங்கி, அவற்றில் ஒன்றை அங்கு வைத்தே அருந்தி விட்டு, மற்றையதை வீட்டுக்குக் கொண்டு செல்வதற்காகக் காற்சட்டைப் பைக்குள் வைத்துள்ளார். வரும் வழியில் மனைவி கூறியதை மறக்காது கிருமி நாசினிப் போத்தலையும் வாங்கியுள்ளார். அதைக் காற்சட்டையின் மற்றைய பைக்குள் வைத்துள்ளார்.

வீட்டுக்கு அருகில் சென்றதும் அவருக்கு மற்றைய காற்போத்தல் சாராயத்தின் நினைவு வந்துள்ளது. அதற்குள் முன்னர் அருந்திய சாராயம் தனது வேலையை ஆரம்பித்திருந்தது. அதனால் சாராயப் போத்தலுக்குப் பதில் அவரின் கையில் கிருமிநாசினிப் போத்தல் சிக்கியது. அதை எடுத்து சாராயம் என நினைத்து மட மட என வாய்க்குள் கவிழ்த்து ஊற்றியுள்ளார்.

கிருமிநாசினி உள்ளே இறங்கியதும் எரியத் தொடங்கியுள்ளது. அப்போதுதான் தான் செய்தது அவருக்கு புரியத் தொடங்கியுள்ளது. குய்யோ முறையோ எனக் கூக்குரலிட்டு அயலில் இருந்தவர்களை அழைத்த அவர் தனது திருவிளையாடலைக் கூறியுள்ளார். தன்னை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுமாறு கதறியுள்ளார்.

அங்கிருந்தவர்கள் உடனடியாக அவரை நுவரெலியா வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்றனர். அதிர்ஷ்டவசமாக அவர் உயிர் தப்பிக் கொண்டுள்ளார். தொடர்ந்தும் அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. (ற-ஐ-5)



யாழ்.பிறவுண் வீதியும் அரசடி வீதியும் சந்திக்கும் சந்தியில் நேற்று கன்ரரும் ஓட்டோவும் மோதுண்டு விபத்துக்குள்ளாகின. அதனால் ஓட்டோச் சாரதி ஒருவர் காயமடைந்தார் என்று சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர். (ற-4,20)

# மன்னார் முள்ளிக்குளத்தில் 187 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு

மன்னார், மார்ச் 16
மன்னார் சிலாபத்துறை, முள்ளிக்குளம் கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒன்றரைக்கோடி பெறுமதியான 187 கிலோகிராம் கேரளக் கஞ்சா நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.



பொதிகளாக்கப்பட்ட நிலையில் அவை மீட்கப்பட்டுள்ளன என்றும், அது தொடர்பில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட மது வரித் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மன்னார் மாவட்ட மது வரி திணைக்களப் பொறுப்பதிகாரி பிரதம பரிசோதகர் எஸ்.ரஞ்சன் தலைமையிலான மது வரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து சிலாபத்துறைக் கடற்படையினரின் உதவியுடன் சிலாபத்துறை முள்ளிக்குளம் கடற்கரைப் பகுதியில் விசேட தேடுதல்களை மேற்கொண்டனர்.

அதன்போது கஞ்சா 60 பொதிகளாக்கப்பட்ட நிலையில் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது என்று மது வரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவை சுமார் 1 கோடி 87 லட்சம் ரூபா பெறுமதியானவையாக இருக்கலாம் என்று மதிப்பிட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற-ஐ-4,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் சென்ற ஆசிரியையின் கைப்பையை பறித்த கொள்ளையர்

## மூளாய் வீதியில் சம்பவம்

மூளாய்,மார்ச் 16

மூளாய் காளி கோவிலை அண்மித்த, காரைநகர் பிரதான வீதியில் சென்ற ஆசிரியையின் கைப் பையை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பறித்துச் சென்ற சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற் றுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை குறித்த பகுதியால் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த ஆசிரியைக்கு அலைபேசி அழைப்பு வந்ததால், குறித்த ஆசிரியை அந்த இடத்தில் சைக்கிளை நிறுத்திக் கைப்பையில் இருந்த அலைபேசியை எடுத்துக் கதைக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது, பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், ஆசிரியையின் கைப்பையைப் பறித்துச் சென் றுள்ளனர். இந்தச் சம்பவத்தில் குறித்த ஆசிரியையின் கைப்பைக்குள் அலைபேசி தவிர்ந்த, அடையாள அட்டை, ரொக்கப் பணம் என்பன இருந்துள்ளன. திருடர்கள் கைப்பையால் இலக்கத் தகட்டை மறைத் தவாறு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் குறித்த ஆசிரியையினால், வட்டுக் கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது. இதே இடத்தில் சில தினங்களுக்கு முன்னர் பெண் ஒருவரின் தாலிக்கொடி அறுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (த-வ-ரி)

# துணுக்காய் வலய ஆசிரியர்கள் இன்று கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

துணுக்காய் வலயத்திலுள்ள படசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் வடமாகாணக் கல்வி அமைச்சர் அலுவலகம் முன்பாக இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்த வுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாள ருக்கு எதிராகக் குற்றச் சாட்டுக்களை முன் வைத்துள்ள குறித்த ஆசிரியர்கள், அவருக்கு எதிராகவுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உயர் அதிகாரிகள் இதுவரை எவ்வித நட வடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரி வித்தே இன்று சுகவீன விடுப்பை மேற்கொள் வதுடன் கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித் துள்ளதாது-

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றனின் அதிகார துஷ் பிரயோகங்கள், நிதி, நிர்வாக முறைகேடுகள், பழிவாங்கல்கள் தொடர்பாக உயர் அதி காரிகளுக்குப் பலமுறை அறிவித்தும், இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

அதிகாரிகளின் அந்த அக்கறையீனத்தைக் கண்டித்தும் உரிய நடவடிக்கையை உடன் எடுக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

குறித்த போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ற-ஜ-4)

**ஓப் செற் அச்சு இயந்திர இயக்குநர் தேவை**

எமது சமாச பதிப்பகத்துக்கு கோட் (K.O.R) அச்சு இயந்திரம், கமடா அச்சு இயந்திரம் இயக்குவதில் அனுபவமுள்ள இயந்திர இயக்குநர் ஒப்பந்த அடிப்படையில் தேவையாக உள்ளனர். பகுதி நேரமாக வேலை செய்யக் கூடியவர்களும் தொடர்பு கொள்ளலாம். விரும்புவோர் எதிர்வரும் 28.03.2016 ஆம் திகதிக்கு முன்னதாக கீழ்காணும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்,
வட மா.பனை.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசம்
52.சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
021 222 5072

**MD 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கான கேள்விப் பத்திரம் கோரல்**

எமது சமாச பாவனையில் உள்ள மொடல் 22 - MD 90 NPJS XXXX மோட்டார் சைக்கிள் மூடிய கேள்வி விண்ணப்பமுறை மூலம் விற்பனை செய்யவுள்ளோம். விண்ணப்பிக்க விரும்புவோர் பதிவுத்தபால் மூலம் எதிர்வரும் 30.03.2016 ஆம் திகதிக்கு முன்னதாக கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். பார்வை இட விரும்புபவர்கள் அலுவலக வேலை நாள்களில் பார்வையிடலாம்.

தொடர்பு: பொதுமுகாமையாளர்,
வட மா.பனை.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசம்,
52, சோமசுந்தரம் லேன் சுண்டுக்குழி யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 5072
(சி.29830) (13.20.17)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 15.03.2016 | 1955 | நீலம் |

மிதுனம்
வெற்றி இலக்கங்கள்
06 20 46 54

வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 24,52,380/-

2016-03-18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழையுங்கள் 1919

நியத்த ஜய

வெற்றி வாரம் : 445
திகதி : 15.03.2016
வர்ணம் : மஞ்சள்

வாசி தஹச
விஷேட வெற்றி இலக்கம்
2356

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ 1,39,45,060/-

வெற்றி இலக்கங்கள்
07 30 41 60
ஆங்கில எழுத்து
G

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழையுங்கள்
Tel: 011 4 824 824

18.03.2016 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
நீல

**SPOKEN ENGLISH**
யாழ்நகரில் திரு.ஷாம்சன் ஆசிரியரின்
**Personal Class**

தனிப்பட்ட ரீதியில் திரு.ஷாம்சன் ஆசிரியரிடம் ஆங்கிலப் பேச்சுப்பயிற்சியில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

அடிப்படையில் இருந்து குறுகிய காலப்பகுதியில் தமிழ்போல சரளமாக ஆங்கிலம்பேசப்பழகுவதற்கான நேரடிப்பயிற்சி.

ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொருவர் மட்டும்!

தொழில்புரிவோர், வெளிநாடுசெல்வோர், தொழில்தேடுவோர் சரளமாக ஆங்கிலம்பேச விரும்புவோர் அனைவரும் இணையமுடியும்.

பயிற்சியில் இணைவோர் தாம் விரும்பிய நேரத்தினை தெரிவுசெய்யமுடியும்!
19.03.2016 இற்குமுன் அலுவலகத்தில் பதிவுசெய்தல்வேண்டும்.

SAAMSON
Experts in English Training
879, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 1570 486

**British College of Higher Studies**
BCHS
வழங்கும் இலங்கை நிர்வாக சேவைக்கான வகுப்புகள்

**SLAS/SLEAS**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
(Open/ Limited)

வகுப்புகள் யாவும் பிரபல விரிவுரையாளர்களினாலும் துறைசார் அனுபவமிக்கவர்களால் 100% வெற்றியை இலக்காக் கொண்டு நடத்தப்படுகிறது

Batch I : 19/03/2016 Batch II : 20/03/2016
@10.00am

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0770365728, 0773776770

**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்**
**மகோற்சவ கால தற்காலிக கடை அமைத்தல்**

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மகோற்சவம் 29.03.2016 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் நடைபெற இருப்பதால் திருவிழாக்காலங்களில் தற்காலிக கடைகள் அமைக்க விரும்புபவர்கள் 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு ஆலய அலுவலகத்திற்கு வந்து விவரத்தை அறிந்து கோரிக்கையை முன்வைக்க வேண்டுகிறோம்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
மானிப்பாய்(15.03.2016)
செயலாளர்
தர்மகர்த்தாசபை

தொலைபேசி இலக்கம் : 021-2255117

**S.K.Broking Institute**
**காணிகள் விற்பனைக்குண்டு**

நல்லூர், திருநெல்வேலி, கோண்டாவில், இராசவீதி, கோப்பாய், கல்வியங்காடு பகுதிகளில் எம்மிடம் காணிகள் விற்பனைக்குண்டு. மற்றும் யாழ் சிவலிங்கப்புளியடி, ஓட்டுமடம் வீதியில் 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774613884, 0771933490

**வீடு வாடகைக்கு உண்டு**

மல்லாகம் சந்திக்கு அருகில் புதிதாக விசேட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள வீடு வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

(89969) (14,17,20)
077 342 3913/ 077 655 3942

**வேலை வாய்ப்பு**

**Global Metro Campus**

எமது நிறுவனத்தின் மாலிசந்தி,புலோலி கிளைகளுக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

★ கணினி ஆசிரியர் -(ICT, Teacher) - பெண்
★ முன்பள்ளி ஆசிரியர்- பெண்
★ ஆங்கில ஆசிரியர் (Pre School, Primary) - பெண்
★ அலுவலக பராமரிப்பாளர் - பெண்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 22.03.2016 வரை ஏற்றுக்கொள்ளப்படும்

CV அனுப்ப வேண்டிய முகவரி
E- mail campus- global@yahoo.com
Address No169,Global metro campus,
Main street, Malisanthi,
Karaveddy, Jaffna.
021 226 1399
(68533)(12.19.20)

**CCTV**
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
Job Guaranteed*
(*Conditions apply)
Next Batch: 19 - March - 2016
021-4926222,076-7013060

**வட மாகாண சாரதி பாடசாலை தேசிய உரிமையாளர் அமைப்பு**
226,கஸ்தூரியார் வீதி.யாழ்ப்பாணம்

சாரதி பயிற்றுவிப்பாளர்.உதவி சாரதி பயிற்றுவிப்பாளர். அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல். யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,முல்லைத்தீவு சாரதி பயிற்சி பாடசாலை உரிமையாளர்கள் தவறாது சமுகம் அளிக்கவும்.

காலம்: இன்று(16.03.2016) புதன்கிழமை
நேரம்: பிற்பகல் 03.00 மணி
இடம்: U.S ஹோட்டல் யாழ்ப்பாணம்

தொடர்புக்கு
கிருபா 0719999990
டயஸ் 0717773330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மன்னார் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பிராந்தியச் செய்தியாளர்களுக்குத் தடை

மன்னார், மார்ச் 16
மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பிராந்திய செய்தியாளர்கள் செய்தி சேகரிப்பதற்குஅனுமதிகிடையாது- இவ்வாறு தெரிவித்து அவர்களைக் கூட்டத்தில் இருந்து வெளியில் அனுப்பியுள்ளார் மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய. இது எங்களுடைய முடிவு அல்ல, அரச அதிபருடைய முடிவு தான் எனவும், இந்தச் சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறினார் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் இணைத் தலைவரான வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாத்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் அபிவிருத்திக்குழு இணைத் தலைவர்கள் தலைமையில் இடம் பெற்றது. இந்த கூட்டத்துக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற மன்னார் மாவட்ட பிராந்திய செய்தியாளர்கள் குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தொடர்பில் செய்தி சேகரிப்பதற்கு மன்னார் மாவட்ட அரச அதிபர் அனுமதி மறுத்திருந்தார்.

ஏற்கனவே மன்னார் மாவட்ட பிராந்திய செய்தியாளர்களுக்கு மன்னார் மாவட்ட அரச அதிபரால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு அமைவாக மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட செய்தியாளர்கள், நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் தமது பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது செய்தியாளர்களை செய்தி சேகரிப்பில் ஈடுபட வேண்டாம் என்று தெரிவித்து அவர்களை வெளியில் அனுப்பிய அரச அதிபர், கூட்டம் நிறைவடைந்த பின்னர் ஊடக சந்திப்பு ஒன்றின் மூலம் தகவல்கள் வழங்கப்படும் என்று தெரிவித்தார். ஆனால் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு எந்தத் தகவலையும்வழங்காதுசென்றுள்ளார்.

அரச அதிபருடைய செயற்பாடு குறித்து மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவரான வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் கேட்ட போது:

எங்களுக்கும், இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவிடமே கேட்க வேண்டும் எனத் தெரிவித்தார். அரச அதிபர் ஊடகவியலாளருக்கான அனுமதியை மறுத்து விட்டதால் கூட்டத்தில் நடைபெற்ற விடயங்களை அறிக்கையிட முடியாது போனது என்று ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் வாக்குவாதங்கள்தான் இடம்பெற்றுள்ளனவே தவிர எந்தவிதமான அபிவிருத்திப் பேச்சுக்களும் இடம்பெறவில்லை எனத் தெரியவருகிறது.

(ற-ஜ-56,21)

## ஈழத்து இனவழிப்புக்கு நீதி கோரி ஐ.நா. நோக்கிய பேரணி நிறைவு



கொழும்பு, மார்ச் 16
ஈழத்தில் நிகழ்த்தப்பட்ட இனவழிப்புக்கு நீதி கோரி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை நோக்கிய பேரணி பேரெழுச்சியுடன் நிறைவடைந்துள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜெனிவா பிரதான ரயில் நிலையத்துக்கு அண்மையில் உள்ள திடலில் ஆரம்பமான இந்த பேரணி மனித உரிமைகள்சபையின்முன்பாகவுள்ள முருகதாசன் திடலை நோக்கி நகர்ந்து சென்றது.

அதில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றிருந்தனர். எல்லோரும் தமிழீழ தேசியக் கொடியைத் தாங்கியிருந்தனர். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிரமாண்டமான கட்அவுட்டையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

அத்துடன் தமிழீழத்தில் நடத்தப்பட்ட இன அழிப்புக்கு நீதி கோரும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் தாங்கியவாறு நகர்ந்த இந்தப் பேரணி, முருகதாசன் திடலில் நிறைவுற்றது.

அங்கு, தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டு அகவணக்கமும் செய்யப்பட்டது. அத்துடன் இனவழிப்புக்கு நீதிகோரிய செயற்பாட்டில் தங்கள் இன்னுயிர்களை ஆகுதியாக்கியவர்களுக்கு வீரவணக்கமும் செலுத்தப்பட்டது. (ற-ஜ-5)

## வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் வெளிச்ச வீடுகள் புனர்நிர்மாணம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
வடமராட்சி கிழக்குக் கடற்கரைப் பகுதியில் சேதமுற்றிருந்த வெளிச்ச வீடுகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மாமுனை, வெற்றிலைக்கேணி ஆகிய கடற்பகுதியில் இந்த வெளிச்ச வீடுகள் அமைக்கப்படவுள்ளதாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இரவு வேளைகளில் கடற்றொழிலை மேற்கொள்ள வசதியாக குறித்த வெளிச்ச வீடுகளை புனர்நிர்மாணம் செய்யுமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மீனவர்களின் இந்தக் கோரிக்கைக்கு அமைவாக கடற்பகுதியில் வெளிச்ச வீடுகளை அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெரும்பாலும் இந்த ஆண்டுக்குள் இந்த வெளிச்ச வீடுகள் அமைக்கப்படும் என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார். இந்த வெளிச்ச வீடுகளை அமைப்பது குறித்து இடர் முகாமைத்துவ அமைச்சுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் வெளிச்ச வீடு அமைப்பது குறித்ததான அனுமதி பிரதேச செயலகத்துக்கு கிடைத்ததும் பணிகள் உடன் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-17)

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை**
**மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை**
**ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்**

**வட்டாரம்:- 07**
**ஆதன இலக்கம்:- 64/32 (புதிய இலக்கம்)**
**வட்டுக்கோட்டை வீதி,**
**கிராமசேவையாளர் பிரிவு :- J /135 நவாலி**

வட்டாரம் 07, வட்டுக்கோட்டை வீதி, ஆதன இலக்கம் 64/32 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய் கோவில் பற்று நவாலி இறை சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவு வலி. தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் கிராமசேவகர் பிரிவு J/135 நவாலி ) " சங்கையன் வளவும் தோப்பு வளவும் மறுபிரிவுகளும் " என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று (E668/218) மேற்படி இறை " சங்கையன் வளவும் தோப்பு வளவும் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு ஒன்று (E668/219) தற்போது இரண்டும் ஒன்று சேர்ந்து நிலப்பரப்பு இரண்டு கொண்ட இவ்வாதனமானது இல.72. சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பா ணத்தைச் சேர்ந்த முத்தையா குணரத்தினமும் பெண் பரமேஸ்வரியும் ஆகிய இவர்களால் நவாலி கிழக்கு மானிப்பாயைச் சேர்ந்த இந்திரபாலன் பெண் மயூரினி என்பவருக்கு குறித்த ஆதனமானது (நில அளவையாளர் கே.நவரத்தினம் அவர்களால் வரையப்பட்ட 1433 இலக்க வரைபடம்) பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.வசந்தசேனன் முகதாவில் நிறைவேறிய 10591ஆம் இலக்க 03.08.2015 ஆம் திகதிய உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் **" சங்கையன் வளவும் தோப்பு வளவும் மறுபிரிவுகளும் " நிலப்பரப்பு 02** கொண்ட குறித்த ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இந்திரபாலன் பெண் மயூரினி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

# நாடளாவிய ரீதியில் 6 ஆயிரம் நிறுவனங்களில் நுகர்வோர் வாரத்தில் விசேட விலைக் குறைப்பு

## அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவிப்பு



வவுனியா, மார்ச் 16
இலங்கை முழுவதிலும் உள்ள 6 ஆயிரம் வர்த்தக நிறுவனங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொருள்களை நுகர்வோர் வாரத்தில் விசேட விலைக் குறைப்பு விலையில் விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை வவுனியா காமினி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற நுகர்வோர் பாதுகாப்பு வாரத்தின் தேசிய நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த காலங்களைவிட இந்த வருடத்தில், இந்த மாதம் 14ஆம் திகதியில் இருந்து ஒரு வாரகாலம் நுகர்வோர்பாதுகாப்புவாரமாகப்பிரகடனப்படுத்தியுள்ளோம். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் இவ்வாறு நுகர்வோர் வாரம் பாவனையாளர் நலன் கருதி பிரகடனப் படுத்தப்பட்டு செயற்படுத்தப்படவில்லை. நாட்டில் வரலாற்றிலே முதல் முறையாக இவ்வாறான நுகர்வோர் பாதுகாப்புத் தினம் பிரகடனப்படுத்தப்பட்டதோடு 6 ஆயிரம் கடைகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொருள்களின் சேவைகளுக்கு விலை மலிவை பெற்று கொடுத்திருப்பதோடு, நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளிலும் பொதுமக்கள் மத்தியிலும் இது போன்ற பல ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

பாவனையாளருக்கு என்ன வேண்டியிருக்கிறது, அவர்களுக்கு நாட்டிலே என்ன உரிமை இருக்கிறது என்பவை தொடர்பான தெளிவை பாவனையாளர்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றோம். அவர்களுடைய உரிமையில் மீறல்கள் ஏற்படுகின்றபோது அதற்கு என்ன சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்ற தெளிவையும் வழங்கி வருகின்றோம்.

வவுனியாவில் 30 பாடசாலைகளில் இது தொடர்பான கருத்தரங்குகளை நடத்தவுள்ளோம். நாடளாவிய ரீதியில் ஏனைய பாடசாலைகளிலும் பாவனையாளர் உரிமை தொடர்பாக தெளிவுபடுத்தவுள்ளோம்.

பாவனையாளர் நலன்களைப் பேணுவது அரசின் பொறுப்பாகும். காங்கேசன்துறையில் சிமெந்துத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் கடிதம் ஒன்றை கையளித்துள்ளேன் . இவ்வாறு அங்கு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டால் 2 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பைப் பெறுவர்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை நாம் மீள ஆரம்பித்து செயற்படுத்தவேண்டும். இதன் மூலம் ஆயிரம் பேர் வேலை வாய்ப்பைப் பெறுவர். ஆனையிறவில் உப்பு உற்பத்தியை ஆரம்பித்து செயற்படுத்தும்போது ஆயிரம் பேர் வேலைவாய்ப்பைப் பெறுவர்.- என்றார்.

நேற்று நடைபெற்ற நிகழ்வில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் கசிந்த திலகரட்ண, வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், வடமாகாண சபை உறுப்பினர் தர்மபால ஜெயதிலக, கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சின் செயலாளர் தென்னக்கோன், வவுனியா மாவட்ட அரச அதிபர் றோ.புஸ்பகுமார, வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா உட்பட பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் பாவனையாளர் நலன் கருதி பொருள் கண்காட்சியும், விற்பனை நிகழ்வும் இடம்பெற்றன. (ற-ஜ-21,402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து பெண்கள் அமைப்புகள் கல்முனையில் பேரணி



யாழ்ப்பாணம், மார்ச் 16
கல்முனை பிரதான வீதியில் நிதி நிறுவனத்தில் பணிபுரிந்த பெண் ஒருவர் பட்டப் பகலில் கழுத்து வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து பெண்கள் அமைப்புக்களால் மாபெரும் கவனவீர்ப்புப் பேரணி நேற்று முன்தினம் நடத்தப் பட்டுள்ளது.
இந்த பேரணியில் அதிகளவான பெண்கள் அமைப்புக்கள், கொலை செய்யப்பட்ட பெண்ணின் 7 வயது மகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
கொலையாளிக்கு எதிரான பதாகைகளை கைகளில் ஏந்தியவாறும், கோஷங்கள் எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் மக்கள் கலந்து கொண்டனர். கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தினுள் சென்று பிரதேச செயலாளரிடம் மனுவைக் கையளித்ததுடன் கொலையாளியின் உருவப் பொம்மையை பெற்றோல் ஊற்றி எரியூட்டி எரித்தனர்.
கொலையாளிக்குத் தகுந்த தண்டனையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்என்றும்கொலையாளிக்கு சார்பாக எந்தச் சட்டத்தரணியும் நீதிமன்றில் முன்னிலையாவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்என்பதையும் இதன்போது வலியுறுத்தினர்.
(ற-ஜ-5)





## காரைநகர் பிரதேசத்தில் பனம் கைப்பணிப் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 16
காரைநகர் பிரதேசத்தில் பனம் கைப்பணிப் பயிற்சி ஒன்றை ஆரம்பிப்பதற்குப் பனை அபிவிருத்தி சபை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது என்று சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 50 பேர் வரையிலான பயனாளிகளுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.
பனம் ஈக்கு, நார், தும்பு, ஓலை போன்றவற்றில் இருந்து கைப்பணிப் பொருள்களை எவ்வாறு உற்பத்தி செய்வது என்பது தொடர்பான பயிற்சிகள், இந்தப் பயிற்சி நெறியில் வழங்கப்படும்.
ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும் இந்தப் பயிற்சி நெறியின் இறுதியில் பயனாளிகளுக்கு சான்றிதழ்கள், மூலப்பொருள்கள் மற்றும் உபகரணங்கள் என்பவை வழங்கப்படும்.
காரைநகர் பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள சபைக்குச் சொந்தமான கட்டடத்தில் இந்தப் பயிற்சியை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இந்தப் பிரதேசத்தில் பனம் கைப்பணியை ஊக்குவிக்கவும், பனை அபிவிருத்திச் சபை புதிய செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவும் தயாராகி வருகிறது. (ற-ஜ-7)

## மீனவர் சந்திப்புக்கு ஆளுநர் அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 16
வட மாகாண ஆளுநர் இன்று வடக்கின் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளை அவரின் அலுவலகத்தில் சந்தித்து மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய அழைப்பு விடுத்துள்ளார். குறித்த சந்திப்பு இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ற-ஜ-101)

## உடையார்கட்டு விவசாயிகளிடம் 50,000 கிலோ நெல்லே கொள்வனவு

### களஞ்சியப்படுத்தும் வசதி இன்மையால்

முல்லைத்தீவு. மார்ச் 16
உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தின் கீழ் 2015/2016 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து நெல் சந்தைப்படுத்தும் சபையால் இன்று நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது என்று உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி தெரிவித்துள்ளார்.
2 ஆயிரத்து 237 ஏக்கர் வயல் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கையில் கிடைத்த பெருந்தொகை நெல்லில் இருந்து வெறும் 50 ஆயிரம் கிலோ நெல் மட்டுமே கொள்வனவு செய்து இருப்பு வைக்கமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
2015/2016 காலபோகத்தின்போது கமநல சேவை நிலையத்தின் கீழ் 827 விவசாயிகள் 2 ஆயிரத்து 237 ஏக்கர் வயல் நிலப்பரப்பில் நெற் செய் கையில் ஈடுபட்டார்கள். உடையார்கட்டில் நெல்லைக் கொள்வனவு செய்யக் கூடிய அளவுக்குப் போதிய நெற்களஞ்சிய வசதிகள் இன்மையால் இதுவரை விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய முடியாது போய்விட்டது.
தற்போது ஒழுங்கு செய்யப்பட்டுள்ள களஞ்சியத்தில் கூடசுமார் 50ஆயிரம்கிலோநெல்லை மட்டுமே களஞ்சியப்படுத்தி வைக்க முடியும். ஒரு விவசாயியிடமிருந்து 2 ஆயிரம் கிலோ நெல் என்ற அடிப்படையில் நெல்லைக்கொள்வனவு செய்யும் போது 25 விவசாயிகளிடமிருந்து மட்டுமே நெல்லைக் கொள்வனவு செய்ய முடியும். மிகுதி 802 விவசாயிகளுக்கும் பதிலளிக்க முடியாத நிலையில் உள்ளேன்.
உடையார்கட்டு பிரிவின் கீழ் சுதந்திரபுரம் கிராமத்தில் ஒரு நெற் களஞ்சியசாலை உள்ளபோதும், அது பிரதான வீதியிலிருந்து உள்ளே சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.
போக்குவரத்து வசதியீனம் மற்றும் நெற்களஞ்சியசாலையின் பாதுகாப்பின்மை போன்றவற்றால் அதில் நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்கு நெல் சந்தைப்படுத்தும் சபையினர் மறுத்து வருகின்றனர்.
எனவே மாவட்டத்தின் உயர் அதிகாரிகள் உரிய களஞ்சிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலமே அனைத்து விவசாயிகளிடமிருந்தும் நெல்லைக் கொள்வன்வு செய்ய முடியும் - என்றார்.
(ற-102)

**வேலையாள்கள் தேவை**
லேர்த் இயந்திரம் மற்றும்
வெல்டிங் வேலை
தெரிந்தவர்கள் உடன் தேவை.
(68533)(02.17)
076 603 9767

**நூரா தொலைத்தொடர்பகம் - வியாபாரம்**
**272, ஐந்து சந்தி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்**
- கடிதங்கள் மொழிப்பெயர்ப்புச் செய்யப்படும் ஆங்கிலம் - தமிழ் - சிங்களம் - அராபிக்
- ஹிந்தி, அராபி, மலையாளம், ஆங்கிலம், சிங்களம் போன்ற மொழிப் பிரச்சினைகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் தீர்த்துக்கொடுக்கப்படும்.
- தொலைபேசி திருத்துதல் - நேரடி இணைய சேவைகள் - பில் கட்டணங்கள் - EZ CASH
- வேலைக்கு பெண் ஊழியர்கள் தேவை (வயதெல்லை 18-22)

077 615 5044, 021 221 6789
Nooraa வில்
(69966)
(13.20.17)

**வாடகைக்கு**
சிறிய Cooler truck
(குளிரூட்டப்பட்ட வாகனம்)
வாடகைக்குத் தேவை.
077 725 0959, 077 770 7667

**காணி தேவை**
அரியாலைப் பிரதேசத்தில்
சிறிய, பெரிய காணிகள்
விலைக்கு அல்லது
வாடகைக்குத் தேவை.
077 618 0675

**தவறிவிட்டது**
கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு முன்பாக சிவபாலசிங்கம் முகுந்தன் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம். தேசிய அடையாள அட்டை(850672946V) மோட்டார் வாகன காப்புறுதி. வரி அனுமதிப்பத்திரம் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
(60770) (14,18,20)
077 302 5673/ 077 334 8240

**பெயர்மாற்றம்**
சவேரியார்புரம் சிலாவத்துறையைச் சேர்ந்த **வேலாயுதம் வெயாட்றிஸ் பிரவீண** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **வேலாயுதம் பிரவீனா** என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.
**வேலாயுதம் பிரவீனா**

**பரிசுத்த ஆவிக்கு செபம்**
எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகிறேன். என்தேவைகள் எவ்வளவு முக்கியமாயிருப்பினும் என்றென்றும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.
- ஆமென்

**விஷேட பல் வைத்திய சேவை**
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# எம்.பிக்களுக்கான சலுகைகளை விடவும் மருத்துவர்களுக்கான சலுகைகள் குறைவு

## அரச வைத்திய அதிகாரிகள் சங்க செயலாளர் தெரிவிப்பு

குறைந்தளவு கல்வித் தரத்தை உடைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தையும், அவர்களின் சலுகைகளையும் விட, உயர் கல்வித் தகமையுடைய மருத்துவர்களுக்கு அரசு சம்பளத்தையும், சலுகைகளையும் கட்டுப்படுத்தியுள்ளது. - இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.
அரச மருத்துவ அகாரிகள் சங்கத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-
நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அதிகரிக்கப்படுமாயின், ஏனைய அரச ஊழியர்களுக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். அவ்வாறு சம்பளம் அதிகரிக்கப்படாத பட்சத்தில் எதிர்காலத்தில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் இடம்பெறும்.
மருத்துவர்கள் பொது மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். ஆனால் மருத்துவர்களுக்கு மிகவும் குறைந்தளவு சலுகைகளே அரசால் வழங்கப்படுகின்றன.
மிகவும் குறைந்த அளவு கல்வித் தரத்தைஉடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் சலுகைகளை விட, உயர் கல்வித் தகமைகளையுடைய மருத்துவர்களுக்கான சலுகைகளைத் தற்போதைய அரசு மட்டுப்படுத்தியுள்ளது. இதனை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதே எமது சங்கத்தின் ஒட்டு மொத்தத் தீர்மானம்.
எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலை நிறுத்தம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு 19 நிர்வாக தொழிற்றுறை ஒன்றியத்தின் நிர்வாகிகளை அடுத்த வாரம் கொழும்புக்குஅழைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.- என்று அவர் தெரிவித்தார். (ற-ஐ-5)

## மரண அறிவித்தல்கள்

### பெரியதம்பி கனகரெத்தினம்
(நயினாதீவு)




நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி கனகரத்தினம் நேற்று (15.03.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நயினாதீவு, 5A (69962) (11,18,20) குடும்பத்தினர்.

### செல்லையா நாகராசா



யாழ்.நயினாதீவு. 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நாகராசா 11.03.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னலெட்சுமியின் பாசமிகு கணவரும், உதய ராணி (ஜேர்மனி), பத்மராணி (கனடா), கமலகாசன், ரூபினி (கனடா), ரூபகாந்தன், துஷ்யந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மீனாம்பிகை, நடராசா, தனலெட்சுமி, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஶ்ரீதரன் (ஜேர்மனி), மோகன்ராஜன் (கனடா), கலைவாணி, தினேஷ் குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்றவர்களானதில் லையம்பலம், செல்லையா, நவரெத்தி னம், நாகேசு, மீனாட்சி, லெட்சுமி, வேலாயுதம் மற்றும் இரத் தினம், சுப்பையா, கிருஷ்ணசாமி, குற்றாலலிங்கம், சரஸ்வதி, புவனேஸ்வரி, சிவக்கொழுந்து ஆகியோரின் அருமை மைத்துன ரும், ரோஜிதா, டினுசிகா, அரிசுதன், ஹரிஸ், திவேஸ், ரிசிதா், அஸ்விதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத் தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (69946)(11,18,20)

தகவல்: குடும்பத்தினர்.

கமலன் - 077 727 7128, ரூபன்- 077 781 9873
துசி - 077 058 3534
சிறிதரன் உதயா (ஜேர்மனி) 0049 291 908 3506
மோகன்ராணி (கனடா) - 0016 47827 6477
தினேஸ் ரூபி (கனடா) - 0014 5068 90411

7ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

# எட்கா ஒப்பந்தத்தை எதிர்த்து வவுனியாவில் இன்று கவனயீர்ப்பு

இலங்கையில் மாலபே தனியார் வைத்திய கல்லூரி நிறுவுதல் மற்றும் எட்கா எனும் இலங்கை இந்தியா பொருளாதார ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரிகள் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.
இந்தப் போராட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா பொது வைத்தியசாலை முன்பாக ஆரம்பமாகும் எனவும் வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.
இலங்கையில் ஆரம்பிக்கப்பட உள்ள மாலபே எனும் வைத்தியக் கல்லூரியால் பெருமளவான மாணவர்கள் வைத்தியத் துறையில் பாதிக்கப்பட போகின்றார்கள் என்றும், இதனால் இலங்கையில் இருக்கும் வைத்தியர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் குறைவடையும் என்றும் தெரிவித்துள்ள அவர்கள் இந்தியாவுடனான பொருளாதார ஒப்பந்தமான எட்கா எனும் திட்டத்தை கைவிடுமாறும் வலியுறுத்தி இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.
காலை வவுனியா பொது வைத்தியசாலையிலிருந்து ஆரம்பமாகும் இந்த எதிர்ப்பு பேரணி வவுனியா மணிக்கூட்டுக் கோபுரம் வழியாக சென்று மத்திய பஸ் தரிப்பிடத்துக்குச் செல்லவுள்ளது. அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுமறுபடியும்வைத்தியசாலையைசென்றடையவுள்ளது.
இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக வவுனியா பொது வைத்தியசாலையின் செயற்பாடுகள் விபத்துப் பிரிவு, வெளிநோயளர் பிரிவு, விடுதிச் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாது என்று வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.
இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வடக்கு கிழக்கு, வடமேல் மாகாணம்போன்ற இலங்கையின் அனைத்திடங்களைச் சேர்ந்த வைத்தியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா கிளையினர் தெரிவித்தனர். (ற-ஐ-21)

## அன்னை

பிரான்சிஸ் அறிவித்துள்ளார்.
ஏழை மக்களுக்காகப் பணியாற்றிய அன்னை திரேசா, றோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் புனிதர் வரிசையில் இனி இடம்பெறுவார்.
ஏழை, எளிய மக்களுக்குத் தன்னலமற்ற சேவையாற்றுவதையே வாழ்வின் கடமையாக உணர்ந்து பணியாற்றியமைக்குச் சர்வதேச ரீதியில் பல நாடுகளின் மிக உயர்ந்த விருதுகள் மற்றும் நோபல் பரிசு பெற்ற அன்னை தெரேசா கடந்த 1997ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி தனது 87 ஆவது வயதில் கொல்கத்தாவில் காலமானார்.
தனது வாழ்நாள் முழுவதும் தொழுநோயாளிகளுக்காகவும் ஏழை, எளிய மக்களுக்காகவும் தன்னலமற்ற சேவை புரிந்த திரேசாவுக்கு புனிதர் பட்டம் வழங்கவேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர்.
அன்னை திரேசா தனது சக்தியின் மூலம் ஒருவரைக் குணப்படுத்தியதாகச் சொல்லப்படும் இரண்டாவது சம்பவத்தை வத்திகானின் மூத்த மதகுருக்கள் அங்கீகரித்ததையடுத்து, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
மேற்குவங்கத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவரை குணமாக்கியும், பிரேசில் நாட்டில் மூளை பாதிக்கப்பட்டுக் கோமா நிலைக்குத் தள்ளப்பட்டவரைப் பூரண குணமடையச் செய்தும் இரு அற்புதங்கள் அவரால் நிகழ்த்தப்பட்டிருந்தன.
இவ்விரு அற்புதங்களையும் பாப்பரசர் பிரான்சிஸ் அங்கீகரித்து அன்னைக்குப்புனிதர்பட்டம்வழங்கஒப்புதல்அளித்திருந்த நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் புனிதர் பட்டம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-வ-சி)

### வருந்துகிறோம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை (13.03.2016)
உதயனில் பிரசுரமாகிய
**அமிர்தலிங்கம் மங்கையர்க்கரசியின்** மரணஅறிவித்தலில்
**அமிர்தலிங்கத்தின்** அன்புக் கணவன் என்று தவறுதலாக
அச்சாகிவிட்டது. **அமிர்தலிங்கத்தின்** அன்பு மனைவி என
திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயிலுடன் மோதியதில் இளைஞன் படுகாயம்

சாவகச்சேரி, மார்ச் 16
அலைபேசியில் கதைத்தபடி ரயில் தண்டவாளத்தைக் கடந்தவர், ரயிலினால் மோதுண்டு கால் முறிந்ததுடன் தலையிலும் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலயில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணிக்கு மீசாலை ஐயா கடையடியில் இடம்பெற்றது.
மீசாலை ஐயா கடையடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் பொருள்கள் வாங்க ஓட்டோவில் மூவர் சென்றிருந்தனர். குறித்த நபரும் பொருள்கள் வாங்கிக்கொண்டுதண்டவாளத்தைக் கடந்தபோது, ரயில் மோதியதாக அங்கு நின்றிருந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைச் சேர்ந்த துரைசிங்கம் ஐங்கரன் (25) என்பவரே காயமடைந்தவராவார்.
சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர், ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (வ-4,9)

# லொறி — மோட்டார் சைக்கிள் விபத்து மாடு சாவு: இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம். மார்ச் 16
லொறி மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்ததுடன், மாடு ஒன்றும் உடல் சிதறி உயிரிழந்துள்ளது.
யாழ். பளை புதுக்காட்டுச் சந்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இந்த விபத்துச் சம்பவத்தில், பளைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் கால் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
குறித்த விபத்துச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது,
கண்டாவளை மணல் ஏற்றிக்கொண்டு, இயக்கச்சிப் பகுதியில் இருந்து பளை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த லொறி, வீதியில் நின்ற மாடு ஒன்றுடன் மோதிக்கொண்டு, பளை புதுக்காட்டு பகுதியில் பளையில் இருந்து இயக்கச்சிபக்கமாகசென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.
இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் மாடு லொறியின் சில்லுக்குள் அகப்பட்டதில் மாடு உடல் சிதறி உயிரிழந்ததுடன், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் சில்லுக்குள் இருந்து இழுத்தெடுக்கப்பட்டு, படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்த விபத்துச் சம்பவம் குறித்து பளை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள். (வ-106)

## நல்லிணக்கத்தை

செயற்பாட்டில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான கருத்துகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இது தொடர்பிலான விளக்கத்தை இன்று (நேற்று) நடைபெற்ற சந்திப்பில் நாங்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தோம்.
அத்துடன், மகாநாயக்கர்கள், மதத் தலைவர்கள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என இன்னும் சில தரப்பினரைச் சந்திக்கவேண்டியுள்ளது. அவை அனைத்தும் பூர்த்தியாகிய பின்னர் எதிர்வரும் ஏப்ரல் இறுதிவாரத்தில் அறிக்கையைச் சமர்ப்பிப்போம் என்று ஜனாதிபதியிடம் தெரிவித்தோம்.
எமது கருத்துக்களைச் செவிமடுத்த ஜனாதிபதி, சமாதான மற்றும் நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை அரசு முன்னெடுத்து வருகிறது. அதன் ஒரு கட்டமாகத்தான் சகல மக்களும் சுதந்திரமாக வாழ வழிவகுக்கக்கூடிய அரசமைப்பை உருவாக்குகின்றோம். தற்போது நாடாளுமன்றமும் அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டுள்ளது. மக்களுக்கு ஏற்றவகையில் வெளிப்படையாகச் செயற்படவேண்டியது கட்டாயமாகும்" என்று குறிப்பிட்டார்.
மேலும், முதன்முறையாக நாட்டின் அனைத்து மக்களின் கருத்துக்களும் பெறப்பட்டுள்ளன. இது முன்னேற் றத்திற்கான முதல் படியாகும். கூச்சல் இடுபவர் கள் தொடர்பில் எவரும் அச்சம்கொள்ளத் தேவையில்லை. நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டுக்கு எதிரானவர் கள்தான் மக்கள் மத்தியில் பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டுவருகின்றனர் என்றும் ஜனாதிபதி கூறியதாக லால் விஜேநாயக்க குறிப்பிட்டார். (து-வ-சி)

# இணைந்த நேர அட்டவணை அடுத்த மாதமே நடைமுறை

## வடக்கு போக்குவரத்து அமைச்சு கூறுகின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 16

பஸ்களுக்கான இணைந்த நேர அட்டவணை இந்த மாத ஆரம்பத்திலிருந்து நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் பல்வேறு தரப்புக்களது ஒத்துழைப்பு இன்னமும்கிடைக்காதுள்ளதால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கமே குறித்த நேர அட்டவணை நடைமுறைக்கு வரும். - இவ்வாறு தெரிவித்துள்ளது வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு.

"வழங்கப்பட்ட இணைந்த நேர அட்டவணையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய நேர அட்டவணை அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வரும்" என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> வடக்கு மாகாண பஸ் சேவைகளுக்கான இணைந்த நேர அட்டவணை ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த நேர அட்டவணை இந்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற் போது பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்பு இன்மை காரணமாக அடுத்த மாதமே அது நடைமுறைப் படுத்தப்படும் என்று கூறப்படுகின்றது.

வடக்கு மாகாணத்துக்குள் இலங்கை போக்குவரத்துச் சபைக்கும், தனியார் துறைக்கும் இடையே போட்டி நிலவி வருகின்றது. இரண்டு தரப்பினரும் போட்டி போட்டுக் கொண்டு அதிவேகமாக வாகனங்களைச்செலுத்தும் நிலை காணப்படுகின்றது. அதனால் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்த போதிலும் இந்த நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. தொடர்ந்தும் முறுகல் நிலையே நீடித்துக் கொண்டிருக்கின்றது.

அதையடுத்து வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு இலங்கைப் போக்குவரத்து சபையினர், தனியார் துறையினர் இருவருக்குமான இணைந்த போக்குவ ரத்து நேர அட்டவணையைத் தயாரித்தது. இந்த இணைந்த போக்குவரத்துச் சேவை இந்த மாதம் ஆரம்பத்திலிருந்து நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. ஆனாலும் இன்னமும் இந்தச் சேவை நடைமுறைக்கு வரவில்லை.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் இணைந்த நேர அட்டவணைக்கு ஒத்துழைக்க மறுக்கின்றனர் என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் நேரடியாக முறைப்பாடு செய்திருந்தார். சில தரப்பினர் தமது வருமானத்தை மாத்திரம் இலக்காகக் கொண்டு இந்த இணைந்த நேர அட்டவணைக்கு எதிராகச் செயற்பட்டிருந்தனர் என்றும் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

அதையடுத்து இணைந்த நேர அட்டவணை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் இறுதி முடிவு செய்யும் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை குருநகரில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஏற்கனவே வழங்கப்பட்ட இணைந்த நேர அட்டவணையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. புதிய இணைந்த நேர அட்டவணை சில அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதல் புதிய இணைந்த நேர அட்டவணை நடைமுறைக்கு வரும் என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-5-ரி5)

## அன்பு வார ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வடபிராந்திய ஸ்ரீசத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக் குழு நடத்தும் அன்பு வார ஒன்று கூடல் விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி பண்பாடு விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ்பாணம் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-ரி4)



வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் சுகாதார ஊழியர்கள், சாரதிகள் மற்றும் சிற்றூழியர்களின் பிள்ளைகள் 35 பேருக்கு ஸ்கொட்லாந்து வாழ் கமலசீலனின் அனுசரணையில் தமிழ் விருட்சத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அதிபர் சு.கிருஷ்ணராஜன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் (கண்ணன்), செயலாளர் மாணிக்கம் ஜெகன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் அகில இலங்கை பொது ஊழியர் சங்கத் தலைவரும் ஏற்பாட்டாளருமான தே.நாகராசா, முன்னாள் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உறுப்பினர் க.தர்மலிங்கம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் சுகாதார ஊழியர்கள், சாரதிகள் மற்றும் சிற்றூழியர்கள்,மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(ற-ஜ-21)

## திருமண மண்டபக் கழிவுகளை முகாமை செய்யப் புதிய திட்டம்

### நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16

கழிவுப் பொருள்களை அகற்றும் செயற்பாடுகளில் புதிய முயற்சியாக, நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள திருமண மண்டபங்களால் வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்களை முகாமை செய்வதற்கான திட்டம் பிரதேச சபையால் உள் வாங்கப் பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் தியாகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

கழிவுப் பொருள்களை முகாமை செய்யும் செயற்பாடுகளைச் சீரான முறையில் மேற் கொள்வதற்காக பல்வேறு திட் டங்கள் நல்லூர்ப் பிரதேச சபையால் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

குப்பை கொட்டுபவர்கள் மீதான தண்டம் அறவிடும் செயற்பாடு அண்மையில் முன்னெடுக்கப் பட் டிருந்தது. தற்போது பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட திருமண மண்டபங்களில் தேங்கும் அதிகளவான குப்பைகளை அகற்றும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ஒன்பது திருமண மண்டபங்கள் அமைந்துள்ளன. கடந்த வாரம் குறித்த மண்டப நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. குறித்த கலந்துரையாடலில் திருமண மண்டபங்களில் நடைபெறும் கொண்டாட்டங்களின்போது வெளியேற்றப்படும் குப்பைகளை முகாமை செய்வதற்கான அனுமதியை பிரதேச சபை கோரியிருந்தது.

இந்தக் கோரிக்கைக்கு அமைவாக திருமண மண்டப உரிமையாளர்கள் தேங்கும் கழிவுப் பொருள்களை பிரதேச சபையிடம் வழங்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஒரு முறை குப்பைகளை அகற்றும் செயற்பாட்டுக்காக மண்டப உரிமையாளர்களால் பிரதேச சபைக்கு ஆயிரத்து 500 ரூபா கட்டணம் வழங்கப்படும். நிகழ்வுகள் நடைபெறும் தினத்துக்கு முதல் நாள் குப்பைகளை அகற்றும் கோரிக்கை மண்டப உரிமையாளர்களால், பிரதேச சபையிடம் சமர்பிக்கப்படும்.

அடுத்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டம் ஊடாகவே எதிர்வரும் காலங்களில் திருமண மண் டபம் உள்ளிட்ட பிற மண்டபங்களில் வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்கள் அப்புறப் படுத்தப்படும்.

குறித்த கலந்துரையாடலில் சில மண்டப உரிமையாளர்கள் கலந்து கொள்ளவில்லை. அவர்களுக்கான அறிவுறுத்தல்கள் கடிதம் மூலமாக அனுப்பப்பட்டுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (ற-ஜ-ரி5)

## மழையில் நனைந்து வெயிலில் காயும் வடக்குக் கல்வி அமைச்சு வாகனங்கள்

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16

வட மாகாணக் கல்வி அமைச்சில் நீண்டகாலமாக வெட்டவெளியில் கைவிடப்பட்டு அழிவடையும் நிலையில் உள்ள வாகனங்கள் தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்துக் கேட்டபோது குறித்த வாகனங்கள் இனிமேல் பயன்படுத்த முடியாதவை என்று கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிக்கிறார்.

வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தில் நீண்ட காலமாக வெட்ட வெளியில் நிறுத்தப்பட்டு வெய்யில் , மழை என்பவற்றால் அழிவடையும் வாகனங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ள குறித்த வாகனங்கள் முன்னர் இருந்ததை விடவும் தற்போது மிகப் பழுதடைந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



குறித்த வாகனங்களைச் சேவையில் ஈடுபடுத்த முடியாதுவிடின் உரிய முறைப்படி மாற்றம் செய்யவோ அல்லது அதனை பாதுகாப்பான முறையில் விடுவதற்கோ அதிகாரிகள் தவறியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது தொடர்பில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

வட மாகாண கல்வி அமைச்சினால் கடந்த காலங்களில் பாவிக்கப் பட்டுத் தற்போது முழுமையாகப் பாவிக்க முடியாத நிலையில் 6 வாகனங்கள் உள்ளன. அவை பாவ் னைக்கு உட்படுத்த முடியாதவை என்று சான்றிதழிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பாவனைக்கு உட்படுத்த முடியாத வாகனங்களை ஏலத்தில் விடுவதற்கான அனுமதிக்கு பிரதம செயலாளருக்கு விண்ணப்பித்துள்ள அதே நேரம், அவற்றில் சில வாகனங்களின் பதிவுப் புத்தகங்கள் இன்மையும் ஓர் சிக்கலான விடயமாகவுள்ளது. அதனையும் பெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளோம் - என்று பதிலளித்தார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுத் துப்பாக்கிவெடித்து குடும்பஸ்தர் படுகாயம்

வவுனியா, மார்ச் 16

வயலில் வேலை முடிந்து வீடு திரும்பிய இரண்டு பிள்ளைகளின் தந்தை கட்டுத் துப்பாக்கிச் சன்னங்களுக்கு இலக்காகி பலத்த காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை வவுனியா பாவற்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர் வவுனியா செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்தவராவர்.

வயல் வேலை செய்வதற்கு பாவற்குளம் சென்றுவிட்டு மாலைப் பொழுதில் வேலை முடிந்து வீடு திரும்பும் போது , இன்னொரு வயலில் வயற் காவலுக்காக கட்டப்பட்டிருந்த மெல்லிய கண்ணுக்கு தெரியாத கறுப்பு நூலில் கால் தட்டுப்பட்டபோது அந்த நூலிலே தொடுக்கப்பட்டிருந்த கட்டுத்துப்பாக்கி வெடித்துள்ளது.

அதனால் துவக்கில் இருந்த ஈய வடிவிலான சன்னங்கள் குறித்த குடும்பஸ்தரது காலில் பலமாக தாக்கியுள்ளன. இதனால் காயமடைந்த குடும்பஸ்தர் உடனடியாக அயலவர்களால் வவுனியா செட்டிகுளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ஜ-21)

# முல்லைத்தீவுக் குளங்கள் புனரமைப்பு; விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்குக

## வடக்கு மாகாண பிரதம செயலாளர் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இரு குளங்களின் புனரமைப்பின்போதுஇடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான விசாரணை அறிக்கையை உடன் சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர், விசாரணை மேற்கொண்ட குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு முடிவுக்கு முன்னரே இந்த விசாரணை அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு பிரதம செயலாளர் பணித்திருந்தபோதும், இதுவரையில் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு குளப் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. இரண்டு குளங்கள் வடக்கு மாகாணசபையால் புனரமைப்புச் செய்யப்பட்டன. இருப்பினும், இந்தக் குளப் புனரமைப்புப் பணிகள் தரமற்று உள்ளன என அந்தப் பகுதி விவசாய அமைப்புக்களால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. பல மில்லியன் ரூபா பணம் இந்தத் தரமற்ற பணியின் காரணமாக வீணாகியுள்ளது என்று விவசாய அமைப்புக்கள் தெரிவித்திருந்தன.

> "முல்லைத்தீவு மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு குளப் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. இரண்டு குளங்கள் வடக்கு மாகாண சபையால் புனரமைப்புச் செய்யப்பட் டன. இருப்பினும், இந்தக் குளப் புனரமைப்புப் பணிகள் தரமற்று உள்ளன என அந்தப் பகுதி விவசாய அமைப்புக்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பல மில்லியன் ரூபா பணம் இந்தத் தரமற்ற பணியின் காரணமாக வீணாகியுள்ளது என்று விவசாய அமைப்புக்கள் தெரிவித்திருந்தன."

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், மாகாணசபையில் பிரேரணையொன்றைக் கொண்டு வந்திருந்தார்.

குளப்புனரமைப்பின்போது இடம்பெற்றதாகச் சந்தேகிக்கப்படும் மோசடிகள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற அவரது பிரேரணை,மாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு அமைய வடக்கு மாகாண பிரதம செயலாளரால் மூவர் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டிருந்தது.

இந்த விசாரணைக்குழு கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முன்னர் விசாரணை அறிக்கையை சமர்ப்பித்திருக்க வேண்டும். இருந்த போதிலும், இதுவரையில் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. இதற்கான காரணமும் விசாரணைக் குழுவினால் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில், விசாரணைக் குழுவின் அறிக்கையை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு பிரதம செயலாளர் அ.பத்திநாதன் எழுத்து மூலமான உத்தரவை சில தினங்களுக்கு முன்னர் வழங்கியுள்ளார்.

(ற-ஜ-5-101)



# விவசாய உற்பத்தி விற்பனை மத்திய நிலையம் வவுனியாவில்

வவுனியா,மார்ச் 16

வவுனியா மாவட்ட விவசாயப் பண்ணையின் ஒரு பகுதிக் காணியில் விவசாய உற்பத்திப் பொருள்கள் விற்பனைக்கான விசேட பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

விவசாய உற்பத்திப் பொருள்கள் விற்பனைக்கான விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்கான காணி வழங்கல் தொடர்பான விசேட கூட்ட மொன்று நேற்று வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில்அரச அதிபர்றோஹண புஸ்பகுமார தலைமையில் நடைபெற்றது.இந்தக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த வருட இறுதியில் ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின் போது வவுனியா மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் விவசாயஉற்பத்திப்பொருள்களுக்கான சந்தை வாய்ப்புப் பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியிருந்த நிலையில் வவுனியாவில் விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கான நிதி யொதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த மாதம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மேற்படி தேவைக்கான காணி தொடர்பில் முடிவெதுவும் எடுக்கப்படாது முடிவுற்றிருந்தது.

அதையடுத்து குறித்த காணி ஒதுக்கீடு தொடர்பாக நேற்றயதினம் விசேட கூட்டம் ஒன்று வவுனியா மாவட்ட அரச அதிபரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தின் போது காணி தொடர்பான ஆராய்வுகளைத் தொடர்ந்து ஏகமனதாக வவுனியா ஏ-9 வீதிக்கு அருகிலுள்ள மாவட்ட விவசாயப் பண்ணையின் ஒருபகுதிக் காணியை அதற்கென ஒதுக்குவதற்கு முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், கே.கே.மஸ்த்தான், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், இ.இந்திரராசா, ம.தியாகராசா, ஏ.ஜயதிலக, தர்மபால செனவிரட்ன மற்றும் பிரதேச செயலாளர் க.உதயராசா, பிரதிப்பணிப்பாளர்-விவசாய விரிவாக்கம், பிரதிப்பணிப்பாளர், விதை உற்பத்தி திட்டமிடல் பணிப்பாளர், உதவித்திட்டமிடல் பணிப் பாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-ஜ-21)

# பெண்கள் சமத்துவத்துக்காக வவுனியாவில் மகளிர் தினம்



வவுனியா, மார்ச் 16

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முறைசாரா கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் பெண்களின் சமத்துவத்துக்கான உறுதி மொழி என்ற தல்லைப்பிலான சர்வதேச மகளிர் தினம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு,முறைசாராக் கல்விப் பிரிவு மாணவர்களின் ஏற்பாட்டில் வவுனியா தெற்கு கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவில் இடம்பெற்றது.

இதில் பெண்களின் சமத்துவம் பற்றி பேசும் நாடகம், செல்வி சோணாவின் இயக்கத்தில் உருவான குறும்படம், பாடல்கள், கவிதைகள் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. குறும் படத்துக்கான விமர்சன உரையை எழுத்தாளரும், இயக்குநருமாகிய சு.வரதகுமார் வழங்கினார். நிகழ்வின் இறுதியில் குறும்பட இயக்குநர் செல்வி சோபனாவும், குறும்படத்தில் நடித்த நடிகை அகல்யா ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

நடைபெற்ற நிகழ்வில் பிரதமவிருந்தினராக வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் செல்வி க.கந்தையா, சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தேசியக் கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் திருமதி ப.ஜெயச்சந்திரன், உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். மாணிக்கவாசகம், உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.தவரட்ணம், எழுத்தாளர் திருமதி தர்மினி பத்மநாதன், குறும்பட இயக்குநர் செல்வி சோபனா ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ஜ-402)

# தாளையடியில் பொது மண்டபம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வடமராட்சி கிழக்குதாளையடியில் பொது நோக்கு மண்டபம் ஒன்று நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பொதுநோக்கு மண்டபம் வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் 2.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. மண்டபத்தை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்குள் முழுமையாக நிர்மாணிக்க வேண்டும்என்று மாகாண சபையால் பிரதேச செயலகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதையடுத்து பொது நோக்கு மண்டபத்தின் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வடமராட்சி கிழக்குபிரதேச செயலர் தெரிவித்தார்.

(ற-ஜ-17)

# புளுதியாற்று துருசு சேதமாக்கப்பட்ட விவகாரம் குறித்து உடன் விசாரணை

## கிளிநொச்சி அரச அதிபர் உத்தரவு

கிளிநொச்சி,மார்ச் 16

கிளிநொச்சி புளுதியாற்று நீர்ப்பாசனத்தின் கீழான வாய்க்கால் துருசு அடித்து உடைக்கப்பட்டு சேதத்துக்குள்ளாக்கப்பட்டமை தொடர்பில் உடன் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாவட்ட அரசஅதிபர்சு.அருமைநாயகம் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான 2016 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை இந்த ஆண்டு இடம்பெறாமையால் சிறுகுளங்களின் கீழ் சிறுதானிய பயிர்ச் செய்கையை ஊக்குவிக்குமாறு மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி புளுதியாற்றுக் குளத்தின் கீழ் உள்ள 5 கமக்கார அமைப்புக்களில் ஒரேயொரு அமைப்பைச் சேர்ந்த 60 விவசாயிகள் சிறுதானியம் பயிரிட முன்வந்தனர். அதற்காக இராமநாதபுரம் மேற்கு பிரதேசத்துக்கான நீர் திறந்துவிடப்பட்டு சிறு தானியங்களும் பயிரிடப்பட்டன.

இவ்வாறு பயிரிடப்பட்டு இரு வாரங்கள் கழிந்துள்ள நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு குளத்தின் துருசுக் கதவைப் பூட்டிய பின்பு அதனை மீண்டும் திறக்க முடியாதவாறு விசமிகள் திட்டமிட்ட வகையில் அடித்து சேதமாக்கியிருந்தனர்.

இவ்வாறு சேதமாக்கப்பட்ட துருசை மீண்டும் திருத்தி அமைப்பதானால் பல லட்சம் ரூபா பணச்செலவு ஏற்படுவது மட்டுமன்றி குறித்த திருத்தத்துக்கான பொருள்கள் பெறுவதிலும் பெரும் சிரமம் நிலவும் எனத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், குறித்த துருசை சேதமாக்கி பெரிய அழிவை ஏற்படுத்திய விசமிகளைக் கண்டறிய உடன் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். (ஜ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுநாவல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், மார்ச் 16
யாழ்ப்பாணம் இலக்கிய குவியம் நடத்தும், செல்வி. மிஷாந்தி செல்வராஜாவின் 'மூன்றாம் முத்தம்' குறுநாவல் அறிமுக விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், சி.திருவாகரனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளர் சி.சுஜீவா, சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் ந.இன்பராஜ் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ற-ஐ-ரி4)

# பாதுகாப்புக்கு அவசியமற்ற காணிகள் வடக்கில் விரைவில் விடுவிக்கப்படும்

## காணி அமைச்சர் ஜோன் அமரதுங்க தகவல்

கொழும்பு, மார்ச் 16
வடக்கில் பாதுகாப்புக்கு அத்தியாவசியம் என்று கருதப்படும் காணிகளைத் தவிர ஏனையவற்றை விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று காணி அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.
காணி அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது– வடக்கில் மக்கள் வசித்துவந்த இடங்களில் இருந்து கடந்த காலங்களில் இடம்பெற்ற அசாதாரண நிலைமைகள் காரணமாக அவர்கள் அந்த இடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்களுக்கு காணி உறுதி இருந்தால் அந்தக் காணிகள் நிச்சயமாக அவர்களுக்கு வழங்கப்படும். அவர்கள் இருந்த இடங்களிலேயே மீள்குடியமர்த்தப் படுவார்கள்.
இதேவேளை, நாட்டில் கடந்த காலங்களில் பல்வேறு வகைகளில் காணிப் பத்திரங்கள் பல பெயர்களில் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் எந்தவொரு பத்திரத்திலும் காணி உரித்து விடயத்தில் உறுதியான பத்திரமாக இல்லை. இதனால் இந்தக் காணிகளை பிள்ளைகளுக்கு எழுதவோ வியாபாரத்துக்கு பாவிக்கவோ அல்லது மேல் மாடிகளைக் கட்டிப் பயன்படுத்தவோ முடியாது.
இது தொடர்பாக ஆராய்வதற்கு பிரதமர் குழுவொன்றை நியமித்துள்ளார். இந்தக் குழு காணி தொடர்பான சட்ட மூலத்தின் வரைபைத் தயாரித்து வருகின்றது. எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதமளவில் சட்ட வரைபு முன்வைக்கப்படும். அப்போது அதன் நன்மையை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

> காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் கீழ் வெற்றுக் காணிகள் இருக்கின்றன. இவற்றைச் சரியான முறையில் இனம் கண்டு கஷ்டப் பிரதேசங்களில் வாழும் குடும்பங்களுக்கு 10 பேர்ச்சஸ் அடிப்படையில் வழங்க திட்டமிட் டுள்ளோம்.

பெரியளவில் காணிகள் இருக்கின்றன. ஆனால் அதன் அளவு குறித்து இன்னமும் எங்களால் தேடிக்கொள்ள முடியவில்லை. இவற்றை யாரேனும் கைப்பற்றி இருக்கின்றார்களா? என்று தேடிப் பார்க்க வேண்டியிருக்கின்றது.
அத்துடன் காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் கீழ் வெற்றுக் காணிகள் இருக்கின்றன. இவற்றைச் சரியான முறையில் இனம் கண்டு கஷ்டப் பிரதேசங்களில் வாழும் குடும்பங்களுக்கு 10 பேர்ச்சஸ் அடிப்படையில் வழங்கத் திட்டமிட்டுள் ளோம்.
அத்துடன் அரசுக்குச் சொந்தமான காணிகளை தேடிப் பார்த்து இவற்றையெல்லாம் ஒழுங்கு படுத்த வேண்டியிருக்கின்றது. அதன் பிறகு இவற்றின் ஒரு பகுதியை நாட்டின் பொருளாதாரத்துக்கு வியாபார நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட வேண்டி இருக்கின்றது.
இதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். அடுத்ததாக மக்கள் வாழ்வதற்கு வழங்க வேண்டியிருக்கின்றது. எனவே நல்லாட்சி அரசு காணி தொடர்பான வரைபொன்றை ஏற் படுத்தி காணி யற்றவர்களுக்கு காணி வழங்குவதற்கும் உரித்து உறுதி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கும். – என்றார். (ற-ஐ-5)




## முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16
கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வுகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளன. விநாயகர் சனசமூக நிலையத்தின் பொருளாளர் சி.மிதுசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் அ.வினோறாஜ், தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அரியநாயகம் சறோஜாதேவி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ற-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயுடன் மோதி ஒருவர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 16

கடமைக்குச் சென்ற அலுவலரின் மோட்டார் சைக்கிளுடன், வீதியின் குறுக்கே வேகமாக வந்த நாய் மோதியதில் அலுவலர் தூக்கி வீசப் பட்டு காலில் பாதிப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை சாவகச்சேரியில் இடம் பெற்றது.

தென்மராட்சி பிரதேச அலுவலகத்தில் கடமையாற்றும் அல்லாரை வடக்கைச் சேர்ந்த 59 வயதான குறித்த அலுவலர் விபத்தின் போது காலில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ற-ஐ-9)

நெஞ்சில் நிழலாடும் நினைவுகளோடு
முதலாம் ஆண்டு



மண்ணகம்
02.01.1954

விண்ணகம்
27.03.2015

திதி: அட்டமி

நவாலியூர் அமரர்
**நவரத்தினம் சாம்பசிவம்**
(Former Security Officer - Jaffna College Institute of Technical College)

எம் குடும்பத் தலைவராய் எம் மீது பாசமழை பொழிந்து
எம்மோடு ஒன்றாய் வாழ்ந்து எமை உயர வைத்தீர்
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
என்றென்றும் உங்கள் நினைவு எம்மனதில் இருக்கும்
எமது அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

# சீனா பக்கம் சாயும் கொழும்பு 'செக்' வைக்கின்றது இந்தியா

## எரிபொருள் சேவையை சென்னையில் ஆரம்பித்தது; பாதிக்கப்படுகின்றது கொழும்புத் துறைமுகம்

கொழும்பு, மார்ச் 16

கொழும்பு நகரத் திட்டம் மற்றும் சீனாவிடம் கடன் கோரல் ஆகியவற்றால் மீண்டும் சீனா வின் பக்கம், இலங்கை அரசு சாய முற்பட்டுள்ள நிலையில், இந்தியாவினால் கொழும்புக்கு 'செக்' வைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கப்பல்களுக்கு எரிபொருளை நிரப்பும் சேவை சென்னைத் துறைமுகத்தில் கடந்த வெள்ளிக் கிழமையிலிருந்து ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அதனால் கொழும் புத் துறைமுகத்துக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

இந்தியப் பெருங்கடல் வழியாக பயணம் செய்யும் சர்வதேச கப்பல்கள் எரிபொருள் நிரப்பு வதற்காக இதுவரை கொழும்பு அல்லது சிங்கப்பூர் துறைமுகங் களுக்கே செல்ல வேண்டிய நிலை இருந்தது. ஆனால், தற்போது சென்னைத் துறை முகத்தில் சர்வதேச கப்பல் களுக்கு எரிபொருள் விநி யோகிக்கும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

துறைமுகத்தில் இருந்து ஐந்து கடல் மைல் தொலைவில் வைத்து, கப்பல்களுக்கு மிதவைக் கலங்களின் மூலம் எரி பொருள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், சர்வதேச கப்பல் களுக்கான புதிய வாய்ப்புகளை இந்தியா திறந்து விட்டுள்ளது.

> சென்னைத் துறைமுகத்துக்குள் நுழையாமலேயே, எரிபொருளை நிரப்பும் வசதி கிடைத்துள்ளதால், கப்பல்களுக்கு செலவினங்கள் குறையும். துறைமுகத்துக்குள் நுழைவதற்காக செலுத்த வேண்டி ஏற்படும் கப்பல்களுக்கு வழிகாட்டும், தரித்து நிற்கும், உள்ளிட்ட கட்டணங்களைச் செலுத்தாமலேயே எரிபொருளை நிரப்பும் வசதி கிடைக்கும் என்பதுடன் நேரமும் மிச்சமாகும்.

சென்னைத்துறைமுகத் துக்குள் நுழையாமலேயே, எரி பொருளை நிரப்பும் வசதி கிடைத் துள்ளதால், கப்பல்களுக்கு செலவினங்கள் குறையும். துறை முகத்துக்குள் நுழைவதற்காக செலுத்த வேண்டி ஏற்படும் கப்பல் களுக்கு வழி காட்டும், தரித்து நிற்கும், உள் ளிட்ட கட்டணங் களைச் செலுத் தாமலேயே எரிபொருளை நிரப்பும் வசதி கிடைக்கும் என் பதுடன் நேரமும் மிச்சமாகும்.

சென்னைத் துறைமுகத்தின் இந்தப் புதிய வசதிகள் கொழும்புத் துறைமுகத்தை நாடும் சர்வதேச கப்பல்களைத் திசைதிருப்பும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதனால் கொழும்புத் துறைமுகத்தின் வருவாயும், முக்கியத்துவமும் பாதிக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக் கின்றன. (ற-ஐ-5)


## மிகக் குறுகியகாலத்தில் வடக்கு, கிழக்குமாகாண மக்களுக்கான 65,000 வீட்டுத்திட்டம்

### வீடுகளுக்கான எழுத்து மூல விண்ணப்பம் கோரல்

யுத்தத்தினால் தமது வீடுகளை இழந்தவர்கள் 65,000 வீடமைப்புத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகளைப் பெறுவதற்கான விண்ணப்பத்தினை 30.03.2016 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலாளருக்கும் அதன் பிரதியினை மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளருக்கும் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.





### வீடுகளுக்குரிய பயனாளிகளின் தெரிவிற்கான முன்னுரிமை விதிமுறைகள்

- யுத்தத்தினால் இடம்பெயர்ந்து தற்காலிக இடம்பெயர் முகாம்களில் தற்போது வசிக்கும் விற்கட்ட சொந்த காணிகள் உள்ள குடும்பங்கள்.
- யுத்தத்தினால் கணவரை இழந்த பெண் தலைமை தாங்கும் வீடற்ற குடும்பங்கள்.
- யுத்தத்தின் போது தமது அங்கங்களை இழந்த மாற்றுத்திறனாளிகளினால் தலைமைதாங்கும் வீடற்ற குடும்பங்கள்.
- அகதி முகாம்களில் இருந்து இலங்கைக்கு மீள திரும்பிய வீடற்ற குடும்பங்கள்.
- யுத்தத்தின் போது குடும்ப அங்கத்தவர்களை இழந்த வீடற்ற குடும்பங்கள்.

### விண்ணப்பதாரி சமர்ப்பிக்கவேண்டிய விபரங்கள்

1. முழுப்பெயர் : ..................
2. தற்போதைய முகவரி : ..................
3. கிராமசேவகர் பிரிவு : ..................
4. பிரதேசசெயலாளர் பிரிவு : ..................
5. நிரந்தர முகவரியும் வதிவிட அமைவிடமும் : ..................
6. யுத்தத்திற்கு முன்னர் நிரந்தரக் காணி உள்ளதா? ஆம் / இல்லை
(ஆதாரம் இருப்பின் சமர்ப்பிக்கவும்) காணி இருப்பின் :
6.1.காணிக்கான அமைவிடவிலாசம் : ..................
6.2.கிராமசேவகர் பிரிவு : ..................
6.3.பிரதேசசெயலாளர் பிரிவு : ..................
6.4.உடனடியாக வீடமைக்கும் நிலையிலுள்ளதா? ஆம் / இல்லை
7. யுத்தத்தினால் இடம்பெயர்ந்து தற்காலிக இடம்பெயர் முகாம்களில் தற்போது வசிக்கும் குடும்பமா? : ஆம் / இல்லை
8. யுத்தத்தினால் கணவரை இழந்து பெண்கள் தலைமை தாங்கும் குடும்பமா? ஆம்/ இல்லை
9. யுத்தத்தின் போது தமது அங்கங்களை இழந்த மாற்றுத்திறனாளிகளினால் தலைமைதாங்கும் குடும்பமா? : ஆம் / இல்லை
10. அகதி முகாம்களில் இருந்து இலங்கைக்கு மீள்திரும்பிய குடும்பமா? ஆம் / இல்லை
11. யுத்தத்தின் போது குடும்ப அங்கத்தவர்களை இழந்த குடும்பமா? ஆம் / இல்லை

என்னால் மேலே சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானதும் உண்மையானதும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..................
விண்ணப்பதாரியின் ஒப்பம்

விண்ணப்பதாரியினால் மேலே சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் ஆகும் என்பதனை உறுதிப்படுத்தி வீடு வழங்குவதற்கு முன்மொழிகின்றேன்

..................
கிராமசேவகர்

இவ்விண்ணப்பதாரியான .................. உள்வாங்குவதற்கு சிபார்சு செய்கின்றேன்/ சிபார்சுசெய்யவில்லை.

..................
பிரதேசசெயலாளர்

மேற்குறிப்பிட்டவரை வீடமைப்புத்திட்டத்தில் உள்வாங்குவதற்கு அனுமதிக்கிறேன்/ அனுமதிக்கவில்லை.

..................
மாவட்ட செயலாளர்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தவுக்கு குரல் பதிவு நோய்; கூறுகின்றார் துனேஸ் கன்கந்த

கொழும்பு, மார்ச் 16

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு 'வொய்ஸ் கட்' (குரல்பதிவு) நோய்ஏற்பட்டுள்ளதுஎன்று பதில் இடர் முகாமைத்துவ அமைச்சர் துனேஸ் கன்கந்த தெரிவித்துள்ளார்.பெல்மடுல்லபிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

திருமண வீடு, சாவு வீடு, பூப்புநீராட்டு வீடு மற்றும் மயா னங்களுக்குச் சென்று ஊடகங்களிடம்மகிந்தராஜபக்ச கருத்து வெளி யிட்டு வருகின்றார். மகிந்த ராஜபக்சவுக்கு 'வொயிஸ் கட்' நோய் ஏற்பட்டுள்ளது.

எந்தவொரு நிகழ்வுக்குச் சென்றாலும், ஊடகங்களுக்கு'வொயிஸ்கட்'வழங்குவதற்கு முயற்சிக்கின்றார். நாடாளுமன்றை மதித்தால் நாடாளுமன்றில் தனது விமர்சனங்களை முன்வைக்க முடியும். தமக்கு எதிரான குற்றச் சாட்டுக்களுக்கு நாடாளுமன்றில் பதிலளிக்க முடி யும். மாறாக அங்கும் இங் கும் செல்லுமிடமெல்லாம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுவது பொருத்தமானதாக அமையாது.

நிறைவேற்று ஜனாதிபதி என்ற ரீதியில் சிறந்த முறையில் தனது பதவிக்கான மரியாதையை வழங்கி ஓய்வு பெற்றுக் கொள்ளாது, மகிந்த ராஜபக்ச அதிகார மோகம் காரணமாக தொடர்ந்தும் அரசியலில் ஈடுபட்டு வருகின்றார்.– என்று தெரிவித்துள்ளார். (ற–ஐ–5)

# தயா, ஜோர்ஜ் மாஸ்டரின் வழக்குகளில் சட்டமா அதிபரின் ஆலோசனை இல்லை

## குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தகவல்

கொழும்பு, மார்ச் 16

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் மற்றும் மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆலோசனை கேட்டு, சட்டமா அதிபரிடம் விளக்கம் கோரப்பட்டும், இது வரை சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கவில்லை என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

> 2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்கால் இறுதிக் கட்டப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இவர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்தனர். இராணுவத்தினர் இவர்களை ஓமந்தைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.


இருவருக்கும் எதிரான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

எனினும் குறித்த கடிதத்துக்குப் பதில் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பிணையில் விடுதலையாகியிருக்கும் தயா மாஸ்டர் என்ற வேலாயுதம் தயாநிதி மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் என்ற வேலுப்பிள்ளை குமார் பஞ்சரட்ணம் ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி யிருந்தனர்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்கால் இறுதிக் கட்டப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இவர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்தனர். இராணுவத்தினர் இவர்களை ஓமந்தைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

எனினும் மேலதிக விசாரணைகளுக்காக இவர்களை ஓமந்தைப் பொலிஸார் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்திருந்தனர். (ற–ஐ–5)




# நாட்டை என்னிடம் தந்தால் நிர்வகித்துக் காட்டுவேன்

## மகிந்த எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 16

நாட்டை என்னிடம் ஒப்படைத்தால் நிர்வகிக்கத் தயாராக இருக்கின்றேன் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

யோசித ராஜபக்சவின் பிணை மனு மீதான விசாரணைக்காக கொழும்பு மேல்நீதிமன்றம் வந்திருந்த மகிந்த ராஜபக்சவிடம் அவரது அரசால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பாக செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார். முன்னைய அரசின் கடன்களால், வருமானம் முழுவதும் முன்னைய கடன்களுக்கும், வட்டிக்கும் செலுத்தவே போதுமானதாக இருக்கிறது என்று தற்போதைய அரசு குற்றம் சாட்டுகிறதே? என்று செய்தியாளர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு மகிந்த ராஜபக்ச, அதற்கு நாம் என்ன செய்வது? எனக்கு வாய்ப்புத் தந்தால், நாட்டை நிர்வகித்துக் காட்டுவேன் என்று பதிலளித்துள்ளார். (ற–ஐ–5)

# எயிஸ்ட் வதந்தியால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு அனுமதி மறுத்தது ஏன்?

## பிரதம நீதியரசர் கே.சிறீபவன் கேள்வி

கொழும்பு, மார்ச் 16

எயிட்ஸ் தொற்று ஏற்பட்டதாக வதந்திக்கு உள்ளாகிய சிறுவனை பாடசாலையில் சேர்ப்பதற்கு மறுத்தது ஏன் என்று பிரதம நீதியரசர் கே.சிறீபவன் உயர் நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் தற்போது குறித்த விவகாரத்தில் தீர்வு காணப்பட்டிருப்பதால் விசாரணையை முடித்துக் கொள்வதாகத் தெரிவித்துள்ள உயர் நீதிமன்றம், ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் மீண்டும் மனு ஒன்றின் ஊடாக வழக்குத் தொடர முடியும் என்று குறிப்பிட்டுள்ளது.

குளியாப்பிட்டியவைச் சேர்ந்த சிறுவனுக்கு எயிட்ஸ் தொற்று இருப்பதாக பரப்பட்ட வதந்தியின் காரணமரக, பாடசாலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். எயிட்ஸ் தொற்று ஏற்படவில்லை என்று மருத்துவச் சான்றிதழ் காண்பித்தன் பின்னரும்பாடசாலையில் அவரைச் சேர்க்க அனுமதிக்கப்படவில்லை.

இந்த நிலையில் சிறுவனின் தாயார், தனது பிள்ளையை பாடசாலையில் சேர்க்க மறுத்தமைக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட் டது.

மனு பிரதம நீதியரசர் கே.சிறீபவன் மற்றும் நீதியரசர் ஈவா வனசுந்தர ஆகி யோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்தப் பிள்ளையை ஏன் பாடசாலையில்சேர்க்கவில்லைஎன்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளேவிடம் பிரதம நீதியரசர் கேள்வி எழுப்பினார்.

மாணவன் கண்டி திரித்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ளான் என்றும், கல்வி அமைச்சர் உட்பட அரசு தலையிட்டு சகல பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுள்ளன என்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

மனுதாரரான தாய் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி சேனாணி தயாரத்ன, மாணவனை கண்டி திரித்துவக் கல்லூரியில் சேர்த்த பின்னரே அரசு இது பற்றி கவனம் செலுத்தியது என்றும், அதுவரை எந்த அரச பாடசாலையிலும் குறித்த மாணவனைச் சேர்த்துக் கொள்ளவில்லை எனவும் கூறினார்.

எயிட்ஸ் தொற்று ஏற்பட்டவருக்கு கூட அநீதி ஏற்படக் கூடாது எனவும், அரசமைப்புச் சட்டத்தின் 27(2) ஏ சரத்தின் கீழ் அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வியை கற்பது அடிப்படை மனித உரிமை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தற்போது பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதுடன் மனுதாரர் கோரிய நிவாரணமும் வழங்கப்பட்டுள்ளதால், விசாரணையை முடித்துக் கொள்வது என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. எனினும் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால், மனுதாரர் மீண்டும் மனுவொன்றின்மூலம்வழக்குத்தொடர முடியும் எனவும் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ற–ஐ–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## குற்றச்செயல்களுக்கு உதவும் மின்வெட்டு நீங்குவது எப்போது..?

குற்றச் செயல்கள் குறித்து பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு கிடைத்தால் மட்டுமே, அவை குறித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்ற நடைமுறையைக் கைவிடுங்கள். நாளாந்தம் குற்றச் செயல்கள் குறித்துப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியான அதே நாளிலேயே-அன்று பத்து மணிக்கு முன்னரே-உரிய விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பியுங்கள்--

மேற்கண்ட அறிவுறுத்தலை யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், நேற்றுமுன்தினம் பொலிஸாருக்கு விடுத்தார்.

நீதிமன்றத்தில் திங்களன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட, பட்டப்பகலில் நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவம் ஒன்று குறித்த விசாரணையின் போதே--

அதனோடு தொடர்புபட்ட அனைவரையும் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அத்தோடு-

நீதிமன்றங்களுக்கும், நீதிபதிகளுக்கும், பொலிஸாருக்கும் சவால் விடும் வகையில் செயற்படும் வாள்வெட்டுக் குழுக்கள், துஷ்டர்கள் (ரவுடிகள்) அனைவரையும் உடனுக்கு உடன் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துங்கள். அவர்களைப் பிணையில் விடமுடியாத விதத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வாள்வெட்டு, போதைப் பொருள் கடத்தல், காவாலித்தனம் உள்ளிட்ட, எத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுவோராக இருப்பினும், அவர்களில் எவரும் தப்பித்துப் போகாதவாறு அனைவரையும் கைது செய்யுமாறும் உத்தரவிட்டார் மேல்நீதிமன்ற நீதிபதி.

அத்தோடு, குடாநாட்டில் குற்றச் செயல்கள் எழுபத்தைந்து சதவீதம் கட்டுப்பாட்டுக்குள் வந்தாயிற்று. ஆயினும் இருபத்தைந்து சதவீதம் தொடர்கின்றன என்றும் அவர் விலாவாரியாக விவரித்தார்.

ஆகப்பிந்திய கொள்ளைச் சம்பவமாக, மல்லாகத்தில் இரவு நேரத்தில், அதிகாலை பன்னிரண்டரை மணியளவில் எட்டுப்பேர் கொண்ட கோஷ்டியினால் பதினாறரைப் பவுண் நகைகள் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது. எமது லட்சக் கணக்கான வாசகர்கள் அதனை அறிந்திருப்பர்.

கொள்ளைச் சம்பவங்கள் குறித்து தாமதம் செய்யாது பாதிப்புற்றோர் பொலிஸாருக்கு உடனுக்குடன் தகவல் தெரிவிப்பதும்-

சட்டம், ஒழுங்கைப் பேணுவதையே தமது பிரதான தொழிலாகக் கொண்ட பொலிஸார், பாதிப்புற்றவர்களுக்கு உதவும் வகையில் உடனுக்குடன் காலதாமதம் செய்யாது கொள்ளையர்களைக் கண்டறிந்து, உகந்த நடவடிக்கை மேற்கொள்ள உதவும் வகையிலும் செயற்படுவது அத்தியாவசியம்.

கொள்ளையர்களுக்குச் சாதகமான முறையில் அடிக்கடி மின்வெட்டு இடம்பெறுவதைத் தடுக்கும் பெரும் பொறுப்பு, மின்சார சபைக்கும், அதன் அதிகாரிகளுக்கும், அரசுக்கும் உண்டு. அடிக்கடி நிகழும் மின்தடையும், திருடர்களுக்கு முழு அளவில் உதவுகிறது என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதே!

மின்வெட்டுக்கும், கொள்ளையர்களுக்கும் உள்ளூர உறவு உண்டோ என்ற சந்தேகம் பாவனையாளர்கள் மனதில் தோன்றுவதையும் தவிர்க்க இயலாது.

மின்சாரம் இரவில் திடீரெனத் தடைப்பட்டு விடுமா, எப்போது இருள் சூழும், அதன் துணை கொண்டு கொள்ளையர்கள், "குடாநாட்டின் பிரசைகளை" எவ்வாறு நிர்க்கதிக்குள் வீழ்த்தித் தமது தொழிலில் மேலோங்குவார்கள் என்ற சூத்திரத்துக்கு (Formula) எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பதனையே அனைவரும் ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்...

# ஐ.நாவில் எதிரொலிக்கப் போகும் பிரபாகரனின் சாவு

எம்.ஐ.முபாறக்

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து மகிந்த தொடர்ச்சியான தலையிடியைச் சந்திக்கத் தொடங்கியுள்ளார். அவரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் இடம்பெற்றுவரும் விசாரணைகளுக்காக அவர் விசாரணை அலுவலகங்களுக்கு ஏறி இறங்குகின்றார். அவர் மாத்திரமன்றி அவரது ஒட்டுமொத்தக் குடும்பமும் இந்தத் தலையிடிக்குள் சிக்கி இருக்கின்றது. சி.எஸ்.என்.தொலைக் காட்சியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்,மோசடிகளுக்காக மகிந்தவின் இரண்டாவது மகன் யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டு 43 நாள்கள் வெலிக்கடைச்சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். நேற்றுக் கடும் நிபந்தனைகளுடன் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். வாழ்வின் எழுச்சித் திட்டத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல்,மோசடிகள் தொடர்பில் மகிந்தவின் சகோதரர் பஸிலும் விசாரிக்கப்பட்டு வருகின்றார். அதேபோல், வசீம் தாஜுதீனின் படுகொலை தொடர்பில் மகிந்தவின் மூத்த மகன் நாமல் ராஜபக்சவும் கைது செய்யப்படும் வாய்ப்புகள் நிறையவே உள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அவன் கார்ட் மற்றும் ரத்ன லங்கா ஊழல் தொடர்பில் மகிந்தவின் மற்றொரு சகோதரரான கோத்தபாயவும் விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

> பிரபாகரனுக்கு நடந்தது என்ன? அவர் போரின்போது கொல்லப்பட்டாரா அல்லது படையினரிடம் சரணடைந்த போது கொல்லப்பட்டாரா? அல்லது உயிருடன்தான் இருக்கின்றாரா? போன்ற பல கேள்விகள் இப்போது எழத் தொடங்கியுள்ளன.

இவ்வாறு மகிந்தவின் ஒட்டுமொத்தக் குடும்பமும் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றது.

இதனால் மகிந்த பெரும் தலையிடியை எதிர்கொண்டு வருகின்றார்.

இலங்கையின் அரசியல் அரங்கில் இடம்பெற்று வருகின்ற நிகழ்வுகளைப் பார்த்தால் அந்தத் தலையிடியும் மன அழுத்தமும் மேலும் அதிகரிக்குமே தவிர குறையாது என்றே தெரிகின்றது.

### பிரபாகரனின் மர்மமான சாவு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் சாவு தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்றில் தெரிவித்துள்ள தகவல்கள் தான் இன்று மகிந்தவின் தலையிடி அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கின்றது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி போர் முடிவுற்றதாக ஜனாதிபதி மகிந்த அறிவித்தபோது, பிரபாகரன் உயிருடன்தான் இருந்தார் என்று பொன்சேகா தெரிவித்துள்ள தகவல் இன்று சர்வதேசம் வரை அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.


பிரபாகரனுக்கு நடந்தது என்ன? அவர் போரின்போது கொல்லப்பட்டாரா அல்லது படையினரிடம் சரணடைந்தபோது கொல்லப்பட்டாரா? அல்லது உயிருடன்தான் இருக்கின்றாரா? போன்ற பல கேள்விகள் இப்போது எழத் தொடங்கியுள்ளன. பிரபாகரனின் சாவு தொடர்பான இவ்வாறான கேள்விகள் 2009 இற்குப் பிறகு எழுப்பப்பட்டு ஓய்ந்துபோயின. ஆனால், பொன்சேகாவின் அண்மைய தகவலின் அடிப்படையில் மீண்டும் இந்தக் கேள்விகள் எழுப்பப்படு கின்றன.

அது மாத்திரமன்றி, புலிகளின் ஏனைய தலைவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பிலும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இறுதிப் போரில் வெள்ளைக் கொடி ஏந்தியவாறு படையினரிடம் சரணடைந்த அவர்கள் இலங்கைப் படையினரால் சுட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





டுக் கொல்லப்பட்டனர் என்று நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வரும் இந்தக் குற்றச்சாட்டு இப்போது வலுவடையத் தொடங்கியுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

பிரபாகரனின் சாவு தொடர்பான விவகாரம் பொன்சேகாவின் கூற்றைத் தொடர்ந்து உள்நாட்டிலும்-சர்வதேசத்திலும் பலமாக எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது.

**தமிழக அரசியல் கைதிகளுக்கு அதிக எதிர்பார்ப்பு**

குறிப்பாக, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து அரசியல் செய்யும் தமிழகக் கட்சிகளுக்கு இது பெரும் துருப்புச்சீட்டாக மாறியுள்ளது. இது தமிழக சட்டமன்றத் தேர்தல் காலம் என்பதால் அவர்களுக்கு தக்க சந்தர்ப்பத்தில் இந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அதிலும், இலங்கைத்தமிழர் விவகாரத்தில் அதிகம் குரல் கொடுத்து வருகின்ற வைகோ, சீமான், பழ.நெடுமாறன், திருமாவளவன் போன்ற தமிழக அரசியல் வாதிகள் இந்த விவகாரத்தை எவ்வாறு பயன்படுத்துவார்கள் என்பதைச் சொல்லத் தேவை இல்லை.

மறுபுறம், தமிழின அழிப்புக்குக் காரணமான மகிந்தவைப் பழிவாங்கியே தீர வேண்டும் என்று காத்துக் கிடக்கின்ற புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கு இது பெரும் வரப்பிரசாதமாகும். பிரபாகரனின் சாவு ஒரு போர்க்குற்றம் என்ற அடிப்படையில் இந்த விவகாரத்தை அவர்கள் கையாளக்கூடும்.

அது மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர்களுடன் நல்லுறவைப் பேணுகின்ற - மகிந்தவுக்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ள மேற்கு நாடுகள் பலவும் இந்த விவகாரத்தை போர்க்குற்றம் என்ற அடிப்படையில் மகிந்தவுக்கு எதிராகப் பயன்படுத்துவர்.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் 31ஆவது கூட்டத் தொடர் இப்போது இடம்பெற்றுக் கொண்டிருப்பதால், பிரபாகரனின் சாவு தொடர்பான விவகாரத்தை அங்கு எதிரொலிக்க வைப்பதற்கு மகிந்தவுக்கு எதிரான மேற்படி சக்திகள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன என்று அறியமுடிகின்றது. பிரபாகரனின் சாவு தொடர்பான விவ காரத்தை மிகப் பெரிய மனித உரிமை மீறல், போர்க் குற்றம் போன்ற தலைப் புகளின் கீழ் அங்கு எழுப்புவதற்கு புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள், தமிழக அர சியல் கட்சிகள்மற்றும்மேற்குநாடுகள்ஒன்றிணைந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

> ஐ.நா. மனித உரிமை பேரவையின் 31 ஆவது கூட்டத் தொடர் இப்போது இடம்பெற்றுக் கொண்டிருப்பதால் பிரபாகரனின் சாவு தொடர்பான விவகாரத்தை அங்கு எதிரொலிக்க வைப்பதற்கு மகிந்தவுக்கு எதிரான மேற்படி சக்திகள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன என்று அறியமுடிகின்றது.

**தலையிடியைச் சந்திக்கும் மகிந்த**

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து உள்நாட்டில் ஊழல், மோசடி விசாரணை என்ற தலையிடியைச் சந்தித்து வரும் மகிந்தவும் அவரது சகோதரர் கோத்தபாயவுமே இனி சர்வதேச மட்டத்திலும் தலையிடிகளை எதிர்கொள்ளப் போகின்றார்கள். பிரபாகரனின் சாவு தொடர்பான இந்த விவகாரத்தோடு மாத்திரம் இந்தப் பிரச்சினை முடிந்துவிடும் என்று சொல்ல முடியாது. போர் தொடர்பான பல இரகசியங்களை பொன்சேகா கட்டம் கட்டமாக வெளியிடுவார் என நம்பப்படுகின்றது..

மகிந்தவின் அரசியல் செல்வாக்கைப் பெரும்பாலும் பூச்சிய நிலைக்குக் கொண்டு வரும் நோக்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும்-ஜனாதிபதி மைத்திரிபாலவும் முன்னெடுக்கின்ற இவ்வாறான இராஜதந்திர நகர்வுகளை மகிந்த எவ்வாறு முறியடிக்கப் போகின்றார் எனப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஆகவே, பொன்சேகாவால் மகிந்தவுக்கு எதிராகப் போடப்பட்டுள்ள முதல் குண்டு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் எவ்வாறு வெடிக்கப்போகின்றது என அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

## சிறார்களுக்குத் தண்டனை தேவையா?

குளியாப்பிட்டியில் 9 வயது நிரம்பிய பாலகனுக்கு எயிட்ஸ் நோய் என்ற பொய்யான வதந்தியால் பெற்றோரால் அந்தச் சிறுவனைப் பள்ளிக்கூடம் சேர்ப்பதில் தடை ஏற்பட்டதை பத்திரிகை மூலமாக அறிய முடிந்தது. தந்தையை இழந்து தாயுடன் வாழும் அந்தப் பிஞ்சு உள்ளத்தின் வலியை எவர் உணர்வார்? உரிமை மறுக்கப்படுவதாலும், தனிமைப்படுத்தப்படுவதாலும் அந்தக் குழந்தையின் எதிர்காலம் என்ன ஆவது? உடைந்த உள்ளங்கள், ஏழைகள் எமது நாட்டில் ஏராளம். உதவி செய்ய மனம் இல்லையேல் உபத்திரவமாவது செய்யாதிருப்போம். சந்தேகம் தீராத வியாதி. அது எயிட்ஸை விடப் பயங்கரமானது. எமது நல்லாட்சியில் நாடாளுமன்ற உறுப்பினரும் நடிகருமான ரஞ்சன் ராமநாயக்க அந்தச் சிறுவனின் இரத்தத்தைத் தனது உடலில் செலுத்தி வீண் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வந்துள்ளார். மேன்மை தங்கிய ஜனாதிபதியும் பல உதவிகள் செய்து, குடியிருக்க வீடும் வழங்கி, அந்தச் சிறுவனது கல்விக்கு உதவுவதும் நல்லாட்சியின் அறிகுறியாகும். கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேறட்டும். அநாதரவான உள்ளங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம். விலைமதிப்பற்ற அன்பை அறுவடை செய்து சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட இதயங்களை மகிழ்விப்போம். மதிப்போம். ஏனைய எமது நாட்டுத் தலைவர்களும் இது போன்ற நற்செயல்கள் மூலம் முரண்படாமல் முன்னுதாரண மாய்ச் செயற்பட்டால் தமிழனும் வெற்றிக்கொடி நாட்டுவான்.

**உதயன் வாசகி, கல்வயல்.**

## ஓமந்தை மத்திய கல்லூரி மாணவர் விடுதியின் அலங்கோல நிலை பாரீர்

இந்த மாணவர் விடுதி அதிபர், ஆசிரியர்கள், பொது மக்களது அயராத முயற்சியால் உருவாக்கப்பட்டமை சகலரும் அறிந்ததே. ஆனால் இப்போது மேல் மாடிக் கட்டடத்தின் அலங்கோல நிலை எமக்கு வேதனையைத் தருகிறது. கூரை ஓடுகள், லெவல் சீற்றுக்கள் உடைக்கப்பட்டு உள்ளன. புறாக்கள் நாசம் செய்கின்றன. புறா பிடிப்பவர்கள், மதுபானம் களவாக அருந்துபவர்கள், கலாசார சீரழிவுகாரர்கள் எனப் பல தரப்பினரால் இந்தக் கட்டடம் உபயோகப்படுத்தப்படுகிறது.

மத்திய கல்லூரிக்குக் காவலாளியும் இருக்கிறார். இந்தக் கட்டடம் பாடசாலை வளாகத்திலிருந்து சிறு தொலைவில் அமைக்கப்பட்டுள்ளதால், அவரால் அதனைக் கவனிப்பதற்கு இயலாமல் இருக்கலாம். கட்டடத்தின் கீழ்ப் பகுதி ஆரம்பப் பாடசாலையாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தயவு செய்து இந்தக் கட்டடத்தைப் பாதுகாப்பதற்கு அக்கறை கொள்ள வேண்டுமென கிழக்கு மூலை வடக்கு வாழ் பொதுமக்கள் சார்பில் பணிவன்புடனும், தாழ்மையுடனும் வேண்டிக்கொள்கிறேன். உடன்நடவடிக்கை எடுக்கப்படுமா?

**பொதுமக்கள் சார்பாக**
**த.மகேஸ்வரன்.**

## செவ்வாய் தோசம் ஏன்?

சோதிடத்தில் அதீத நம்பிக்கை வைப்பது எம்மவரின் பழக்கம். செவ்வாய் தோசமும் அப்படியே. பல இளம் ஆண்களையும், பெண்களையும் இந்தச் செவ்வாய் தோசம் வாட்டி வதைக்கிறது. இதில் எந்த உண்மையும் இல்லை. இன்றைய விஞ்ஞானிகள், கிரகங்களைக் கண்டு பிடிப்பதில் ஆர்வம் காட்டிவரும் நேரத்தில், எம்மவர் செவ்வாய் தோசம் பார்த்து இளம் சந்ததியினரின் திருமண வாழ்க்கையை அநியாயப்படுத்துவது ஏன்? எத்தனையோ பேர் இன்று தோசம் பார்த்து திருமண வயதைத் தாண்டி தமது வாழ்க்கையைத் தொலைத்து நிற்கின்றனர். பெற்றோர்கள் முற்போக்கு சிந்தனையுடன் செயற்பட்டு அவர்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்ட வேண்டும். சந்திரனில் காலடிவைத்த 1967 ஆம் ஆண்டு முதல் இன்று வரை விஞ்ஞானிகளின் சாதனையை சிந்தித்து செயற்பட வேண்டும். நல்ல காலம் செவ்வாய் தோசத்துடன் விட்டு வைத்தார்கள். சனி, புதன், வியாழன் இன்னும் பல கிரகங்களின் தோசமும் பார்த்ததால். எம்மவர்கள் திருமணமாகமலே இருந்திருப்பார்கள்.

**அன்பரசன், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது
## பெயர்ச்சிப் பலன்கள்



*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் கன்னி ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்களின் நேற்றைய தொடர்ச்சி )*

## கன்னி

**ராகு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்**
கேதுவின் மகம் நட்சத்திரத்தில் 16.11.2016 முதல் 25.7.2017 வரை ராகுபகவான் செல்வதால் இந்தக்காலகட்டத்தில் மனஅழுத்தம், சின்ன சின்ன இழப்புகள், விபத்துகள் ஏற்படக்கூடும். குடும்பத்தினருடன் இணக்கமாகச் செல்லவும். உத்தியோகத்தில் அனுசரித்துப் போவது நல்லது. பழைய கடனை நினைத்துக் கலங்குவீர்கள்.

**கன்னிப் பெண்களே!**
காதலும் இனிக்கும், கல்வியும் இனிக்கும். பெற்றோரின் அரவணைப்பு அதிகரிக்கும். கெட்ட நண்பர்களிடமிருந்து விடுபடுவீர் கள். கல்வித் தகுதிக்கேற்ப நல்ல வேலை கிடைக்கும். மொழி அறிவுத்திறனை வளர்த்துக்கொள்வீர்கள். அயல் நாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும்.

**மாணவ-மாணவிகளே!**
நினைவாற்றல் அதிகரிக்கும். போட்டி, பொறாமையுடன் பழகிய சக மாணவர்களில் சிலர் வலிய வந்து பேசுவார்கள். ஆசிரியர்கள் பக்கபலமாக இருப்பார்கள். பெற்றோரின் ஒத்துழைப்பும் அதிகரிக்கும். விரும்பிய பாடநெறியில் எதிர்பார்த்த கல்வி நிறுவனத் தில் சேருவீர்கள்.

**கலைத்துறையினரே!**
யதார்த்தமான படைப்புகளால் புகழடைவீர்கள். பொது நிகழ்ச்சிகளில் தலைமை தாங்கும் அளவுக்கு பிரபலமாவீர்கள். மூத்த கலைஞர்களை விட அறிமுக கலைஞர்களால் ஆதாயமடைவீர்கள்.

**விவசாயிகளே!**
விளைச்சல் இரட்டிப்பாகும். பழைய கடனில் ஒரு பகுதியை மீளச் செலுத்துவீர்கள். வேர்க்கடலை, நெல், சூரியகாந்தி மற்றும் உளுந்து வகைகளால் இலாபமடைவீர்கள். ஊரில் மரியாதைகூடும்.

**வியாபாரிகளே!**
குறைந்த இலாபம் வைத்து விற்பதன்மூலம் வாடிக்கையாளர்கள் அதிகமாவார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். வேலையாள்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். சந்தையில் உங்கள் நிறுவனத்தின் மதிப்புக்கூடும். வர்த்தக சங்கத் தில் பதவி கிடைக்கும். புதிய கிளைகள் தொடங்குவீர்கள். கடையை நவீனமாக்குவீர்கள். வெளிநாட்டுத்தொடர்புடைய நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்து கொள்வீர்கள். பங்குதாரர்கள் உங்கள் கருத்துகளை முதலில் மறுத்தாலும் பிறகு ஏற்றுக் கொள்வார்கள்.

**உத்தியோகத்தர்களே!**
உங்கள் கை ஓங்கும். அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். சில கூடுதல் சிறப்புப் பொறுப்புகளை உங்களிடம் ஒப்படைப்பார்கள். சக ஊழியர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். சம்பளப் பாக்கியும் கைக்கு வரும். சிலர் அதிக சம்பளத்துடன் புது வேலையில் சென்று அமருவீர்கள். பதவி உயர்வுக்காகத் தேர்வெழுதி காத்திருந்தவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**கேதுவின் பலன்கள்:**
இதுவரை உங்களின் ராசிக்கு ஏழாவது வீட்டில் அமர்ந்துகொண்டு கணவன்–மனைவிக்குள் பிரிவையும், திறமைக்கு அங்கீகாரமின்மையையும் ஏற்படுத்திய கேது பகவான் இப்போது உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் அடியெடுத்து வைப்பதால் எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கையின் சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள். சவால்களில் வெற்றி பெறுவீர்கள். வருமானம் உயரும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். அரச காரியங்கள் விரைந்து முடியும். பணப்பற்றாக் குறையால் பாதியில் நின்ற வீட்டை கட்டி முடித்து கிருகப் பிரவேசம் செய்வீர்கள். கட்டும் பணியைத் தொடங்குவீர்கள்.

**கேது பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்கள் சுக–சப்தமாதிபதியான குருவின் பூரட்டாதி நட்சத்திரத்தில் 08.01.2016 முதல் 12.07.2016 வரை கேதுபகவான் செல்வதால், நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். அறிஞர்களின் நட்பால் தெளிவடைவீர்கள். மனைவி வழியில் செல்வாக்கு உயரும். மனைவிக்கு வேலை கிடைக்கும். தாய்வழிச் சொத்து கைக்கு வரும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் குறையும். ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் 13.07.2016 முதல் 20.03.2017 வரை கேதுபகவான் செல்வதால் காய்ச்சல், மூச்சுத் திணறல், படபடப்பு வந்து செல்லும். எவரையும் எவருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம்.

(தொடரும்)

---

# ஒப்பீட்டுக் கல்வி அணுகுமுறையில்
## இலங்கையின் கல்விப் பிரச்சினைகள்

கலாநிதி பா.தனபாலன்

*(குறித்த தலையங்கத்தில் நேற்றை உதயனின் 17ஆம் பக்கத்தில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி*

**கல்வியின் பொருத்தப்பாடு**
கடந்த இரு தசாப்தங்களாக கொள்கை ஆவணங்களும், பல்வேறு ஆணைக் குழுக்களின் அறிக்கைகளும் கல்வியின் பொருத்தப்பாடு என்ற விடயத்தை ஒரு பிரச்சினையாகச் சுட்டுகின்றன. கல்வி முறைமை எத்தகைய நோக்கங்களையும் இலக்குகளையும் அடைய எத்தனிக்கிறது என்பதற்கேற்பவே பொருத்தப்பாடு, பொருத்தப்பாடின்மையைத் தீர்மானிக்க வேண்டும். பல நாடுகளும் வரலாற்றின் நீண்ட காலப்பகுதியில் விருத்தி செய்யப்பட்ட அறிவுத் தொகுதியை இளந் தலைமுறையினரிடம் கையளிக்கவும், நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் இடம் பெறுகின்ற சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் இளையோரைத் தயார்ப்படுத்தவும் விரும்புகின்றன.
கல்வியின் பொருத்தப்பாட்டை மேம்படுத்துவதற்குக் கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரதான அம்சம், கல்வியின் பொருளாதார அம்சமாகும். கல்விக்கும் தொழில் பெறுதலுக்குமான பொருத்தப்பாடின்மை கல்வியின் குறைபாடே தவிர பொருளாதாரக் குறைபாடு அல்ல என ஒப்பீட்டு ஆய்வுகள் எடுத்தியம்பு கின்றன. வேலைகொள்வோர் கல்வியிடமிருந்து பலவற்றை எதிர்பார்க்கின்றனர். தொழில் நுட்பத் தொடர்பாடல்; மொழித்திறன்கள், ஆளுமை, இசைந்து கொடுக்கும் திறன், தீர்மானம் எடுக்கும் ஆற்றல், ஒழுக்கத் திறன்கள் ஆகியவை பாடசாலை, பல்கலைக் கல்வி பெற்று வெளியேறும் மாண வர்களிடம் காணப்படாமை கல்வியின் பொருத்தப்பாடின்மையின் பெரும் குறைபாடாக இலங்கையில் காணப்படுகின்றது.


இலங்கைக் கல்வி முறையில் நெடுங்காலமாக நிலவி வந்த பிரச்சினைகளைக் குறிப்பதாகவே தற்போதைய முன்மொழிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை ஒப்பீட்டு ஆய்வுப்பேறுகள் மூலம் அறிந்து கொள்ளலாம். பிரச்சினைகளும், முரண்பாடுகளும் எப்படிப் புதியனவாக முற்றிலும் அமையவில்லையோ, அப்படியே விதந்துரைக்கப்பட்ட பரிகாரங்களும் இலங்கைக் கல்வியில் மாணவர்களுக்கும் ஓரளவுக்குப் பரீட்சயமானவையே. இந்த இடத்தில் எத்தகைய கல்விச் சீர்திருத்தங்களுக்கு வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான வளங்கள் போதியளவு கிடைத்தல் பற்றிய வினாக்களை எழுப்புதல் பொருத்தமானதே. கல்விக்கென கூடுதல் நிதிவளங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளனவா, ஆசிரிய அர்ப்பணிப்பும் ஊக்குவிப்பும் ஏற்படுத்தப் படுமா? பயனுறுதிவாய்ந்த கல்வி முகாமைத்துவமும் மேற்பார்வையும் உறுதி செய்யப்படுமா? போன்ற சில எழு வினாக்களைக் குறிப்பிடலாம்.

**தீர்வுகளுக்கான வழிமுறைகள்:**
தேசியக் கொள்கைகளை ஆக்குவோர் இலங்கை வறிய, குறைந்த அபிவிருத்தியைக் கொண்ட நாடு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சர்வதேச மட்டத்துக்கு உயர்த்தும் நோக்குடன் எமது பிரமாண்டமான கல்வி அமைப்புக்குத் தேவையான பொருள்சார்ந்த , தகவல் தொழில்நுட்ப கல்வி வளங்களை இறக்குமதி செய்யப் போதுமான பணம் இல்லை. இலங்கையைப் பொறுத்தவரை பொருத்தமான, நிஜமான தரக்கட்டுப்பாடுகள், அளவீடுகள், என்பவற்றை இனம் கண்டு அதன் பிரகாரம் கிரமமாகவும், படிப்படியாகவும் அபிவிருத்தியடையும் ஒரு தன்னிறைவான முயற்சியாக கல்வி அபிவிருத்தியை இனம் கண்டு கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் சார்பாக, அவர்களது அபிவிருத்தி சார்பான அதிபர்கள் சார்பாக பலத்த விமர்சனங்கள் காணப்படுகின்றன. இவர்கள் சார்பாக குறைபாடுகளை ஒரே நாளில் அல்லது குறுகிய காலத்தில் தீர்வு கண்டு பூர்த்தி செய்ய முடியாது. அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளும்வரை ஆசிரியர்கள், அதிபர்கள், பணிகளைக் குறைவாக மதிப்பிடவோ, இகழவோ இட மளிக்காதிருக்க இந்த நாட்டின் அனைத்து ஆசிரியர்களும், அதிபர்களும் திடசங்கற்பம் கொள்ள வேண்டும். சில கல்விப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை அவற்றுக்கான நிரந்தர தீர்வு ஒரு போதும் கிடைக்க மாட்டாது. அவற்றுக்கான தீர்வு அர்ப்பணிப்பு, திடசங்கற்பம், துணிவு, தியாகம் என் பவற்றில் தான் உண்டு. ஆசிரியர், அதிபர்களை வினைத்திறனற்ற பொருத்த மில்லாத விடயங்களை விடுத்து உரிய முகாமைத்துவ அனுசரணையோடு மரியாதையாக கூடுதலான நேரம் மாணவர்களுடன் ஈடுபடவைக்கும் செயன்முறைகள், நடைமுறைகளை நடைமுறைப்படுத்தல் பாடசாலைகளை மையமாகக் கொண்டு தொழில், தகவல் தொழில் நுட்ப, மனிதவள ஆளுமையை ஏற்படுத்தும் விரைவான செயற்றிட்டங்களை அரச கொள்கையாக்கங்கள் நடைமுறைகளினூடாக ஏற்படுத்த வேண்டும். கல்வித்துறை சார்ந்த ஆய்வுகள் பன்முகப்படுத்தப்பட வேண்டும்.

*கட்டுரையாளர் நிபுணத்துவ ஆலோசகர், கல்வியமைச்சு, பத்திரமுல்ல.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் மறையாத மார்க்ஸ்



**மார்க்ஸின் சமூகச் சிந்தனை வித்தியாசமானது. தொலைநோக்குப் பார்வை கொண்டது. இதுவரையிலும் உருவான தத்துவங்கள் எல்லாம் உலகை விளக்குகின்றன. ஆனால், உலகை எவ்வாறு மாற்றுவது என்பதே இப்போதைய பிரச்சினை என்றார் – அவர். மார்க்ஸின் இந்த நிலைப்பாடு உலகம் முழுவதும் புரட்சிகள் ஏற்படக் காரணமாக அமைந்தது. வெறுமனே கோட்பாடுகளாக உலகின் இயக்கத்தை விஞ்ஞான பூர்வமாக விளக்குவதில் எந்தப் பயனும் இல்லை என்பதை மார்க்ஸ் நன்றாக அறிந்திருந்தார்.**

உலகின் புகழ்பெற்ற பலர் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் லண்டன் ஹைகேட் கல்லறையில்தான் மார்க்ஸும் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அது உலகம் முழுவதும் உள்ள பார்வையாளர்களால் தினமும் உயிர்த்தெழுந்து கொண்டிருக்கிறது.

21 ஆம் நூற்றாண்டில் உலகம் பல நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. இந்தச் சூழலில் மார்க்ஸ் குறித்த மீள் பார்வை முக்கியமானது. உலகின் ஏகாதிபத்திய ஒடுக்குமுறை அரசுகளுக்கு மிகப்பெரும் சவாலாக இருக்கும் கம்யூனிச கோட்பாட்டின் ஸ்தாபகரான மார்க்ஸ் 1818 மே 5ஆம் திகதி ஜெர்மனியின் ட்ரையர் நக்ரத்தில் ஒரு வழக்கறிஞரின் மகனாகப் பிறந்தார். எல்லா அப்பாக்களுக்கும் இருப்பதைப் போன்றே தனது தொழிலில் மகனும் இறங்க வேண்டும் என்ற எண்ணம் அவரது அப்பாவுக்கும் இருந்தது.

### உலகை மாற்றுவதே தேவை

மார்க்ஸின் கனவு வேறாக இருந்தது. இளமைக் காலத்திலிருந்தே ஷேக்ஸ்பியர் உள்ளிட்ட பெரும் அறிஞர்களின் எழுத்துக்களின்மீது அவருக்கு ஈர்ப்பு இருந்தது. குறிப்பாக ஷேக்ஸ்பியரின் கவிதைகள்மீது ஏற்பட்ட காதலால் கவிதைகளை எழுதிக் குவிப்பவராக மாறினார். பெர்லின் பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது தத்துவமும் அரசியல் பொருளாதாரமும் தேடுகிற அறிவுத் தேடலின் வழியாக அவரது கவிதா ஆர்வமும் விரிவடைந்தது.

19 ஆம் நூற்றாண்டில் ஜேர்மனியின் பெர்லின் நகரம் அறிவுத் தேடலைக் கொண்டதாக இருந்தது. அப்போது ஜேர்மனியில் புகழ்பெற்றிருந்த தத்துவவாதியான ஹெகல் என்பவரின் தாக்கம் பெர்லின் பல்கலைக்கழக மாணவர்களிடம் நிலைத்திருந்தது. இதற்காக இளம் கெஹலியர்கள் என்னும் தனி அணியே அந்தப் பல்கலைக்கழகத்தில் செயற்பட்டது. இவர்கள் தத்துவம், அரசியல் மற்றும் பொருளாதாரம் தொடர்பாக தங்களுக்குள் விவாதித்துக் கொண்டனர்.

படிப்பு முடிந்ததும் ஒரு பத்திரிகையின் ஆசிரியராக மார்க்ஸ் பொறுப்பேற்றார். ஆட்சியாளர்களை விமர்சித்து துணிச்சலாக எழுதினார். தத்துவத்தையும் அரசியலையும் குறித்து விமர்சித்தார். காட்டில் விறகு வெட்டி பிழைப்பு நடத்தி வந்த அப்பாவி மக்களை அரசு கைது செய்ததைக் கண்டித்து எழுதினார். இதனால் ஆட்சியாளர்களின் கோபத்தை எதிர்கொள்ள நேர்ந்தது. அரசின் அடக்குமுறையால் பத்திரிகை மூடப்பட்டது. பிறகு மார்க்ஸ் முழுநேரமும் தீவிர வாசிப்பிலும் ஆய்விலும் ஈடுபட்டார்.

மார்க்ஸின் சமூகச் சிந்தனை வித்தியாசமானது. தொலைநோக்குப் பார்வை கொண்டது. இதுவரையிலும் உருவான தத்துவங்கள் எல்லாம் உலகை விளக்குகின்றன. ஆனால், உலகை எவ்வாறு மாற்றுவது என்பதே இப்போதைய பிரச்சினை – என்றார்– அவர். மார்க்ஸின் இந்த நிலைப்பாடு உலகம் முழுவதும் புரட்சிகள் ஏற்படக் காரணமாக அமைந்தது. வெறுமனே கோட்பாடுகளாக உலகின் இயக்கத்தை விஞ்ஞானபூர்வமாக விளக்குவதில் எந்தப் பயனும் இல்லை என்பதை மார்க்ஸ் நன்றாக அறிந்திருந்தார்.

### கம்யூனிஸ்ட் அறிக்கை

மார்க்ஸின் வாழ்வில் 1844 ஓகஸ்ட் மாதத்தில் மிக முக்கியமான திருப்பு முனை ஏற்பட்டது. நட்புக்கு இலக்கணமான ஏங்கல்ஸ் மார்க்ஸ் சந்திப்பு அப்போதுதான் நிகழ்ந்தது. மார்க்ஸுக்கு இணையான மேதமை மிக்கவர் ஏங்கல்ஸ். இருவரும் இணைந்து செய்த பணிகள் ஐரோப்பிய அரசியல், தத்துவம், வரலாறு ஆகிய துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தின. ஏங்கல்ஸ் பொருளாதாரம் மற்றும் இயற்கை குறித்த ஆய்வுகளில் சிறந்தவராக இருந்தார். பல்வேறு பத்திரிகைகளில் அவர்கள் எழுதினார்கள். போராட்டங்களிலும் பங்கெடுத்தனர். அவர்களின் புகழ் ஐரோப்பா முழுவதும் பரவியது.

அன்றைய இங்கிலாந்தில் நியாயவாதிகள் சங்கம் இருந்தது. அவர்கள் மார்க்ஸையும் ஏங்கல்ஸையும் தங்கள் சங்கத்தில் இணைய வேண்டினர். அவர்கள்தான் பின்னர் தங்களின் பெயரைப் பொதுவுடைமைச் சங்கம் என மாற்றிக் கொண்டனர். தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்றும் அவர்கள் அழைத்துக் கொண்டனர். இந்த அமைப்பின் தாக்கம் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. இந்த அமைப்புக்காக மார்க்ஸும், ஏங்கல்ஸும் இணைந்து கம்யூனிஸ்ட் அறிக்கை எனும் நூலை வெளியிட்டனர். இதுவரை நடந்த போராட்டங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறே என்ற அறிவிப்போடு அந்த நூல் வெளியானது.

### மறையாத மார்க்ஸ்

மூலதனம் எனும் பெயரில் வெளியான புத்தகத் தொகுதியின் முதல்பாகத்தை மார்க்ஸ் வெளியிட்டார். மார்க்ஸ் அதில் வெளிப்படுத்திய உலகை மாற்றும் கனவை, 1917இல் லெனின் தலைமையில் ரஷ்யாவில் நடந்த புரட்சி நிஜமாக்கியது. அதனைத் தொடர்ந்து உலகின் பல பகுதிகளில் புரட்சிகள் நடைபெற்றன. அதன் மூலம் ஏகாதிபத்தியம், சோஷலிஸம், மூன்றாம் உலகம் என்று மூன்று பிரிவாக உலக நாடுகள் மாறின. ஏகாதிபத்திய அரசுகளின் கொடூர மனம் காரணமாக கடந்த நூற்றாண்டில் பெரும் மனித அழிவுகளும் நடந்தேறின.

எல்லாத் தத்துவக் கோட்பாடுகளும் ஒரு கட்டத்தில் தேக்கநிலையைச் சந்திப்பது போன்று மார்க்ஸின் கோட்பாடுகளும் இந்த நூற்றாண்டின் இறுதியில் நெருக்கடியைச் சந்தித்தன. ரஷ்யா உட்பட பல சோஷலிஸ நாடுகளின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. மார்க்ஸின் தத்துவம் சுரண்டலை எதிர்த்த மனித குல விடுதலையை முன்வைத்த பயணமாக இருந்தாலும், அரசுகள் அதனை நடைமுறைப்படுத்துவதில் தோல்வி அடைந்தன. அதுதான் இன்றைய முதலாளித்துவம் உலக அளவில் நிலைத்து நிற்கக் காரணம்.

19 ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த ஆளுமையான மார்க்ஸின் வாழ்நாளில் இரண்டு சம்பவங்கள் அவரைப் பெரிதும் பாதித்தன. முதலாவது அவரது மனைவி ஜென்னியின் மரணம். இரண்டாவது அவரது மூத்த மகளின் மரணம். நிலைகுலைந்திருந்த மார்க்ஸ் 1883 மார்ச் 14 ஆம் திகதி சாய்வு நாற்காலியில் அமர்ந்தவாறே தனது சிந்தனையை நிரந்தரமாக நிறுத்திக்கொண்டார்.

அவரது இரங்கல் கூட்டத்தில் ஏங்கல்ஸ் ஆற்றிய உரையில் மனிதகுலம் இருக்கும் வரை மார்க்சின் பெயர் நிலைத்து நிற்கும் என்றார். ஏங்கல்ஸின் வார்த்தைகள் உண்மையானவை என்பதை இன்றைய உலகம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரியாவில் 80 வீதமானோருக்கு ஐ.நாவின் உதவிகள் சென்றடைவு

தமஸ்கு, மார்ச் 16
சிரியாவில் இயங்கும் ஐ.நாவின் அத்தியாவசிய உதவி வழங்கும் குழு மக்களுக்கான உதவிகள் வழங்குவதில் 80 சதவீதத்தை எட்டியுள்ளதாக அவதானிகளின் அறிக்கை தெரிவித்துள்ளது.
இதுவரை 500 ஆயிரம் மக்களுக்கே ஐ.நா. உதவிகள் சென்றடையவில்லை. மேலும் கிராமப்புறங்கள், தடை செய்யப்பட்ட பகுதிகளில் 4.6 மில்லியன் மக்களுக்கு உதவிகள் சென்றடையவில்லை என ஐ.நாவின் மனிதாபிமான உதவிகள் வழங்கும் குழுத் தலைவர் ஸ்ரீபன் ஓ பிரைன் தெரிவித்துள்ளார்.
அலப்போ நகரில் இடம்பெற்ற போரினால் அந்தப் பகுதியினரின் தேவைகளுக்கு ஏற்ப உதவிகள் சென்று சேரவில்லை. இதனைத் தவிர 2 மில்லியன் மக்கள் ஐ.எஸ். அமைப்பின் நிர்வாகத்தின் கீழ் வாழ்ந்து வருகின்றனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை நாடு முழுவதும் 6 மில்லியன் மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் மருந்துகள், மருத்துவ உபகரணப் பொருள்கள் வழங்குவது இன்னமும் தடை செய்யப்பட்டுள்ளது.
கடந்த 5 வருடங்களாக இடம்பெற்ற போரில் 250 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதுடன், 4.8 மில்லியன் சிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.
இந்த நிலையில் தற்போதைய உதவிகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன. சர்வதேச அகதிகள் அபிவிருத்தி நிறுவனத்தினர் சிரியாவின் நிலையில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-ரி4)

## ராணுவ ஆட்சியிலிருந்து விடுபட்டது மியன்மார்

நாம்பென், மார்ச் 16
மியன்மாரின் புதிய ஜனாதிபதியாக ஜனநாயகத்திற்கான தேசி லீக் கட்சியின் சார்பில், ஆன் சான் சூகியின் ஆதரவுடன் போட்டியிட்ட ரின் யூவ் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
657 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப் பதிவு ஆரம்பமாகியது. ஐந்து உறுப்பினர்கள் நேற்றுச் சபைக்கு சமுகமளிக்காத நிலையில், 652 உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர்.
அதில் 360 பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ரின் யூவ் வெற்றி பெற்றுள்ளார். அதேவேளை இராணுவத் தரப்பில் முன்மொழியப்பட்ட மைன்ற் சியூ 213 வாக்குகளை பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.
இதன்படி 69 வயதுடைய ரின் யூவ் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஆட்சியைப் பொறுப்பேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் கடந்த 1962 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரின் பிடியில் இருந்த மியன்மாரின் ஆட்சி அதிகாரம், ஜனநாயக ரீதியான ஆட்சிமுறையாக மாற்றமடைந்துள்ளது.

(த)


# மன்ஹற்ற
# சாம்பலாக்
## அமெரிக்காவுக்கு வடகொ

பியொங்யாங், மார்ச் 16
புதிதாக தயாரித்துள்ள வெடிகுண்டு மூலம் அமெரிக்காவின் மன்ஹற்றன் நகரை சில வினாடிகளில் சாம்பல் ஆக்கிவிடுவோம் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.
வடகொரியா கடந்த சில ஆண்டுகளாகவே ஏவுகணைச் சோதனை, அணுகுண்டு சோதனை போன்றவற்றை மேற்கொண்டு வருகிறது. இதனால் உலக நாடுகள் பெரும் அச்சத்தில் உள்ளன. வடகொரியவுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக தென் கொரியா எல்லையில் அமெரிக்கக் கூட்டுப் படையினர் மற்றும் தென்கொரிய வீரர்கள் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.
இதன் காரணமாகக் கொரிய தீபகற்பத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் வடகொரியா அமெரிக்காவுக்கு பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பாக அரச செய்தி ஊடகம் விடுத்துள்ள செய்தியில்,
வடகொரியா தயாரித்துள்ள ஹைட்ரஜன் வெடிகுண்டு சோவியத் யூனியன் தயாரித்த வெடிகுண்டை விட ஆற்றல் வாய்ந்தது. கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்குதல் நடத்தும் ஏவுகணையில் இந்த வெடிகுண்டு பொருத்தப்பட்டு நியூயோர்க்கில் உள்ள மன்ஹட்டன் நகரில் விழச்செய்தால் சில வினாடிகளில் அந்த நகரமே சாம்பல் ஆகிவிடும் என்று தெரிவித்துள்ளது.
வடகொரியத் தலைவர், அளவுக்கு அதிகமான மிகைப்படுத்திய மிரட்டலை விடுக்கிறார் என நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். வட கொரியாவில் இருந்து அமெரிக்காவுக்குச் சென்று தாக்கக் கூடிய அளவுக்கு ஏவுகணை தயாரித்திருப்பது என்பது சந்தேகத்துக்குரியது எனப் பலரும் கருத்து தெரிவித்தனர். கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற சோதனை வட கொரியாவின் 4 ஆவது அணுகுண்டுச் சோதனை ஆகும்.
பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டும் அந்த நாடு தொடர்ந்தும் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு வருவது பல்வேறு நாடுகளுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.



## சிரிய போர் நிறுத்தம்; ஒபாமா– புடின் பேச்சு

அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமாவும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் சிரியாவில் செயற்படுத்தப்பட்டுள்ள போர் நிறுத்தத்தின் பின்னரான நிலை குறித்தும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் தொலைபேசிக் கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்தியுள்ளனர் என வெள்ளை மாளிகை நேற்றுத் தகவல் வெளியிட்டது.
ரஷ்யப் படைகளில் ஒரு பகுதியினரை சிரியாவில் இருந்து வெளியேற்றுவதாக ரஷ்ய ஜனாதிபதி அறிவித்திருந்தார். இதனை அடுத்து இந்தக் கலந்துரையாடல், அங்கு நிலவும் அரசியல் பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு காணும் நோக்கில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த 6 மாத காலங்களாக ரஷ்யா, சிரியா அதிபருக்கு ஆதரவாக வான் வழித்தாக்குதலை நடத்தி வந்துள்ளது. இந்த நிலையில் இந்தக் கலந்தரையாடலின்போது, நாடு தழுவிய ரீதியில் போராளிகளுக்கும் அரசு படைகளுக்கும் போர் நிறுத்தத்தை மேற்கொள்ளவும், அயல் நாடுகளில் இதனை நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.
வெள்ளை மாளிகைத் தகவல்களின் படி, சிரியாவில் நிலவும் போர் நிறுத்த சூழல் மூலம் வன்முறைகள் குறைக்கப்பட்டிருப்பதை இருவரும் வரவேற்றுள்ளனர். ஆனால் இந்த அமைதிச் சூழலைத் தொடர்ந்து தக்கவைக்க வேண்டும் என்பது பெரும் அழுத்தமாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (த-ரி4)



அமெரிக்காவின் வட கரோலினா பகுதியில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற தொடர் வீதி விபத்தில் 21 பேர் காயமடைந்துள்ளனர். 134 வாகனங்கள் விபத்தினால் சேதமடைந்தன. ஒரே வீதியில் 9 விபத்துகள் இடம்பெற்றன. விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. விபத்துக் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெப்ர
## வெப்ப

**கடந்த 100**
**ஒப்பிடுகை**

வொஷிங்டன்,
உலகில் கடந்த 1
பிடும் போது இ
வரி மாதத்தில்தா
யுள்ளது. கடந்த
கத்தைவிட 1.1
வெப்பம் கூடுத
அமெரிக்காவின்
ஆய்வுக் கல்வி
வின் இயக்குந
வெப்பநிலை தெ
வெளியிட்டுள்ள
மேற்கண்டவா
ளது.
பெப்ரவரி மாதத்
செல்சியசால் அ
இது கடந்த 100
போது மிக அதி
பட்டுள்ளது. மே
யத்தில் ஏற்படும்
நிலை மாற்றங்க
தெரிவிக்கப்பட்
பாடுகளால் வெ
களால் பருவநி
பட்டுப் புவியில்
வும் கருதப்படு
நிலை மிகவும்
அடைந்துள்ளது
எச்சரிக்கப்பட்டு

# ன் நகரை
# க்குவோம்

## ாரியா மிரட்டல்



முன்னதாக வடகொரியாவின் நட்பு நாடுகளில் ஒன்றான ரஷ்யா, வீண்பதற்றத்தை ஏற்படுத்த வேண்டாம் என்றும் இது போன்ற நடவடிக்கைகளைத் தவிர்க்கும்படியும் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-ரி4)



# பாகிஸ்தானில் கடும் மழை
## 50 பேர் சாவு; 80 பேர் காயம்

இஸ்லாமபாத், மார்ச் 16

பாகிஸ்தானில் பெய்து வரும் கடும் மழை காரணமாக இதுவரை 50 பேர் உயிரிழந்தனர். 80 பேர் காயமடைந்தனர் என நேற்று முன்தினம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து பெய்யும் அடை மழையால் விபத்துக்களும், சேதங்களும் ஏற்பட்டுள்ளன. பலுச்சிஸ்தானில் கடந்த வியாழக்கிழமை மழை பெய்ய ஆரம்பித்தது. பின்னர் நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கும் பரவியது. தேசிய இடர் முகாமைத்துவ அறிக்கையின்படி பல மாநிலங்களில் மக்கள் உயிரிழந்ததுடன் 80 பேர் மழையினால் விபத்துக்களுக்கும் உள்ளாகியுள்ளனர். 75 வீடுகள் மழையில் அடித்துச் செல்லப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

தெற்கு பஞ்சாப் பிரதேசத்தில் கோதுமைச் செய்கை நீரில் மூழ்கியுள்ளது. தொடர்ந்து கன மழை பெய்வதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், தொடர்ந்தும் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வுமையம் தகவல் தெரிவித்துள்ளது. (த-ரி4)

# ப்ரவரியில்
# ப்பம் உச்சம்

### 100 வருடங்களுடன்
### றிகையில்

ங்டன், மார்ச் 16

கடந்த 100 ஆண்டுகளுடன் ஒப்
ாது இந்த வருடம் கடந்த பெப்ர
த்தில்தான் கடும் வெயில் தாக்கி
கடந்த ஜனவரி மாதத்தில் வழக்
விட 1.14 பாகை செல்சியஸ்
கூடுதலாக இருந்தது.

காவின் நாசாவின் விண்வெளி
கல்வி நிறுவனமான கட்டார்டு
யக்குநர் கவின் ஸ்மிட் உலக
லை தொடர்பான ஓர் அறிக்கையை
ட்டுள்ளார். அந்த அறிக்கையில்
ண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்

ரி மாதத்திலும் அது 1.35 பாகை
சால் அதிகரித்து இருந்தது.

ந்த 100 ஆண்டுகளில் ஒப்பிடும்
மிக அதிகளவு எனக் கணக்கிடப்
து. மேலும் பசுபிக் கடல் பிராந்தி
ஏற்படும் வெப்ப விளைவும் கால
ாற்றங்களுக்கு ஒரு காரணம் என
க்கப்பட்டுள்ளது. மனித செயற்
ால் வெளியான அசுத்த வாயுக்
பருவநிலையில் மாற்றம் ஏற்
வியில் வெப்பம் அதிகரித்ததாக
ந்தப்படுகிறது. தற்போது கால
மிகவும் மோசமான கட்டத்தை
துள்ளது என ஆராய்ச்சியாளரால்
கப்பட்டுள்ளது. (த-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா



# ஆச்சரியமாய் பணியாற்றும் ஆச்சிரமம்



உலகிலே ஆச்சரியமாய் இறைபணி யாற்றி வரும் உன்னதமான ஸ்தாபனம் தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் ஆகும். இலங்கையின் தலையெனப் போற்றப்படும் யாழ்ப்பாணத்தின் நெற்றிக் கண்ணாகவே விளங்கும் செல்வச்சந்நிதி முருகனிடத்தே சரணம் பூண்டு, பேரானந்த சுகத்தை அள்ளித் தருவதும், பேறான அறங்களைத் தர்மம் பிசகாமல் செய்வதுமான ஒரேயொரு நிறுவனமாக இருதசாப்தங்களுக்கு மேலாகியும் நிறைவோடு இது இயங்கி வருகிறது என்ற செய்தி. இனிக்கிறது.மக்களின் ஆன்மிகத் தேவை களையும், அடிப்படைத் தேவைகளையும் குறிப்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்களின் வேண்டுதல்களையும், பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களின் கல்வித் தேவ்வகளுக்கான நன்கொடைகளையும், இலக்காகக் கொண்டு நாள்தோறும், இது தன்னை ஓர் அறப் பேரரசாக மாற்றியிருப்பது காலமிட்ட கட்டளை போலும்.

### கட்டமைப்பு

எல்லாம் வல்ல செல்வச்சந்நிதியானை யாவற்றையும் கொண்டு நடத்துவதற்கு பொறுப்பாக்கி சுவாமிஜிகள் மயில்வாகன, முருகேசு குரு முதல்வர்களை வணங்கியதாக சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை என்ற இரண்டு கட்டமைப்புக்கள் அறப்பணிகளுக்காக வலுப் பெற்றுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரமம், சந்நிதி முருகனையே வாழ்வாக்கி, முருகனுக்கு எது எது அவசியமோ அதை அதை நிறைவேற்றி வைப்பதில் மிகுந்த ஆனந்தம் அடைகிறது. முருகனும் தான் விரும்புவதை ஆச்சிரமம் வாயிலாக நிறைவேற்றி வைக்கின்றான். முருகனின் ஆணைப்படி யாவும் முன்னிற்கும்படியாக, ஆச்சிரமம் எடுக்கும் அத்தனை கருமங்களும், தோல்வியுறாமல் சித்திகரமாகக் கைகூடுகிறதென்றால், முருகனின் பெருங் கருணையை ஆச்சிரமம் ஆற்றிய பணிகளினூடாகவே புரிந்து உரைத்திடுவது சாலவும் பொருத்தமாகும். இற்றைவரை பேறாக்கிய அறப்பணிகள் ஏராளம் தாராளம். அவற்றிலும் பார்க்க, 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தர்ம காரியங்களைப் பார்ப்பதன் மூலம் ஆச்சிரமத்தின் ஆன்மிக வரங்களையும், வாரங்களையும் நாமும் அனுபவிக்கலாம்.

### பணிகள்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன் சுகிர்தரஞ்சினியின் பிள்ளைக்கான சிறுநீரக சிகிச்சைக்கு உதவியளித்தமை,

நீர்வேலி செல்லக் கதிர்காம சுவாமி தேவஸ்தான அறங்காவலர் சபை, அறநெறிப் பாடசாலை அமைப்பதற்கான இருபது சீற் வழங்கப்பட்டமை,

கரவெட்டி செல்வி யோ.கிருளாயினி என்ற மாணவிக்குத் துவிச்சக்கர வண்டி வழங்கியமை,

அச்சுவேலி சிவசக்தி சனசமூக நிலையத்துக்கு இருபது கதிரைகள் வழங்கியமை.

இந்துக் கல்லூரி தரம் ஒன்பது மாணவனான செல்வன் கஜமுகன் மதுன் என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கியமை,

வல்வெட்டித்துறை முன்பள்ளி கொத்தணி விளையாட்டு விழாவுக்காக மாணவர்களுக்கு 125 சில்வர்களையும் 125 கோப்பை களையும் பரிசுப் பொருள்களாக வழங்கியமை,

பருத்தித்துறை பிரதேச செயலக முதியோர் தினப் பயனாளிகளுக்கு 25 சேலைகள் வழங்கியமை.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக முதியோர் தினப் பயனாளிகளுக்கு 15 சேலைகள்,15 சாரங்கள் வழங்கியமை.

தொண்டமானாறு வளர்மதி முன்பள்ளி கலை நிகழ்வுப் பரிசுப் பொருள்களாக 85 மாணவர்களுக்கு புத்தகப்பைகள், தண்ணீர்ப் போத்தல்கள் வழங்கியமை,

அக்கராயன் குளம் கோ.கோபிசாந் என்ற சிறுவனுக்கு இருதய சிகிச்சைக்காக உதவித்தொகை வழங்கியமை.

கோப்பாய் மகாவித்தியாலய தரம் 9 மாணவி க. தனுசிகா என்பவருக்கு மூக்குக்கண்ணாடி வழங்கியமை.

எல்லாவற்றுக்கும் மேலாக, 70 பல்கலைக் கழக மாணவர்களுக்காக மாதாந்த உதவிப் பணம் வங்கியில் வைப்பிலிடப் படுகின்றது. வாரம் இரு முறை (ஞாயிறு+ புதன்) 100 பேருக்குக் குறையாமல் இலவச வைத்திய சேவையும், இலவசமான மருந்துகளும் பெறுமதியாக வழங்கப்படுகின்றன.

மேலும் மலையக அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்குரிய வசதி உதவிகளாக, கூரை சீற், சீருடைகள், புத்தகப்பை, கொப்பி, பேனா, பென்சில், கதிரைகள், அலுமாரிகள், வினாவிடைப் பயிற்சிப் புத்தகங்கள் என பற்பல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வெள்ளியும் தலைவனை இழந்த தலைவியர் குடும்பத்தவர்களுக்கு அரிசியும், உதவிப்பணமும் வழங்கப்படுகிறது.

மற்றும் முருகனின் நாளாந்த பசியைப் போக்கும் முகமாக, அமுதுக்கான ஒழுங்கும் செய்யப்பட்டுள்ளது.அவனருளால் ஐம்பதுக்கும் மேற்பட்ட முதியவர்களின் வயிறு நிறைகிறது. சிறப்பாக, இலங்கையிலிருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வரும் அடியார்களுக்கு நாள்தோறும் அன்னதானமும், வெள்ளிக்கிழமை, கந்த சட்டி, உற்சவ காலங்களில் கலை கலாசார பண்பாட்டுநிகழ்வுகளும், பிரார்த்தனையோடு கூடிய அன்னதானமும் வெகு சிறப்பாக நடத்த முருகன் கருணை கூர்ந்துள்ளான். இவற்றை யார்தான் செய்யமுடியும்?

இலங்கையில் இத்தனை சேவைகளையும் தனித்தே ஓர் ஆச்சிரமம், ஆடம்பரமின்றி, விளம்பரமின்றி, பதவி , பட்டம் ஆசையின்றி, சுயலாபமின்றி, பெயர்களை அலட்டிக்கொள்ளாமல், சந்நிதியில் இயங்கி வருவதென்றால் அது ஓர் இமாலய சாதனையாகும். 18 வருட காலமாக ஞானச்சுடர் என்னும் இதழை எந்த வித அச்சுப் பிழைகளுமின்றி பக்திப்பிரவாகமாக வெளி யிடுவதென்றால், இதுவும் ஓர் அசுர சாதனையே. இது எல்லாவற்றையும் இயக்கும் ஒப்புரவாளர் மோகனதாஸ் சுவாமிகளாவார். இவருக்கு என்ன பட்டம் கொடுத்தாலும் தகும். ஆனால் பட்டம் கொடுக்கவல்ல இதயங்களுக்கு இவரைப் படிக்க இன்னும் பலகாலம் செல்லும்!



"இலங்கையின் தலையெனப் போற்றப்படும் யாழ்ப்பாணத்தின் நெற்றிக் கண்ணாகவே விளங்கும் செல்வச்சந்நிதி முருகனிடத்தே சரணம் பூண்டு, பேரானந்த சுகத்தை அள்ளித் தருவதும், பேறான அறங்களைத் தர்மம் பிசகாமல் செய்வதுமான ஒரேயொரு நிறுவனமாக இருதசாப்தங்களுக்கு மேலாகியும் நிறைவோடு இயங்கி வருகிறது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரவல்தேசம் - நூல் பற்றிய பார்வை

சி.ப.வேந்தன்


மெல்ல மெல்ல புதிய படைப்பாளர்களும் புதிய படைப்புக்களும் வெளிவந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மன்னாரிலிருந்து வெளிவந்திருக்கிறது கவிஞர் ந.பிரதீப்பின் 'இரவல்தேசம்' கவிதைத்தொகுப்பு. போருக்குப் பின்னராக முளைத்திருக்கும் ஓர் இளம் படைப்பாளியின் முக்கிய படைப்பாகவே இது எனக்குப் படுகிறது.

ஏற்கனவே வெளிவந்திருக்கும் இவரது 'அகரச்சிதறல்கள்' கவிதைத்தொகுப்புக்குப் பிறகு, இது இவரது இரண்டாவது படைப்பு. போர் நடந்துகொண்டிருந்த காலங்களில் பல போராளிப் படைப்பாளர்களால் ஆக்கப்பட்ட மிக நல்ல காத்திரமான அன்றைய நிலையைப்பேசிய படைப்புக்கள் வெளிவந்தன. ஆனால் போர் தனது சத்தங்களை நிறுத்தி அமைதியானதன் பின்பு, அவர்களது படைப்புக்களும் அமைதியாகின. அதனுள் பல உண்மைகளுமே அடங்கிவிட்டதென்றே கூறலாம். இப்போது கிடைத்திருக்கும் சின்ன இடைவெளியில் பல படைப்பாளர்கள் தமது படைப்புக்களால் சில அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இதில் போருக்குப் பின்னரான அல்லது போரின் போதான பலதும் பேசப்பட்டுவருவது ஒரு சமூக அக்கறையின் அல்லது படைப்பாளனது கடமை யின் வெளிப்பாடே. அந்த வரிசையில் கவிஞர் ந. பிரதீப்பின் கவிதைகள் எவருக்கும் வளைந்துகொடுக்காமல் எவருடனும் சமரசம் செய்யாமல் நிதர்சனங்களைப்பேசி யிருப்பது படைப்பாளி போராளி என்பதைக் காட்டி நிற்கிறது. கவிஞர் தீபச்செல்வனுடைய முன்னுரையுடன் 23 கவிதைகளுடன் வெளிவந்திருக்கும் இந்தத் தொகுப்பு போர் பற்றியும் வலி,ஏமாற்றம்,வஞ்சிப்பு, இழப்பு,நம்பிக்கை என பலவற்றையும் பாடியிருக்கிறது. கண்முன்னே கடந்துபோன கறுப்புக் கந்தக மேகங்களைச் சொல்கிறது இந்தப்படைப்பு. சிறு சிறு எழுத்துப்பிழைகளின் பலவீனம் கவிதைகளையும் பற்றிவிட்டுப்போகும் ஆபத்து நிகழ்ந்திருக்கிறது.

முதலாவதாக உள்ள மாயா எனும் கவிதையில் 'அச்சம், மடம், நாணத்தை துப்பாக்கியின் ரவைக்கூடுகள் வைக்கும் பைகளில் அடைத்திருந்தாய்' எனும் வரிகளில் அவைகூட எதிரிக்கு ஆயுதமாகும் என்பதையும், அதேவேளை அவைகளை இழக்கவும் இல்லை ஏதோ ஓரிடத்தில் அவற்றைப் பத்திரமாக வைத்திருந்தார்கள் என்பதையும், கவிஞர் காட்டியிருப்பது அழகு. அதே கவிதையில் 'எல்லாப் பழக்கத்தையும் இடக்கைக்கு மாற்றியிருந்தாய்' என்பதில் போராளியின் தயாராகும் மனநிலையை படம்பிடித்துக்காட்டியிருக்கிறார்.

தூண்டில் எனும் கவிதையில் 'கட்டின புருஷன் இன்னும் வரவில்லை, பெட்டிநிறைய வட்டித் துண்டும் வழக்குத்துண்டும்' என்ற வரிகளிலே காணாமற் போனவர்களின் கனத்தைப் பேசியிருக்கிறார்;

நான் எனும் கவிதையில் 'நான் பெரிதும் அசிங்கப்பட்டது நிதானமாயிருந்தவர்களிடம்தான்' என்பதிலும் தேர்தல் எனும் கவிதையில் 'தேனொழுகப் பேசுவார்கள். ஆனால், கருவாட்டு நாற்றம்தான் வீசும்' என்பதிலும் பாடுகள் எனும் கவிதையில்'இனிமேலும் எவரையும் காட்டிக்கொடுக்காமலிருக்க யூதாசின் கைகளில் மறக்காமல் கொஞ்சம் அமெரிக்க நாணயங்கள் திணிக்கப்படவேண்டும்' என்பதிலும், பிரிவினைவாதம் எனும் கவிதையில் இன்னும் கொஞ்சம்தான் மிச்சப்பட்டுள்ளது என் பொறுமை அதையும் முடித்துவிட்டு முடிவில் எனக்குள்ளும் வன்முறையை நிரப்பிவிடாதீர்கள். நான் வன்முறையை எதிர்க்கும் வன்முறையாளன் என ஒவ்வொரு வரிகளிலும் ரௌத்திரம் காட்டியிருக்கிறார் கவிஞர் பிரதீப்.




காலம்காலமாய் படித்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களால் அல்லது ஆட்சியாளர்களால் பயங்கரவாதம் என்று கூறப்படும் விடுதலைபற்றிய போரும், குரலும் எப்போதுமே கவிஞர்களால் கடவுள் உயரத்தில் வைத்துப்பார்க்கப்படும், பாடப்படும் ஒன்றாகவே இருந்திருக்கிறது. இப்போதும் இருக்கிறது. இது இவர் கவிதையில் தெரிகிறது.

'சிலருக்கு விளக்கேற்ற விருப்பம் இருக்கும் கைகளிருக்காது இன்னும் சிலரின் குடும்பத்தில் விளக்கேற்ற எவரும் உயிரோடிருக்கமாட்டார்கள்'

என் நெஞ்சு எலும்புக்கும் விலா எலும்புக்கும் நடுவில் வெள்ளரச மரத்தின் வேரொன்று குறுக்கறுத்து என்னையும் தாண்டி மண்ணில் ஆழப் பதிகிறது'

'இறந்த என் உடலுக்குப் பக்கத்தில் என்னுடைய நம்பிக்கை காத்திருக்கும்'

'எங்கள் அத்தனை தலைமுறைக்கும் நரைக்கும் வயதிலும் அந்த உணர்வு உள்ளே இருந்தபடி சிரிக்கும்' என்று இவரின் கவிதைகள் எல்லாம் விடுலையையும் நம்பிக்கையையும் ஆத்மார்த்தமாக உள்ளிருந்து பேசுகின்றன. பலஸ்தீனக் கவிதை ஒன்றில் சொல்வதுபோல 'கோழைகள் சூரியனின் எதிரிகள், அவமான ரொட்டியினால் ஊதிப்புடைக்கட்டும்....நான் வாழும் வரை எனது சொற்களும் வாழும், சுதந்திரப்போராளியின் கைகளில் ரொட்டியாயும் ஆயுதமாயும் என்றும் இருக்கும்' என்பது போல, இந்தக் கவிதைகள் அகலக்கை நீட்டி விட்டு, வீதியாய் எவரது இடைஞ்சலுமின்றி சுவாசிக்க விரும்பும் அத்தனை புரட்சிக்காரனது நெஞ்சிலும் வாழும்.

சமரசங்களோடு வாழப்பழகிவிட்ட சமகாலத்துக்கு இந்தக் கவிதைகள் எல்லோரது இருப்பையும் கேள்வி கேட்கிறது. போருக்குப் பின்னரான ஒரு இரத்தப் படைப்பு இரவல் தேசம்.

# 'கல்விக் காருண்யனின்' மணி விழா









பொன்மனச் செம்மல், 'கல்விக் காருண்யன்' ஈ.எஸ்.பி.நாகரத்தினத்தின் மணிவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெற்றது. வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன்,வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் உள்ளிட்ட பலர் வாழ்த்துரை வழங்கினர். நாகரத்தினத்தின் மணிவிழா மலரும் வெளியிடப்பட்டதுடன், மணிவிழாச் சபையினரால் மணிமகுடம் சூட்டி விழாநாயகர் கௌரவிக்கப்பட்டார். இந்த விழாவில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமுருக வரலாறு

■ கிருஷ்ணராஜா சஞ்ஜீவன்

இந்து மதம் மிகவும் உன்னதமான மதம். இந்து மதத்தில் பல கடவுளர்கள் உள்ளனர். எனினும் முத்தமிழின் தலைவன் திரு நீலகண்டனின் திருமகனான முருகப்பெருமானையே பெருமைகள் எல்லாம் சாரும். முருகன் அழகின் தலைவன். முக்தியளிக்கும் வள்ளல், வெவ்வினைகளைக் களையும் வேழமுகன் தம்பியே வேலவன். இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட முருகப்பெருமான்,உதித்தமைக்குக் காரணம் உண்டு. முன்னொரு காலத்தில் அசுர குலத்தலைவன் சூரபத்மனும் அவன் தம்பிமார்களான தாரகசுரன், சிங்கமுகசுரன் ஆகியோரும் பரம்பொருளான சிவனிடத்தே பல ஆண்டுகள் தவம் செய்து பல்வேறு வரங்களைப் பெற்றனர். அவர்கள் பெற்ற வரத்தினால் பல்வேறு சுகபோகங்களை அனுபவித்து மகிழ்ச்சி கண்டனர். அப்போது சூரபத்மன் இந்திரலோகத்தின் அரசன் இந்திரனையும் மற்றும் தேவர் படைகளையும் சிறைப்பிடித்து துன்பப்படுத்தினான். இத்தனை வேதனைகளையும் தாங்க முடியாத தேவர்கள் பரம்பொருளிடம் முறையிட்டனர். அதற்கு சிவன் இத்தகைய வேதனைக்கு முடிவுகட்ட தன் நெற்றிக் கண்ணைத் திறந்தார். சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் உருவாகின. சக்தி வாய்ந்த அந்தத் தீப்பொறிகள் சரவணப்பொய்கையில் விழுந்து சரவணபவன் தோன்றினான். ஆறு தீப்பொறிகள் ஆறுதாமரை மலர்களாகி அவை ஆறு குழந்தைகளும் ஆயின. குழந்தைகள் ஆறும் ஆறு பெண்களால் வளர்க்கப்பட்டனர். அந்த ஆறு மங்கையரும் கார்த்திகைப் பெண்களாவார்கள். அவர்களால் வளர்க்கப்பட்டு,சக்தியின் அரவணைப்பாலே உருவான குமரன் மகா சக்தி வாய்ந்த கார்த்திகேயப் பெருமானாகவும்,ஆறுமுகப் பெருமானாகவும் உருவெடுத்தார். முருகன் எனவும் பெயர் பெற்றார். பின்னர் தனது பிறப்புக்குரிய காரணத்தை அறிந்து கொண்ட கந்தப்பெருமான், வீரவாகுதேவருடன் தன் தாய்தந்த சக்தி வேலாயுதத்தைக் கொண்டு போரிடச் சென்றார். இருப்பினும் போருக்கு முன் வீரவாகுதேவரை சூரனிடம் அனுப்பி சமாதானமாகுமாறு கேட்டுக் கொள்ள ஆணவம் கொண்ட சூரன் போருக்குக் கட்டளையிட்டான்.பின்னர் வீரவாகுதேவர் சூரனால் கைது செய்யப்பட்டு சிறைக்குள் இருந்த தேவர்களைப் பார்க்கச் சென்றார். ஆனாலும் தேவர்கள் சூரனின் மாயையென்றே வீரவாகு தேவரைக் கருதினர். பின் இவர் எம்மைக் காக்க இறைவனால் உருவாக்கப்பட்டவர் என உணர்ந்து போரில் எம்மைக் காப்பாற்றினால். வள்ளியைத் திருமணம் செய்வதற்காக முருகப்பெருமானிடம் ஒப்படைப்போம் எனவும் கூறினார்கள். அதன்படியே போர் நடந்தது. தாரகசுரன், சிங்கமுகசுரன் ஆகியவர்கள் இறக்க இறுதியாக சூரபத்மன் போருக்குச் சென்றான். அவன் முடியை வீழ்த்தினார் முருகன். சூரனே இது உனக்கு இறுதி எச்சரிக்கை. உனக்கு மீண்டும் ஒருநாள் அவகாசம் தருகின்றேன் இன்று போய் நாளைவா என்றார் முருகப் பெருமான். அதன்படியே மறுநாள் போர் நடைபெற்றது. சூரன் மாயாஜாலங்களை எல்லாம் காட்டி இறுதியில் மாமரமானான். இறைவன் முருகனும் சூரனை அழிக்கத் திருவுளம் கொண்டு தன் கூர்வடிவேலை எய்து சூரபத்மனை இருகூறாக்கினார். இதையே கந்தஷ்டியின் ஆறாம் நாள்,ஆலயங்களில் சூரன் போர் எனக் கொண்டாடுகிறோம். பின் முருகப்பெருமானுக்கு தேவர்கள் இட்ட வாக்குறுதியையும் காப்பாற்றி சுபநாளில் முருகனுக்கும் வள்ளிக்கும் திருமணம் நடைபெற்றது. சூரனின் செயலையே நன்றி மறத்தல் எனக் கூறலாம். சிவனிடம் பெற்ற வரத்தாலும் எல்லை மீறிய ஆணவத்தினாலும் யார் நடந்தாலும் அவர் களுக்கும் இந்தச் சூரனின் கதிதான் ஏற்படும் என்பதை இந்தக் கதை திறம்பட விளக்கி நிற்கிறது. எனவே பூவுலகில் ஜென்மம் எடுத்த நாமும் நன்றி மறவாது வாழ்ந்து அவனடி சேருவோம்.

> “ சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் உருவாகின. சக்தி வாய்ந்த அந்தத் தீப்பொறிகள் சரவணப் பொய்கையில் விழுந்து சரவணபவன் தோன்றினான். ஆறு தீப்பொறிகள் ஆறுதாமரை மலர்களாகி அவை ஆறு குழந்தைகளும் ஆயின. குழந்தைகள் ஆறும் ஆறு பெண்களால் வளர்க்கப்பட்டனர். ”

ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்.










## வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி நாளையதினம் ஆரம்பமாகின்றது

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி நாளை 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது. வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும் திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட் டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி,ஒளி அமைப்புப்போன்றவற்றுடனும்,அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களுடனும் மேடையேற்றப்படவுள்ள வேள்வித் திருமகன் ஆற்றுகைக்கான ஏற்பாடுகள் இப்பொழுது இடம்பெற்று வருகின்றன.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவிலும் நெறியாள்கையிலும் முதன்முதலாக கடந்த 2012 ஆம் ஆண்டு மேடையேற்றம் கண்ட திருப்பாடுகளின் காட்சி மேலும் புதிய மாற்றங்களுடன் 2014ஆம் ஆண்டில் இரண்டாவது தடவையாக மேடை யேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தது. இம்முறையுடன் மூன்றாவது தடவையாக மேடையேற்றப்படும் வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சிக்கான நெறியாள்கையை மன்றக் கலைஞரான தை.யஸ்ரின் ஜெலூட் மேற்கொண்டுள்ளார். நீ.மரியசேவியர் அடிகளாரால் எழுதப்பட்ட திருப்பாடுகளின் காட்சி பிரதிகளில் இருந்து மொழிநடையிலும் பொருள் அளிக்கையிலும் சற்றுமாறுபட்டதாக எழுதப்பட்டுள்ள இப்படைப்பு வேள்விக் கருவை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது.ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்படும் திருப்பாடுகளின் காட்சியை பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்வையிடுகின்றமையும் இலங்கையிலேயே இடம்பெறுகின்ற மிகப் பெரிய அரங்க ஆற்றுகையாக இது அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



## மல்லாவி கஜன் எழுதி, துணுக்காய் கலை கலாசாரப்பேரவை வெளியிட்ட ஒருபிடி மண் சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா

மல்லாவி கஜன் எழுதி, துணுக்காய் கலை கலாசாரப்பேரவை வெளியிட்ட ஒருபிடி மண் சிறுகதைத்தொகுதியின் வெளியீட்டு விழா நிகழ்வில் கவிஞர் மேழிக்குமரன் நயப்புரையையும், மருத்துவர் செ. மதுரங்கன் ஆய்வுரையையும் நிகழ்த்தினர். நூல்வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்ட நூலாசிரியர், பெற்றோர் மற்றும் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி மாலினி வெனிட்டன் உள்ளிட்ட விருந்தினர்களைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கடை கலைஞர்களுக்கும் சந்தர்ப்பம் குடுக்கவேணும்

**–சொல்கிறார் ஓவியக்கலாகேசரி சிற்பக்கலாவித்தகர் பத்மநாதன்–**

சி.ப.வேந்தன்

நான் 3ஆம் வகுப்பிலை படிக்கேக்க நெல்லியடிக்கந்தசாமி வாத்தியார் ஒருநாள் நான் கீறின படத்தைப்பாத்திட்டு திடீரெண்டு முதுகிலை சடாரெண்டு அடிச்சார். நான் பயந்துபோனன். ஒரு பிழையுமேசெய்யேல்ல ஏன் எனக்கு அடிச்சவர் எண்டு குழம்பிப் போய் நிக்க,திருப்பியும் கையோங்கிப்போட்டு 'ஆட்டிஸ்ற்' எண்டு கூப்பிட்டார். பிறகு என்ர பேப்பரிலை 99 புள்ளி போட்டார். பிறகு ஒவ்வொரு நாளும் அப்பிடியே கூப்பிட்டார். பிறகு ஒருநாள் இதில இரடாஎண்டு சொல்லிப்போட்டு,என்ரை வோட்டர் கலர் பெட்டிக்குள்ள தண்ணிய ஊத்தினார். நான்பயந்து போய் வீட்டிலை பேசப்போறாங்கள் எண்டு நினைக்க அவர் நீலத்தை எடுத்து சும்மா பேப்பரில பூசினார். அப்பிடியே சிவப்பு, மஞ்சள் கலரையும் எடுத்து பூசினார். அதிலை ஒரு குருவி வந்தது.பிறகு பச்சையால தீட்ட செடிகள் வந்தன. பாத்துக்கொண்டிருந்த,எனக்கு ஏதோ 'மஜிக்' பாக்கிற மாதிரி இருந்தது. அடுத்தநாள் அதைப்பாத்திட்டு நானும் கீறிக்கொண்டு போனன். அதையும் பாத்திட்டு திரும்பவும் முதுகில அடிச்சிட்டுநீ இதிலைநல்லாய் வருவாயடா எண்டு சொன்னார். அவர்தான் என்னை முதன்முதலா ஓவியனா அடையாளம் கண்டவர். எங்கடை அம்மம்மா மகாபாரதம் நெடுகலும் படிக்கிறவ. நான் எங்க வெள்ளைத்தாள் இருந்தாலும் அதிலை ஏதாவது கிறுக்கிறதுதான் வேலை. அப்பிடித்தான் அவவின்ர மகாபாரதப் புத்தகத்திலயும் கீறிவைச்சிட்டன்.அவ அதைப்பாத்திட்டு பேச வெளிக்கிட்டா. இதெல்லாம் இப்ப நினைக்க சிரிப்பா இருக்கும். ஆனா இப்பிடித்தான் என்ரை ஓவியம் மீதான காதல் இருந்தது. அது இப்ப என்னை ஒரு நல்ல இடத்துக்கு கொண்டு வந்திருக்கெண்டதை நினைக்கச் சந்தோசமா இருக்கு.

என்ரை ஐயா(அப்பா) எஸ்.கே. சுப்ரமணியம்,நல்லாய்ப் படங்கள் கீறுவார். அரங்கஅமைப்பு வேலைகள் எல்லாம் நல்லாய்ச் செய்வார். இந்தத் துறையிலை அவருக்கு நல்ல தேர்ச்சியும் ஈடுபாடும் இருந்தது. ஐயா சிலோன் எண்டர்டெயின்ட்மெண்ட் லிமிடெட்டிலைதான் கொழும்பிலை வேலைசெய்தவர். அந்த நேரத்திலை காதர் என்பவர் இங்கை இருந்து சிங்கள நடிகர்மார் கொஞ்சப் பேரைத் தெரிவுசெய்து இந்தியாவுக்குக் கொண்டுபோய் சுரத்தடி, சுந்தரடி, சுனிதா, சுயாகரதங்க, சுந்தர பிருந்தா இப்பிடித் திரைப்படங்கள் செய்தவர். இதுக்கெல்லாம் ஐயா தான் புரொடக்ஸன் மனேஜர். இந்திய இயக்குனர் ப.நீலகண்டன் தான் படங்களை இயக்கினவர். சுந்தர பிருந்தா எண்ட படத்திலை என்ரை ஐயா ரெண்டு கட்டத்தில நடிச்சிருக்கிறார். இங்கையும் அது நூறு நாள் ஓடினது. கொழும்பிலை விஜயா ஸ்ருடியோவிலை ஐயா வேலையள் செய்யேக்க,நான் பள்ளிக்கூட விடுமுறையிலை பத்துப்பதினொரு வயசிலை அவரோட போய் நிப்பன். அப்ப அவர் என்னையும் ஸ்ரூடியோவுக்குக் கூட்டிக் கொண்டு போவார். அப்ப நான் அங்க நிண்டு எப்பிடி ஓவியங்கள் கீறுகினம், அரங்கவேலையள் எப்பிடிச்செய்யினம், எப்பிடி சிலைகள் வடிவமைக்கினம் எண்டு பாப்பன். அதோட ஐயா இப்பிடியான கலைசார்ந்தவேலைகள் செய்யேக்கை பக்கத்திலை இருந்து பாத்ததாலையும் எனக்கு வேகமா இதிலை ஆர்வமும் திறனும் வந்தன. அதுக்குப்பிறகு பள்ளிக்கூடத்திலையும் அந்தத்துறையிலை கூடுதலாய்க் கவனம் செலுத்த வெளிக்கிட்டன். நான் ஒன்பதாம் ஆண்டு படிக்கேக்கை யாழ்ப்பாணம் பொது நூலகத்திலை எரிக்க முதல் இருந்த பழைய சரஸ்வதி சிலையை எனக்குப் படிப்பிச்ச சிவப்பிர காசம் வாத்தியார்தான் செய்தவர்.அப்ப அவரோடை போய் நிண்டு அவருக்கு ஒத்தாசையாய் வேலைகள் செய்து குடுக்கிறனான்.நான் சிலை செய்ய முதன்முதலா அடித்தளம் இட்டவர் அவர்தான்.


பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் இந்தத் துறைசார்ந்து முழு ஈடுபாட்டோடை இயங்கத்தொடங்கீற்றன். அப்பத்தான் பள்ளிக்கூடங்களிலை எந்த நிகழ்வு நடந்தாலும் அரங்க ஓவிய வேலைகள் எல்லாம் நான்தான் செய்வேன். அப்ப 'ஆட்டிஸ்ற் மணியண்ணையின்ரை' வேலைகளைப் போய்ப்பாத்து அதில இருந்தும் நிறையக் கற்றுக்கொண்டேன். அதுக்குப்பிறகு ஊர்திகள், திரைச் சீலைகள்,சுவரோவியங்கள் செய்ய ஆரம்பிச்சன். இப்பவும் எங்கடை ஊர் நாச்சிமார் கோவிலடி பத்திர காளி கோயிலிலை 25 வருசமா நான் கீறின திரைச்சீலை இருக்குது. பிறகு இதிலை இன்னும் படிக்கவேணுமெண்டு கொழும்பு நுண்கலைக் கல்லூரியிலை ஒண்டரைவருசமாய்ப் படிச்சனான். இப்ப இவற்றைப் படிப்பிக்கிறன்.

ரமணி ஐயா செய்யிற படைப்புக்களிலை எனக்கு நல்ல ஈர்ப்பு இருக்கு. ஒருநாள் நான் ஒரு ஓவியம் வரைந்தபோது அவர் வந்து பாத்தவர். நான் கண் வச்சுத் தாங்க எண்டு கேட்க அவர் செய்து தந்தவர். அதை என்ரை வாழ்க்கையிலை நான் எப்பவுமே மறக்க மாட்டன். ஆ.செ. ராசையா ஐயாவும் என்ரை வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் முன்னோடியாகவும் இருந்தவர். இதெல்லாம் எனக்குக் கிடைச்ச பாக்கியம்.

ஒப்பனை. நாடகஅரங்குகள்,திரைப்படங்களுக்கான அரங்குகள் எண்டு நிறையச் செய்தனான்.

நவீன ஓவியங்களைக் கூடுதலா நான் படப்பிடிப்பு அரங்கத் தயாரிப்புக்களிலை செய்துகொண்டுவாறன். பாடசாலைகளிலை பண்டாரவன்னியன் நாடகங்களுக்காக 120 அடியிலகூட அரங்குகள் செய்திருக்கிறன்.

ஒரு சிலை செய்யிறத்துக்கு கூடுதலான காலம் இருந்தா அது நல்ல படைப்பாய் வரும். ஆனா சிலபேர் கூடுதலாய் ஒரு குறிப்பிட்ட நாளுக்குள்ள முடிச்சுத்தரச் சொல்லிக் கேப்பினம். நாங்களும் செய்து குடுப்பம் . ஆனா அதிலை எங்களுக்கு முழுமையான திருப்தி இருக்காது. அப்பிடித்தான் ஒரு பாடசாலையிலை சரஸ்வதி சிலை செய்துதரச்சொல்லிக் கேட்டவை. ஆனா எங்களிட்டைச்சொல்லாமலே திறப்புவிழாவுக்கான திகதியை அறிவிச்சு நிகழ்வும் ஏற்பாடு செய்திட்டினம். ஆனா சிலை செய்து முடியேல்லை பிறகு நிகழ் வுக்காக தற்காலிகமாய் அதை வடிவமைச்சுக்குடுத்திட்டு பிறகுதான் அதை முழுமையாய்ச் செய்து குடுத்தனான். அப்பதான் ஒரு படைப்பாளியா திருப்தியடையக் கூடியதா இருந்தது.



> எங்கடை திறமைக்கான ஊதியம் கிடைக்கிறதில்லை. செய்யவாறவையிட்டை லட்சக்கணக்கில கேட்டா ஒருத்தரும் செய்ய முன் வராயினம். கலை வளராமப் போயிடும். அதால எங்களால முடிஞ்ச வரைக்கும் மிகக்குறைஞ்ச பணத்தையே வாங்குறம்.

ஆகக்குறைஞ்சது ஒரு மாசமாவது வேணும். நாங்கள் ஒரு அளவான சிலை செய்யிறத்துக்கு. ஆகக்குறைஞ்சது 45 ஆயிரம் ரூபா வாங்குறம். ஆனா அதுக்குள்ளதான் சீமெந்து,கல்,கம்பி எண்டதுகளும் வாங்கவேணும்.ரெண்டு பேர் 15நாளுக்கும்மேலை வேலை செய்ய வேணும்.அதுக்குப் பிறகு வர்ணங்களுக்கான செலவு எல்லாம் இதுக்குள்ளைதான். இதிலை எங்கடை திறமைக்கான ஊதியம் கிடைக்கிறதில்லை. செய்யவாறவையிட்டை லட்சக்கணக்கில கேட்டா ஒருத்தரும் செய்ய முன்வராயினம் கலை வளராமப் போயிடும். அதாலை எங்களாலை முடிஞ்ச வரைக்கும் மிக குறைஞ்ச பணத்தையே வாங்குறம். பள்ளிக்கூடத்திலை இருக்கிற சரஸ்வதி சிலையைப்பிள்ளைகள் கையெடுத்துக் கும்பிடேக்கை எனக்குக் கிடைக்கிற சந்தோசம், நிம்மதி போதும்.

அண்மையிலை நவாலியிலை வறுமைப்பட்ட பெண்களுக்காக ஒரு பயிற்சிப் பட்டறையிலை கடதாசிகளிலை எப்படி கைவினைப்பொருள்கள் செய்து அதன் மூலம் எப்படி வருவாயைப் பெற்றுக் கொள்ளுறது எண்டுவகுப்பெடுத்தனான். அது அவைக்கு நல்ல பிரயோசனமா இருந்தது. அது வர்த்தகக் கண்காட்சியிலையும் வைச்சு நல்ல வருமானம் கிடைச்சது. அதேபோல வவுனியா செட்டிகுளத்திலையும் பொம்பிளைப்பிள்ளைகளுக்கு துணியிலை எப்பிடி வர்ணம் தீட்டுறது எப்பிடி புடவைகளுக்கு டிசைன் செய்யிறது எண்டு பழக்கினனான். அதன் மூலம் அந்தப் பிள்ளைகள் இப்ப தங்களுக்கெண்டு ஒரு சுயவருமானம் பெறக்கூடிய தொழிலைச் செய்து வருகினம் அதில பயிற்சி எடுத்த பிள்ளைகள்; இப்ப கைத்தொழில்துறையிலை பயிற்சி ஆசிரியராய் இருக்கினம். அது எனக்குச் சந்தோசமாயும் திருப்தியாயும் இருக்கு. என்ரை பிள்ளைகளுக்கு நான் இது சம்பந்தமா எதுவுமே படிப்பிக்கேல்லை ஆனா அவை நான் செய்யிறதைப் பக்கத்திலை இருந்து பாத்திட்டு தாங்களாகவே செய்ய வெளிக்கிட்டினம். இப்ப நான் செய்யும்போதெல்லாம் மகனும் உதவிக்கு வாறவர். நான் இல்லாட்டியும் என்ரை பிள்ளைகளாலை தங்கடை சுய கால்களிலை நிக்க முடியும் எண்டநம் பிக்கை வந்திருக்கு. அது எனக்கு நிம்மதி.

இந்தியாவிலை இருக்கிற ஆக்களை விட நல்ல கலைஞர்களும் இங்க இருக்கினம். ஆனா எங்கடை ஆக்கள் இங்கை இருக்கிறவையை விட்டுட்டு வெளிநாட்டிலை இருந்து ஆக்களைக்கொண்டு வந்து செய்யினம் –அது பிழையில்லை. ஆனா இங்க இருக்கிற கலைஞர்களுக்கும் சந்தர்ப்பங்களைக் குடுக்க வேணும். அதாலை இங்கு இந்தக் கலைகள் அழியாமல் முன்னேற வாய்ப்பிருக்கு. இங்கை குருகுலக் கல்வி இல்லை. இதாலையும் இங்கை நிறையக்கலைஞர்கள் உருவாகிறது குறைவாய் இருக்கு.

எதிர்காலத்திலை எல்லாப்பிள்ளைகளும் இந்தத்துறைகளிலை ஈடுபடவேணும். கூடுதலாய் நிறையப் பிள்ளைகள் நல்ல ஆர்வமாய் இருக்கினம்.

வித்தியாசமான கண்ணோட்டத்திலை புதிய புதிய படைப்புக்களை உருவாக்கிக்கொண்டு வருகினம். இதெல்லாம் இந்தக்கலை வளர்வதற்கான நல்ல ஆரம்பங்களாகத்தான் நான் பாக்கிறன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## பலதும் பத்தையும் தெரிந்து கொள்வோம்

1. கண்ணாடி தயாரிப்பதற்கான முக்கிய மூலப் பொருள் – சிலிக்கான் மணல்
2. எமது இரத்தம் சிவப்பு நிறமாக இருப்பதற்குக் காரணமான பொருள் – ஹீமோ குளோபின்
3. சுவர்களிலும் விதானத்திலும் வரையப்படும் ஓவியங்கள் 'பிரஸ்கோஸ்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும்.
4. எமது உடலில் வயிற்றின் வலது பக்கத்தில் 'அபெண்டிக்ஸ்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் குடல்வால் உள்ளது.
5. கியூபா நாட்டை உலகின் சக்கரைக் கிண்ணம்(Sugar Bowl) என்ற பெயராலும் அழைப்பர்.
6. சதுரங்கப் பலகையில் உள்ள மொத்தக் கட்டங்கள் 64ஆகும்.
7. பூமியில் நீர் மூடியுள்ள மொத்த பரப்பு ஏறக்குறைய 140 மில்லியன் சதுர மைல்கள் ஆகும்.
8. ஒளியின் வேகம் விநாடிக்கு 297,600 கிலோமீற்றர் ஆகும்.
9. சர்வதேச திரை உலகில் உயர்ந்த பரிசான ஆஸ்கர் பரிசை, வால்ட்டிஸ்னி 35 தடவைகள் பெற்றுள்ளார்.
10. கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்ற இந்திய நடிகர் பிரேம் நசீர் ஆவார்.

## ஐந்திணை 'முல்லை'

"வணக்கம் குழந்தைகளே! நான்தான் முல்லைப்பூ."

இலைகளுக்குள் விண்மீன்களை இறைத்ததுபோல் பூத்திருந்தன முல்லைப் பூக்கள். காற்றில் மிதந்துவந்தது அவற்றின் நறுமணம். முல்லைத் திணை என்பது காடும், காடு சார்ந்த இடமும் என்கிறார்கள். ஆனால், மரங்கள் அடர்ந்த காடாக இது இல்லையே! மேய்ச்சல் நிலங்களுடன் கூடிய காடாக அல்லவா இருக்கிறது? இதுதான் முல்லைத் திணையா?

பசுமைப் பாடசாலைக் குழந்தைகளின் மனங்களில் ஓடிய எண்ணத்தைப் புரிந்துக் கொண்டது முல்லைப்பூ.

"ஆமாம் குழந்தைகளே! முல்லைத்திணை என்பது தரைக்காடு. பசுமை நிறைந்த பகுதி என்றால், அது காடு தானே? நாட்டுக்குள் வசிக்கும் மக்களைவிட அதிகமான உயிரினங்கள் காட்டுக்குள்தானே வசிக்கின்றன?"

"ஆனால், காட்டுக்குள் இருக்க வேண்டிய விலங்குகள் ஊருக்குள் அடிக்கடி புகுந்து விடுகின்றனவே, அது சரியா?" என்று கேட்டாள் பூவிழி என்ற சிறுமி.

"நல்ல கேள்வி. முதலில் உன்னிடம் நான் ஒரு கேள்வியைக் கேட்கிறேன். அதற்கு நீ பதில் சொல். நீ வசிக்கும் வீட்டை எவராவது இடித்துத் தள்ளிவிட்டால், உனக்கு எப்படி இருக்கும்?"

"மிகவும் வேதனையாக இருக்கும்"

"அப்போது நீ எங்குப் போவாய்?"

"தெருவுக்குத்தான் போகவேண்டும்"

"அப்படியாணால் மக்க ளுக்கு ஒரு நியா யம். காட்டு உயிரி னங்க ளுக்கு ஒரு நியா யமா?"

பூ வி ழி க் குப் பதில் சொல்லத் தெரியவில்லை. முல்லைப்பூ தொடர்ந்து பேசியது.

"மனிதர்கள் வாழ்வதற்காகக் காட்டை அழிக்கிறார்கள். பிறகு காட்டு விலங்குகள் என்ன செய்யும்? காட்டின் பரப்பளவு குறையும்போது, உணவும் குறைந்து போகிறது. அதனால் தான், அவை உணவைத் தேடி ஊருக்குள் வருகின்றன. புரிகிறதா?"

குழந்தைகள் தலையை ஆட்டினர்.

"ஆனால், அப்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஊருக்குள் புகுந்து யானைகள் அட்டகாசம், சிறுத்தைகள் அட்டூழியம் என்று செய்திகளை வெளியிடுகிறீர்கள். ஒரு வேளை விலங் குகளுக்கும் செய்தி வெளியிடும் திறன் இருந்து, அதில் மனிதர்கள் காட்டுக்குள் புகுந்து அடாவடி, காட்டைத் திருடும் மனிதர்கள்எனச் செய்தி வெளியிட்டால் மனிதர்களுக்கு எப்படி இருக்கும்?"

"அசிங்கமாக இருக்கும்" என்று பூவிழி பதில் சொன்னபோது, மற்றக் குழந்தைகள் சிரித்தனர். முல்லைப்பூவும் சிரித்துவிட்டுச் சொன்னது:

"காடு என்பது உங்களுக்கான உயிர் மூச்சு. உங்கள் மூச்சை அழித்துவிட்டு வாழ்வது என்ன வாழ்க்கை? ஆனால், காடு என்றாலே மக்களுக்கு மரப்பலகை, மரப்பொருள்கள் மட்டும்தான் கண்ணுக்குத் தெரிகிறது. இப்போது சொல்லுங்கள் குழந்தைகளே காடு என்பது வெறும் பலகையா? பலகையை வைத்துக்கொண்டு மூச்சுவிட முடியுமா? முடியாது"

"இன்று முல்லைத் திணை என்பது காடும் காடு சார்ந்த இடமும் என்பதற்குப் பதிலாக மரங்களை வெட்டிப் பலகையும் பலகை எடுக்கும் இடமுமாக மாறிவிட்டதே! வன்னியில் பாருங்கள்! களவாக எவ்வளவு மரங்களை வெட்டி எடுக்கிறார்கள் என்று!"

முல்லைப்பூவின் துயரம் குழந்தைகளுக்கும் தொற்றிக்கொண்டது. காடு என்பதே பசுமைதானே? பசுமையை அழிய விடுவார்களா, நம் பசுமைப் பாடசாலையின் குழந்தைகள்? அவர்கள் ஒன்று கூடி உறுதிமொழி எடுத்தார்கள்.

"இருக்கும் காடுகளைக் காப்போம். புதிய காடுகளை வளர்ப்போம்."





## வரலாற்றில் இன்றைய தினம்

கி.மு.597 – பபிலோனியன்ஸ் ஜெருசேலத்தைக் கைப்பற்றினர்.

455 – பேரரசர் மூன்றாம் வலன்ரைன் இரண்டு ஹியூனிக்கைக்கூலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

1521 – பேடினன்ட் மகலன் பிலிப்பைன்ஸ் ஹொமோன் கொன் தீவை 150 மாலுமிகளுடன் 3 சிறிய கப்பல்களில் சென்றடைந்தார்.

1660 – இங்கிலாந்து நாடாளுமன்றம் புதிய நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்காகக் கலைக்கப்பட்டது.

1792 – சுவீடன் நாட்டரசர் மூன்றாம் ஹஸ்டப் சுடப்பட்டார். அவர் மார்ச் 29 இல் உயிர்துறந்தார்.

1815 – ஐக்கிய ராச்சியத்தின் நெதர்லாந்து அரசராக தம்மை இளவரசர் பிறின்ஸ் வில்லியம் பிரகடனப் படுத்தினார்.

1924 – உரோம் ஒப்பந்தத்துக்கு அமைய பியூம்ஸ் இத்தாலியின் ஒரு பாகமாக இணைக்கப்பட்டது.

1939 – எகிப்தின் இளவரசி பௌசியா, ஈரானிய ஷா மொகமட் றிஷா பஹ்லவியை மணமுடித்தார்.

1940 – இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஐக்கிய ராச்சியம் மீதான ஜேர்மனின் குண்டுத் தாக்குதலில் ஒருவர் முதன்முதலாக கொல்லப்பட்டார்.

1942 – முதலாவது வி–2றொக்கெட் விண்ணில் ஏவப்பட்ட போது வெடித்துச் சிதறியது.

1945 – ஜேர்மனியின் ஷர்ஷ்பேர்க் நகரின் 90 வீதமான பகுதிகள் 20 நிமிட பிரிட்டிஷ் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் அழிவடைந்து. 5,000 பேர் கொல்லப்பட்டனர்.

1962 – 107 பயணிகளுடன் மேற்கு பசுபிக் கடலில் பிளையிங் டைகர் விமானம் மாயமாகியது. அனைவரும் இறந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

1968 – வியாட்நாம் போரின் போதான மைலாய் படுகொலை. 347 தொடக்கம் 500 வரையான வியட்நாம் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்டனர்.

1968 – ஜெனரல் மோட்டார் நிறுவனம் தனது 100 மில்லியன் மோட்டார் நிறுவனத்தை உருவாக்கியது.

1976 – சொந்தக் காரணங்களால் பிரிட்டிஷ் பிரதமர் ஹலோல்ட் வில்சன் பதவி விலகினார்.

1988 – வடக்கு – கிழக்கில் இயல்பு நிலை ஏற்பட இந்தியா பாடும்படும் என ஜே.ஆரின் விசேட பிரதிநிதியான காமினியிடம், ராஜீவ் காந்தி தெரிவிப்பு.

1989 – எகிப்தில் 4400 ஆண்டுகள் பழமையான 'மம்மி' சியோப்ஸ் பிரமிட் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது.

2008 – அநுரா பண்டாரநாயக்க தமது 59 ஆவது அகவையில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தி


# திருவள்ளுவர் ஒரு சைவத்தமிழர்

சைவத்தமிழர் நாம் என்று மார்தட்டிக் கூறும் அளவுக்கு சைவத் தமிழராகிய எம்முடைய அறிவாற்றலை உலகுக்குப் பறை சாற்றி நிற்கும் நூல்கள் பலவற்றில் திருக்குறள் உன்னதமான படைப்பாகும். உலகத்தில் தோன்றிய படைப்பாளிகளின் படைப்புக்களுக்குள் ஈடு இணையற்ற, ஏனையவற்றுடன் ஒப்பிட முடியாத ஓர் சிறந்த தமிழ் இலக்கியம் திருக்குறள். நான் தமிழனாகப் பிறக்கவில்லையே என்று வேதனைப்படும் அளவுக்கு திருக்குறளின் பெருமை உலகத்தவர்களிடையே பெரும் ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளது. நான் மறு பிறப்பில் தமிழனாகப் பிறக்க வேண்டும். செந்தமிழில் உள்ள திருக்குறளை பொருள் புரளாது உளமாரக் கற்றறிய வேண்டும் என உலகத்தால் போற்றப்படும் மாகாத்மா காந்தியினுடைய வேணவாவிலிருந்தே, திருவள்ளுவருடைய திருக்குறளால் சைவத் தமிழராகிய நாம் பெருமிதமும் இறுமாப்பும் கொள்ள வேண்டும்.

தி[illegible]வள்ளுவர் ஓர் தமிழர் என்பதில் எந்தவிதமான மாற்றுக்கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை. ஆனால் அவரது மதம் தொடர்பில் பல்வேறு மாற்றுக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவர் ஒரு சைவர், பௌத்தர், சமணர், கிறிஸ்தவர் என்றெல்லாம் பல்வேறு விதமாகக் கூறப்பட்டாலும், அவர் ஒரு சைவ சமயி என்பதே உண்மையாகும். இந்தப் பிரச்சினைக்குக் காரணம் திருக் குறள் மதிப்பிடமுடியாத ஒரு புதையலாகும். அந்தப் புதையலின் உரிமையை எவ்வாறாயினும் தாம் பெற்றுவிட வேண்டும் என்ற ஆதங்கத்தினால், இவ்வாறு கூறப்படுகின்றது. திருக்குறளில் தமிழ் தொடர்பாகவோ, சமயம் தொடர்பாகவோ எந்த இடத்திலும் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. ஆனால், திருக்குறள் தமிழ் இலக்கிய நூல் என்பதில் அசைக்க முடியாத வரலாற்று தொல்பொருள் ஆதாரங்கள் இருப்பதால், மதத்தில் உரிமை கோர முற்படுகின்றனர். வரலாற்று ஆதாரங்கள் குமரிக்கண்ட அழிவில் ஏனையவை அழிந்தது போன்று, இதுவும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அழிந்திருந்தால் திருக்குறளுக்கும் பல மொழிகள் உரிமை கோரியிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக் கருத்துக்களையும் 133 அதிகாரங்கள் 1330 குறட்பாக்களில் உள்ளடக்கியுள்ளது. அறத்துப்பாலில் உள்ள 38 அதிகாரங்களில் பாயிரவியல் 4, இல்லறவியல் 20, துறவறவியல் 13, ஊழியல் 01 மற்றும் பொருட்பாலில் உள்ள 70 அதிகாரங்களில் அரசியல் 25, அமைச்சியல் 10, அங்கவியல் 22, ஒழிப்பியல் 13 ஆகவும், காமத்துப்பாலில் உள்ள 25 அதிகாரங்களில் களவியல் 7, கற்பியல் 18 என 133 அதிகாரங்கள் அடங்குகின்றன. இவையனைத்தும் இரு அடிகளில் 7 சொற்களால் எழுதப்பட்டுள்ளன. இதன் பெருமையை ஔவையார் கடுகை தறித்து ஏழ் கடலைத் துளைத்துக் எம்பெருமானார் என்று கூறியதில் இருந்து இதன் கருத் தாழத்தை அறிய முடிகின்றது. இன்று போன்று தகவல் தொழில்நுட்பம் அன்று இருந்திருந்தால், இறுதியாகத் தோன்றிய சில மதங்கள் தோன்றியிருக்க வாய்ப் பில்லாது போயிருக்கும். இன்று போல் திருவள்ளுவரைப் பற்றி உலகம் அறிந்திருந்தால், திருவள்ளு வரும் ஓர் மதத்தின் கடவுள் ஆகியிருப்பார்.

தமிழருடைய தற்போதைய ஆண்டு 2047 திருவள்ளுவர் ஆண்டாகும். கிறிஸ்துவின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு கி.மு, கி.பி உருவானமை போன்று, திருவள்ளுவரின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு தி.மு, தி.பி பயன்படுத்தப்படுகின்றது. இன்று உலக மக்களால் பொதுவாகப் பயன்படுத்தப்படும் கிரிகோரியன் நாள்காட்டியில் பயன்படுத்தும் கிறிஸ்து ஆண்டானது, கிறிஸ்துவின் பிறப்பை சரியாகக் குறிப்பிடுவது அல்ல. ஒரு உத்தேசக் கணக்காகும். எவ்வாறு திரு வள்ளுவருடைய பிறப்பின் வரலாறும் உறுதியாக இல்லையோ அவ்வாறே இயேசு கிறிஸ்துவின் பிறப்பு வரலாறும் உறுதியாக இல்லை. கிரிகோரியன் நாள் காட்டியின் ஆண்டுக்கணக்கானது. 5ஆம், 6ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் சிரியாவில்



வாழ்ந்த தியோனிசியசு என்பவராலேயே கிறிஸ்து கணக்கு உருவாக்கப்பட்டது. அதுபோலவே திரு வள்ளுவர் ஆண்டுக்கணக்கு 2,000 ஆண்டுகால வரலாற்று ஆய்வாளர்கள், தமிழ்ப் புலவர்கள் எனப்பலரும் மலை மலை அடிகள் தலைமையில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1921 இல் ஒன்று கூடி இயேசுவினுடைய பிறப்புக்கு 31 ஆண்டுகள் முன் பிறந்தார் எனும் வரலாற்று ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டுதிருவள்ளுவர் ஆண்டைக்கணித்தனர். பின்னர் பல போராட்டங்களின் பின்னர் 1971 இல் தமிழக அரசு அதனைத் தமிழர் ஆண்டாக அறிவித்து 1972 முதல் நடைமுறைப்படுத்தி வருகின்றது. திருவள்ளுவர் நாளானது தைப்பொங்கல் தினத்துக்கு மறுநாள் திருவள்ளுவர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலக மக்களினால் விரும்பப்பட்டு தாமாகவே மொழிபெயர்த்து படிக்கும் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட புத்தகமாக திருக்குறள் திகழ்கின்றது. அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூலாக கிறிஸ்தவர்களுடைய பைபிள் இருந்தாலும் அது பண பலத்தாலும், ஆயுத பலத்தாலும் மக்கள் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டது. ஆனால், திருக்குறள் அவ்வாறன்றி, வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களைக் கொண்டிருப்பதால், மக்கள் தாமாகவே தத்தமது மொழிகளில் மொழி பெயர்த்து ஆர்வத்துடன் கற்கின்றனர்.

அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூலான பைபிள் தமிழ் உட்பட 531 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. கிறிஸ்தவமே உலகில் அதிக மக்களால் பின்பற்றப்படுகின்றது. இரண்டாவதாக அதிக மக்களால் பின் பற்றப்படும் இஸ்லாத்தினுடைய குர் ஆன் 47 மொழிகளிலும், நாத்திகத்துக்கு அடுத்த படியாக நான்காவது மதமாக விளங்கும் இந்து மதத்தின் பகவத்கீதை 24 மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆனால் திருக்குறள் ஆனது இன, மத, மொழி வேறுபாடு இன்றி, 80 இற்கு மேற்பட்ட பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

திருக்குறளானது ஆதிமொழிகளான செம்மொழிகள் அனைத்திலும் மற்றும் உலகத்தில் அதிகமான மக்களால் பேசப்படும் மொழிகளான மண்டோரின் (சீன மொழி) ஸ்பானிஸ், ஆங்கிலம், ஹிந்தி, அரபி, வங்காளி, ருஷ்யா மொழி, ஜப்பானிஸ், ஜேர்மனிய மொழி, மலே, தெலுங்கு, சொரியன், பிரஞ்ச் போன்ற மொழிகளிலும், சிங்கள மொழியிலுமாக 80 இற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. முதன் முதலில் 1730 இல் இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.

திருவள்ளுவர் ஒரு சைவர், சமணர், பௌத்தர், கிறிஸ்தவர் போன்ற கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றன. ஆனாலும் அவர் ஒரு சைவசமயி என்பதற்கான ஆதாரங்களை திருவாவடு துறை ஆதீனமாகிய சொரடாச் சேரி சிவத்திரு வாலையானந்த அடிகள், திருவள்ளுவர் சித் தாந்த சைவர் எனும் நூலிலும், கவியரசர் கண்ணதாசன் அர்த்த முள்ள இந்து மதத்திலும், குறிப்பிட்டுள்ளனர். அண்ணாமலை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சோ. சண்முகம் திருவள்ளுவர் ஓர் சைவசமயி எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளுவர் ஓர் பௌத்த சமயி எனக் கூறப்படுகின்றது. குறளிலே பௌத்த மத கருத்துக்கள் இருப்பது போன்ற ஓர் மயக்கம் தோன்றினாலும், வள்ளுவர் ஓர் இந்து என்பதற்கான ஆதாரங்களை குறளிலிருந்து மேற்படி அறிஞர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.

கோளில் பொறியிற் குணமிலவோ
எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

சிவனுக்கு மட்டுமே எண்குணங்கள் கூறப்படுகின்றன. புத்தருக்கு அல்ல. தன் வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின்று நீங்குதல், பேரருளுடமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை இவ்வாறு சைவ ஆகமத்திலும் திருக் குறளின் விளக்கவுரையில் பரிமேழளகரும் குறிப்பிடுகின்றார். இதை அப்பர் சுவாமிகள் எட்டுவான் குணத்து ஈசன் எனப்பாடியுள்ளார்.

> சிவனுக்கு மட்டுமே எண் குணங்கள் கூறப்படுகின்றன. புத்தருக்கு அல்ல. தன் வயத்தனாதல், தூயவுடம் பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களின்றும் நீங்குதல், பேரருளுடமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை இவ்வாறு சைவ ஆகமத்திலும் திருக்குறளின் விளக்கவுரையில் பரிமேழளகரும் குறிப்பிடுகின்றனர். இதை அப்பர் சுவாமிகள் எட்டுவான் குணத்து ஈசன் எனப்பாடியுள்ளார்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவனடி சேராதார்**

இதில் பிறவிப் பெருங்கடல் என்பது இந்துக்கள் கூறும் கருத்தாகும்.

ஐந்தவித்தான் ஆற்றல் அசல் விசும்புளார் இந்திரனே. சாலுங்கரி இந்துக்கள் இந்திரனை அகல்விசும்புளார் சோமன் என்று அழைப்பர். இதற்கு அகலியினுடைய கதையை உவமானமாகக் கொண்டு கெட்டுப்போனவனைக் காட்டி நல்லவனைப் புகழ்வதுபோல் ஐம் பொறிகளையும் அடக்காது சாபம் பெற்ற இந்திரனைக் காட்டி அடக்குவோரின் ஆற்றலை விவரிக்கிறார் வள்ளுவர்.

**கற்றதனால் ஆய பயன் என்கொல்**
**வாலறிவன் நற்றாள் தொழார் எனின்**

இதில் வாலறிவன் என்பது எங்கும் பிரகாசமாய் இருக்கும் ஈசனைக் குறிக்கும். மற்றும் தனக்குவமை இல்லாதான் எனும் குறளும் ஈசனைக் குறிக்கும். மலர் மிசை ஏகினான் என்ற குறளும், பிறவிப் பெருங்கடல் எனும் குறளும் ஈசனைக் குறிப்பதாக கவியரசு குறிப்பிடுகின்றார். பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றை பற்றுக பற்று விடற்கு என்றும், தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொல் தாமரைக் கண்ணான் உலகு. இந்துக்களின் தானமும் தவமும் என்ற இந்துத் தத்துவத்தைக் குறிக்கின்றார்.

மேலும், பெயக் கண்டும் நஞ்சுண்டமையவர் என்ற குறள் திருப்பாற்கடலை கடையும் போது ஆலகாலத்தை உண்ட திருநீல கண்டனையே குறிக்கும்.

ஆதிபகவன் என்ற கடவுள் வாழ்த்தில் பிரம்மா, விஷ்ணு, சிவன், புத்தனையும் பொருள் குறிப்பிட்டாளும் ஏனையவற்றுடன் ஒப்பிடும் போது தெளிவாக இந்து சமயக் கடவுளரைப் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளமை புலப்படுகின்றது. இந்திரனே சாலுங்கரி. இதில் இந்திரன் (தேவேந்திரன்) தேலோக அதிபதி இந்துக் கடவுள் ஆவார்.

தாமரைக் கண்ணன் என்றும், அறவாழி அந்தணன் என்றும், வேண்டுதல் வேண்டாமை இலான் என்றும் குறிப்பிடப்படுவது இந்துத் தெய்வத்தையே ஆகும். மூன்றாவது குறளில் இருள் சேர் இருவினையும் சேரா இறைவன் மற்றும் 10 ஆவது குறளில் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காலத்தில் இந்தியாவில் கிறிஸ்தவ, இஸ்லாம் மதம் இல்லை. இந்தியாவில் இருந்த ஏனைய மதங்கள் அப்போது இறைவன் எனும் சொல்லைப் பயன் படுத்தியதில்லை.

**வையத்துள் வாழ்வாங்கு**
**வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

என்ற குறளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துக்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போதும், நீத்தார் பெருமையில் இந் திரனைப்பற்றி குறிப்பிட்டுள்ள குறளை நோக்கும் போதும், புத்தரைக் குறிப்பது போன்ற ஒரு மயக்கம் தென்பட்டாலும் ஏனையவற்றுடன் ஒப்பிடும் போது அவர் சைவ சமயி என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் ஸ்ரீ ரமண மகரிஷியின் தரிசனப் பேறு

கே.எஸ்.சிவஞானராஜா

தந்தையே உன் ஆணைப்படி நான் வந்தடைந்து விட்டேன் என்று சுகமான அருள் பொங்க, சொல்லுணர்வு அடங்க, 1896 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் முதலாம் திகதி திருவண்ணாமலை வந்தடைந்தார் ரமண மகரிஷி. அங்கேயே தங்கி விட்டார். இந்தக் கலாதரிசன மகிமையை கடந்த 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, திருக்கேதீஸ்வரம் அம்மை அப்பன் மடத்தில் கண்டும், பார்த்தும், கேட்டும், பாடியும், உணர்ந்தும் அனுபவித்தோம். வருடா வருடம், சிவராத்திரிக்கு முதல் நாள் இந்த வைபவம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருவது சாலப் பொருத்தமாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும், மலையகத்திலிருந்தும், கொழும்பிலிருந்தும் பல ரமண மகரிஷியின் சீடர்கள் நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை பாக்கியமே.

### மடம்


திருக்கேதீஸ்வரத்தில் மடங்கள் பலவும், இல்லங்கள் பலவும் உயிர்ப்போடு இயங்கி வருகின்றன. அவையாவன:
சம்பந்தர் மடம், பூநகரி மடம், திருவாசக மடம், சிவராத்திரி மடம், அம்மையப்பர் மடம், அன்னபூரணி மடம், திருவாசகம் சபாரத்தின சுவாமிகள் இந்து கலாசார மண் டபம், நீர்ப்பாசனத் திணைக்களதாக சாந்தி நிலையம், எஸ்.ரி.ஆர்.தியாகராஜா சரஸ்வதி கலை கலாசார திருமண மண்டபம், சிவனருள் இல்லம் எனப் பல நிறுவனங்களிலும் சைவ சமயம் சார்ந்த ஆன்மிகக் கைங்கரியங்கள் தொய்வில்லாமல் நடைபெற்று வருவது போற்றற்குரியதொன்றாகும்.

### அம்மை அப்பன்

இந்த மடம் 365 நாள்களும், திருக்கேதீஸ்வர எம்பெருமான் எம்பெருமாட்டிக்கு ஏதோவொரு திருத்தொண்டை ஆற்றிய வண்ணம் உள்ளது. திருமதி சி.வல்லிபுரம், 2008 ஆம் ஆண்டிலிருந்து ஸ்ரீரமண மகரிஷியால் ஆட்கொள்ளப்பட்டவராய், ரமணர் குருபூசையை உள்ளன்போடு சிறப்பாகப் போற்றியும், வணங்கியும், நடத்தியும் வருகின்றார். இந்த வருடமும், மன்னாரில் வழமையை விடச் சிறப்பாக நடைபெற்றது. அம்மை அப்பன் மட நிறுவுநர் திருமதி சி.வல்லிபுரம் நிறுவுநராக இருப்பதன் பிரகாரம், விசேடமாக நிறுவப்பட்ட அடக்கமான மண்டபத்தில், மன்னார் கௌரி அம்பாள் பாடசாலை அதிபர் சசிதரசர்மா தலைமையில் ரமணரின் வாழ்க்கை அடியார்களுக்கு வரமாக்கப்பட்டது. மிகவும் எளிமையாகப் பிரார்த்தனைகளும் பேச்சுக்களும் இசையர்ச்சனைகளும் மாணவர்களது குழு நிகழ்ச்சிகளும் பக்திபூர்வமாக நடைபெற்றன. ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பாலசண்முகனும், மட்டக்களப்பு இசை விரிவுரையாளர் செல்வி சரஸ்வதி சுப்பிரமணியமும், ஆசிரியர் குகன் நல்லலிங்கமும், கே.எஸ்.சிவஞானராஜாவும் ஸ்ரீரமண மகரிஷியின் சரிதத்தைப் பேறாக்கினார்கள்.

### சரிதம்

மதுரைக்கப்பாலிலுள்ள திருச்சுழியில், அழகம்மையார் சுந்தரனார் தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக வேங்கடராமன் என்ற பெயருடைய ரமண பகவான் அவதரித்தார். அபார ஞானம், விளையாட்டுப் பராக்கு, துடிப்பான சிந்தனை, பரம்பொருள் நாட்டம், இலௌகீக நாட்டமின்மை, ஆன்மா அழியாத தொன்று, உடல் அழியக்கூடியதான தொன்று, அருணாசலமே அருட் தந்தை, அவனின்றி ஓரணுவும் அசையாது போன்ற பெறுமதியான முயற்சிகளில் வாழ்ந்து வெற்றி கண்டார்.
பதினாறாவது வயதில் இறப்பு தொடர்பான மரண பயம் ஏற்பட்டது. மரணம் என்பதைத் துருவித் துருவி ஆராய்ந்தார். மரணம் என்பது உடலுக்கே ஒழிய, உயிருக்கு ஏற்படுவதில்லை. உயிர் ஒரு போதும் அழிவதில்லை. அது என்றும் ஆனந்தமயமாய், பிரம்ம வடிவினதாய் கூடி நிற்கிறது. உடலே சலனப்படுவதாய் கலக்கமுற்று வாடிநிற்கிறது. ஆன்மா நித்ய சுகானுபவத்தை நுகர்ந்தபடி நிரந்தரமாய், பாச வலையில் சிக்காமல் பதியை நாடிப் பரவசமடைகிறது. இவ்வாறு தான் என்ற நான் என்பதுதான் உண்மையானது. இந்த உடலுக்கும், உலகுக்கும் உண்மையாகவும், உயிராகவும் இருப்பது உயிரான ஆன்மாவேயாகும். உடல் உயிரை விட்டும், உயிர் உடலை விட்டும் நீங்கும்போது உடல் சவம் ஆகிறது. உயிர் சிவம் ஆகிறது. இந்தப் பேருண்மையை உணர்ந்தவேளை, ஸ்ரீரமணர், மரண பயம் நீங்கி பூரண ஞானியாக, அருணாசல அருட்தந்தையை நாடி, திருவண்ணாமலைக்கு, 1896ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி வருகை தந்தார்.



தந்தையேஉன்ஆணைப்படி உன்னிடம் வந்தடைந்து விட்டேன் என்று ஆன்மதேட்டம் பெற்றார். மௌனமாக இருப்பதுவே சுகமளிக்கும் என்பதை அனுபவமாக உணர்ந்து, எது எது நடக்குமோ அது அது அவரவர் பிராப்தப் பிரகாரத்தின்படி நடக்கும். இதனை எவராலும் தடுக்க முடியாது என்பதை மிகவும் தெளிவாக அகத்திலிருத்தி, பெற்ற தாயாருக்கும் பணி வோடு இதை எடுத்தியம்பி, திருவண்ணாமலை விருபாட்சி குகையிலும், கந்தாச்சிரமத்திலும் தாயாருடன் வாழ்ந்து வாய்விடாச் சாதிகளான பசு, ஆடு, நாய், காக்கை, மான் ஆகியவற்றுக்கு உரிய ஆயுள் வரையும் காத்திருந்து, முத்தியளித்து, சமாதியும் வைத்து வணங்கினார்.
தாயாரும் ரமணரின் திருவிளையாடல்களை உணர்ந்து, தெய்வீக சாம்ராச்சியத்தில் புகுந்தவராய், 1922 ஆம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி முத்தி பெற்றார். மலையடி வாரத்தில், பாலி தீர்த்தக் கரையில் தாயாரது சமாதி நிறுவப்பெற்று, இன்று பெரியதோர் ரமணாச்சிரமமாக வளர்ந்திருக்கிறது. இங்கிருந்தே உலகெங்கும் சமத்துவத்தின் குரல் ஓங்கி ஒலித்த வண்ணம் உள்ளது. ரமணரின் சகவாழ்வு எமது நாட்டில் துளிர்விட மன்னாரில் நடைபெற்ற இந்த விழாவும், குருபூசையும் வழி சமைத்ததெனலாம்.

### பேறு

திருவண்ணாமலையை ரமணர் வந்தடைந்தபோது அவருக்கு வயதோ பதினேழு ஆகும். 54 வருடங்களாக இங்கு மௌன உபதேசம் செய்தருளிய மகானாய் அருளாசி நல்கினார். ஏராளமான பக்தர்கள் இவருடைய நயன தீட்சையால் ஆன்ம வாலாயம் பெற்றனர். ஆனந்த வெள்ளத்தில் மிதந்தனர். அம்மையப்பன் இல்லத்திலும், ஸ்ரீரமண மகரிஷியின் அருட்பிரவாகம் நிறைந்தது. சமத்துவம், சகோதரத்துவம், சகவாழ்வு, சமாதானம், சாந்நித்தியம், சாந்தியம், சாரீர சரீர சுகானுபவம், சௌபாக்கியம், சந்தோசம், சத்தியம் சிவம் சுந்தரம், சாலோப சாமீப, சாரூப, சாயுச்சிய ஆகிய சகல பேறுகளையும் இந்தத் தரிசனப் பிரார்த்தனை அள்ளித் தந்தது.
அவர் அருளிய நூற்றெட்டு அருணாசல அட்சரமணமாலை இசையோடு பாடப்பட்டது. தீர்க்க ஆயுளையும், தீராத பக்தியையும் தரவல்ல இந்தப் பாடல்களைத் தேடிக் கனிந்து பாடுங்கள். தோசம் யாவும் நிச்சயம் நீங்கும். 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி ரமண பகவான் சிவப்பேறடைந்தபோதும் அவரது அருளாட்சி மன்னாரிலிருந்து பிரவாகிக்கின்றது.

# தமிழ் இலக்கியங்கள் பேசும் அல்லி






இலங்கையின் புதிய தேசிய மலராக அல்லி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நீலோற்பலம் என்றும் நீல அல்லி என்றும் அழைக்கப்பட்ட மலரையே 1986 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் தேசிய மலராகக் குறித்து வந்தனர். ஆயினும் இம்மலர் இலங்கைக்குரியதல்ல என அறியப்பட்ட நிலையில், அல்லி மலரைத் தேசிய மலர் ஆக்குவதற்குரிய தீர்மானம் அமைச்சரவையால் எட்டப்பட்டுள்ளது. உயிரியல் பல்வகைமை செயலகத்தின் பணிப்பாளர் பத்மா அபேக்கோன் இதனை உறுதிப்படுத்தியதோடு, இலங்கையின் தேசிய மலர் பற்றிய அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார். புத்த பெருமானுக்கு மிக விருப்புடன் அர்ப்பணிக்கப்படும் மலர்களுள் அல்லி மலரும் ஒன்றாகும். இலங்கைக்குப் பெருமை சேர்க்கும் சிகிரிய ஓவியத்தில் பெண்களின் கைகளில் அல்லி மலர் உள்ளமையை அவதானிக்க முடியும்.
தமிழகத்தில் உள்ள திருவல்லிக்கேணி, பாரதியாருடன் தொடர்புடைய இடம். அவர் இங்கேதான் யானையால் தாக்குண்டார். இந்த ஊருக்கு ஏன் இப்பெயர் வந்தது என ஆராயும்போது திரு அல்லி கேணி என்பதன் வடிவமே திருவல்லிக்கேணி என அறியமுடிகின்றது.
சங்க காலத்தில் அதாவது இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் பெண்களின் உள்ளங்கையை அல்லி மலருக்கு ஒப்பிட்டு அழகு பார்த்தனர். பாதத்தைத் தாமரைக்கும் உள்ளங்கைகளை அல்லிக்கும் ஒப்பிட்டனர். மென்மையைக் கருதியே இந்த ஒப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.
சங்க இலக்கியங்கள் பலவற்றில் அல்லி பற்றிய செய்தியைப் பார்க்கக் காணலாம். சங்க காலத்தில் கணவனை இழந்து கைம்மை நோன்பு நோற்கும் பெண்கள் காமவயப்படாது இருப்பதற்காக உணவுகளைத் தேர்ந்து உண்டனர். அந்த உணவில் பெரும்பாலும் அல்லியரிசி இருந்ததாகப் புறநானூற்றுப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. அல்லிப்பூவின் உள்ளீடாகவுள்ள சிறு விதைகளையே அல்லியரிசி எனக்குறிப்பிட்டனர். கூந்தலைக் கத்திரித்து, வளையல்களை நீக்கி, அல்லியரிசியை உணவாகக் கொண்டு கைம்மை நோன்பு நோற்ற பெண்கள் வாழ்ந்ததாகப் புறநானூற்றுப் பாடல் ஒன்று பேசுகின்றது. அல்லிப் பூவுக்குள்ள மற்றொரு பெருமை வைணவம் போற்றும் முதல் மூன்று ஆழ்வார்களுள் மூன்றாமவராகிய பேயாழ்வார் அல்லி மலரிலேயே தோன்றினாராம். துவாபர யுகத்தில் திருமயிலை கேசவப் பெருமாள் சந்நிதிக்கு அடுத்துள்ள பொய்கையில் அல்லிப் பூவில் இவர் தோன்றினார் என வைணவ நூல்கள் பேசுகின்றன. மாணிக்கவாசகர் காலத்தில் நீரில் வளர்ந்த கொடிப்பூவாகிய அல்லியை இறைவனுக்குச் சூட்டப் பெண்கள் பறிப்பதாகத் திருவாசகப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. 'இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன் அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற புணையாளன் சீர்பாடிப் பூ அல்லி கொய்யாமோ பூவல்லி கொய்யாமோ' என அழைக்கும் இருபது பாடல்கள் திருப்பூவல்லியாக மாணிக்கவாசகரால் பாடப்பட்டன. அல்லி மலரைக் கொண்டு மாலை கட்டிய செய்தியை சுந்தரரது திருத்தொண்டர்த் தொகையின் ஊடாகக் காண்கின்றோம். அல்லி மென்முல்லை அந்தார் அமர் நீதிக்கு அடியேன் என்ற அடியின் ஊடாக இச் செய்தி தெளிவாகின்றது. விஞ்ஞான ரீதியில் அல்லி நிம்பசியே குடும்பத்திற்குரியது. தமிழ் இலக்கியங்களில் பேசப்படுகின்ற தொன்மையான மலர் இலங்கையின் தேசிய மலராகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது நமக்கும் பெருமை தரும் விடயம்தானே.

ச.லலீசன், பிரதி அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இது புதுசு

# கவரிங் நகைகள்

நுணுக்கமான வடிவமைப்பில் கவரிங் நகைகள் அறிமுகமாகியுள்ளன. நுண்ணிய வேலைப்பாடுகளுடன், தங்கம் போலவே காட்சியளிக்கக் கூடிய கவரிங் நகைகள் விற்பனை செய்யப் படுகின்றன. இவற்றின் விலை 4000 ரூபா தொடக்கம் 4500 ரூபா வரையாகும்.



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 500 | 600 | 600 | 700 | 700 | 600 | 700 |
| நண்டு | 200 | 500 | 300 | 400 | 400 | 100 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 500 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 500 | 500 | 450 |
| சுறா | 500 | 500 | 600 | 800 | 600 | – | 500 |
| சீலா | 250 | 400 | 400 | 450 | 400 | 450 | 300 |
| விளை | 600 | 500 | 400 | 500 | 650 | 400 | 450 |
| முரல் | 250 | 350 | 350 | 400 | 300 | 300 | 350 |
| கும்பிளா | 300 | 350 | 300 | 400 | 400 | 400 | 200 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 300 | 350 | – | – | 450 | – | 300 |
| திரளி | 200 | 300 | 200 | 200 | 300 | – | 300 |
| நகரை | 150 | 300 | – | 250 | 300 | – | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 100 | – |
| ஓட்டி | 250 | 250 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 350 | 300 | 400 | 130 |
| மதனம் | 150 | 200 | 180 | 300 | 270 | – | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 120 | 80 | – |
| பாலை | 350 | 200 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | 350 | 300 | 300 | 200 |

## நாளை

பங்குனி -04
வியாழக்கிழமை
17.03.2016
திதி: நவமி
பி.ப.02.24 வரை
நட்சத்திரம்: திருவாதிரை
பி.ப.12.21 வரை
ராகுகாலம்:
01.49-03.19 வரை
சுபநேரம்:
07.49-09.19 வரை

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | [illegible] | நெல்லியடி | திருநெல்வேலி | [illegible] | [illegible] | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 40 | 40 | 40 | 25 | 30 |
| கத்தரி | 100 | 80 | 100 | 100 | 100 | 100 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 120–200 | 120 | 120 | 160 | 80 | 180 |
| மரவள்ளி | 60 | 50 | 40 | 40 | 50 | 60 | 35 | 45 |
| பயிற்றை | 80 | 80 | 70 | 80 | 60–70 | 60 | 40 | 50 |
| பாகல் | 200 | 120 | 150 | 120 | 100 | 120 | 100 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | – | 60 | 120 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 70 | 80 | 80 | 80 | 80 | 80 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 50 | 80 | 60 | 90 | 70 | 60 |
| பூசணி | 60 | 40 | 40 | 80 | 40 | 60 | 40 | 30 |
| தக்காளி | 30 | 40 | 30 | 50 | 40 | 40 | 25 | 30 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 40 | 40 | 40 | 35 | 30 |
| கீரை | 40 | 50 | 40 | 15 | 30 | 30 | 15 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 25 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 140 | 140 | 150 | 120 | 200 | 130 | 140 |
| புடோல் | 50 | 60 | 50 | 40 | 50–60 | 60 | 30 | 60 |
| கோவா | 50 | 50 | 50 | 50 | 50 | 60 | 35 | 40 |
| வெண்டி | 60 | 80 | 50 | 60 | 80 | 80 | 60 | 60 |
| போஞ்சி | 100 | 120 | 160 | 140 | 80 | 120 | 40 | 90 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 | 140 | 120 | 160 | 70 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40–50 | 30–40 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 75 | 80 | 70 | 80 | 65 | 100 |
| தேசிக்காய் | 150 | 120 | 120 | 100 | 80–100 | 40 | 90 | 90 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20– 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 140 | 120 | 160 | 100 | 120 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 130 | 160 | 140 | 100 | 90 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 350 | 300 | 300 | 400 | 350 | 250 |
| பனங்கிழங்கு | 05 | 05 | 05 | 02 | 05 | – | 03 | 03 |



# வெந்தயக் களி

**தேவையானவை:**
புழுங்கல் அரிசி – 300 கிராம்
உளுத்தம் பருப்பு – 50 கிராம்
வெந்தயம் – 50 கிராம்
நல்லெண்ணெய் – 50 கிராம்
சர்க்கரை – 300 கிராம்

**செய்முறை:**

புழுங்கல் அரிசியை ஊற வைத்து அரைத்துக் கொள்ளவும்.

இரவே ஊற வைத்த வெந்தயத்தை உளுத்தம் பருப்புடன் சேர்த்து நன்கு அரைத்துக்கொள்ள வேண்டும்.

பின்னர் அரிசி மாவுடன் இதனைக் கலந்துகொள்ள வேண்டும்.

தோசை மா பதத்துக்குக் கரைத்து, வடைச் சட்டியில் ஊற்றி நல்லெண்ணெய் ஊற்றி கரண்டியால் கலக்கிக்கொண்டே இருக்க வேண்டும்.

மாக் கரைசல் கெட்டியாக களிபோலத் திரண்டு வரும்போது தீயின் அளவைக் குறைத்து சர்க்கரையைத் தூவிக் கிண்ட வேண்டும்.

அவ்வாறு கிண்டும்போது கட்டிகள் வராதவண்ணம் நன்கு கிண்ட வேண்டும்.

தேவையான அளவில் உருண்டைகளாக உருட்டிக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான் வெந்தயக் களி தயாராகிவிடும்.

உடல் சூடு, வயிற்றுப்புண், வாய்ப்புண் உள்ளவர்கள் தொடர்ந்து மூன்று நாள்கள் சாப்பிட்டு வர நோய் நீங்கும்.

# சமைக்க சில குறிப்புகள்

கீரை சமைத்த பின் பசுமையாகவும் ருசியாகவும் காணப்பட வேண்டுமானால், கீரையை வேகவிடும்போது சிறிது எண்ணெயை அதனுடன் சேர்க்கவும்.

ஒரு புது விதமான அடை செய்வதற்கு, அரிசி உப்புமா செய்யும்போது அதில் கொஞ்சம் வேகவைத்த காராமணியைக் கலந்து அடையாகத் தட்டி, இட்லித் தட்டில் வேக வைத்தும் சாப்பிடலாம்.

சர்க்கரை வள்ளிக்கிழங்கை வேறு விதமாக சமைத்துச் சாப்பிட விரும்புபவர்கள், சர்க்கரை வள்ளிக்கிழங்கை வேக வைத்து தோலுரித்து, அடை மாவில் சேர்த்துப் பிசைந்து அடை செய்து சாப்பிடலாம்.

ஏலக்காயைப் பொடித்துப் போடவும் என்றவுடன் பலரும் ஏலக்காயை அப்படியே அம்மியில் வைத்து பொடிக்க முயற்சி செய்வர். இது நன்கு பொடியாகாது.

ஏலக்காயை வெறும் சட்டியில் சிறிது நேரம் வறுத்து பிறகு பொடியாக்கவும். எளிதாய் பொடியாகும்.

அதேசமயம், ஏலக்காயைத் தட்டிப் போடவும் என்ற இடத்தில், வறுக்காமல் ஏலக்காயை சிறிது சீனியுடன் அம்மியில் வைத்து, இலேசாக இடித்துப் போடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிர்காலம் குறித்த அக்கறை உண்டாகும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்குச் சேமிப்பைப் பயன்படுத்துவர். வாகனப் பயணத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.

**இடபம்:** குடும்ப நலனில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணவரவு அதிகரிக்கும். வீடு வாகனத்தில் தேவையான புதிய மாற்றம் செய்வீர்கள்.

**மிதுனம்:** சொந்த விடயம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். குடும்பச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். விஷ ஜந்துக்களிடம் விலகியிருப்பது நல்லது.

**கடகம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**சிங்கம்:** வாழ்வில் பெற்ற வசதியைப் பெரிதெனக் கருதுவீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். வருமானம் உயரும். அரசியல்வாதிகள் அனுகூலம் காண்பர்.

**கன்னி:** பிறர் உதவியை நாட வேண்டாம். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். ஒவ்வாத உணவு உண்பதைத் தவிர்க்கவும்.

**துலாம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்றுக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். நிர்வாகச் செலவு அதிகரிக்கும். தெய்வ வழிபாடு, மன அமைதியைத் தரும்.

**விருச்சிகம்:** குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும். நண்பருக்கு தேவையான உதவி புரிவீர்கள்

**தனுசு:** அவமதித்தவரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். பணவரவு திருப்தி அளிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**மகரம்:** நண்பர் விடயத்தில் அதிருப்தி உண்டாகும். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தைக் கடைப் பிடிப்பது நல்லது. ஆரோக்கிய விடயத்தில் அக்கறை தேவை.

**கும்பம்:** நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். வெளியூர் பயணத்திட்டத்தில் மாறுதல் செய்வீர்கள்.

**மீனம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் ஆடை ஆபரணம் வாங்குவர்.


## வருகிறது வாலிப ராஜா

"கண்ணா லட்டு தின்ன ஆசையா" படத்தின் வெற்றிக்குப் பிறகு அந்தப் படத்தில் நடித்த சேது, விசாகா, சந்தானம் ஆகியோர் மீண்டும் ஒன்றாகச் சேர்ந்து நடிக்கும் படம் "வாலிப ராஜா". இந்தப் படத்தில் சந்தானம் மனநல மருத்துவராகவும், சேது வடிவமைப்பாளராகவும், விசாகா மனநல மருத்துவம் படிக்கும் மாணவியாகவும் நடித்துள்ளனர். படத்தில் இவர்களுடன் ஜெயப்பிரகாஷ், விடிவி கணேஷ், தேவதர்ஷினி, சந்தான பாரதி உள்ளிட்ட நட்சத்திர பட்டாளமும் இணைந்துள்ளது. மேலும், இந்தப் படத்தின் மூலம் ஹொலிவூட் நடிகை நுஸ்ரத் என்பவரும் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமாகிறார்.

கே.வி.ஆனந்திடம் உதவியாளராகப் பணிபுரிந்த சாய் கோகுல் ராம்நாத் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ள இந்தப் படத்தை "வாங்ஸ் வின் ஒன்" என்ற படநிறுவனம் தயாரித்துள்ளது.

கண்ணா லட்டு தின்ன ஆசையா திரைப்படைப் பாணியில் முழுநீள நகைச்சுவைப் பொழுது போக்குப் படமாக உருவாகியிருக்கும் இந்தப் படத்துக்கு ரதன் இசையமைத்திருக்கிறார்.

படம் வெளியீட்டுக்குத் தயாராகி ஒரு வருடத்துக்கு மேலாகிறது. கடந்த வருடமே வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட படம், சில காரணங்களால் வெளியாகவில்லை. இந்த நிலையில் மார்ச் 25 ஆம் திகதி கண்டிப்பாக திரைக்கு வரும் என்று படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.







நான் 9,000 கோடியை ஏமாத்திட்டு வெளிநாட்டுக்கு ஓடிவிட்டேன். ஆனால் நீங்க 1.76 லட்சம் கோடியை ஏமாத்திட்டு இன்னும் ஊருக் குள்ளயே நிக்கிறீங் களே? அப்ப நீங்க பலே கெட்டிக்காரன்.




**சிந்தனைவாதி** @PARITHITAMIL Feb 28

இவர்களைக் கண்டு பிடிக்க
ஞானி– அமைதியாக இருப்பான்.
பணக்காரன்– சிரிக்க மாட்டான்
பைத்தியக்காரன்– பேசிக் கொண்டே இருப்பான்.



**புகழ்** Mar 6

அப்பா ஊர் பஞ்சாயத்தே கதி என்று இருப்பார்...
மகன் தெரு தேநீர்கடையே கதி என்று இருப்பான்...
என்பேரன் அவங்க மாதிரி இல்லை..
தானுண்டு தன் போனுண்டு...

WhatsApp

**ஆறாம் வகுப்பு மாணவன்:** எனது குணம் உங்களுக்குப் பிடிச்சிருக்கா?

**ஆசிரியை :** ஆமாம்.

**ஆறாம் வகுப்பு மாணவன் :** அப்படியானால், எனது அம்மா அப்பாவை வரச்சொல்லி உங்கள் வீட்டில் பேசச் சொல்லட்டுமா?

**ஆசிரியை :** டேய் முட்டாள்... உன்னுடைய மன திலை என்ன நினைச்சுக்கிட்டு இருக்கிறாய்?

**ஆறாம் வகுப்பு மாணவன் :** ஐயோ.... நான் டியூசனுக்கு வாறதைப் பற்றிச் சொன்னேன்...



## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 8 | |
| | 2 | 1 | | | 6 | | 7 | |
| | | 4 | 8 | 3 | | | | 9 |
| 5 | | | 3 | | 2 | | | |
| | 3 | | 6 | | | 7 | | |
| | | | | 5 | | | | |
| | | | | | 1 | | | |
| | | | | 6 | 9 | 4 | | 5 |
| | | 2 | | | | | 9 | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 6 | 1 | 2 | 5 | 4 | 7 | 9 |
| 2 | 1 | 7 | 9 | 6 | 4 | 3 | 5 | 8 |
| 4 | 9 | 5 | 8 | 7 | 3 | 2 | 1 | 6 |
| 9 | 8 | 1 | 7 | 4 | 2 | 6 | 3 | 5 |
| 5 | 7 | 4 | 6 | 3 | 1 | 9 | 8 | 2 |
| 3 | 6 | 2 | 5 | 8 | 9 | 7 | 4 | 1 |
| 1 | 2 | 8 | 4 | 9 | 7 | 5 | 6 | 3 |
| 7 | 5 | 3 | 2 | 1 | 6 | 8 | 9 | 4 |
| 6 | 4 | 9 | 3 | 5 | 8 | 1 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
14 . 11 . 1952

ஆண்டவன் அடியில்
19 . 03 . 2013

திருமதி அமுதரத்தினம் (அமுதா) கணேசமூர்த்தி

திதி: 16.03.2016 (பூர்வபக்க அட்டமி)

மூன்றாண்டுகள் ஆனாலும் ஓயுமோ உம் நினைவு -எம்
ஊனோடும் உணர்வோடும் ஒன்றாய்க் கலந்த உத்தமியே !
வேரூடே நீர்சுரந்து விழுதுகளைத் தாங்கிநின்றீர் !
வேண்டுவன வெல்லாம் வேண்டாமலே விரும்பி ஈர்ந்தீர் !
சீரான வாழ்வு தந்து சிறப்போங்கச் செய்த அம்மாவே !
சேயர் நாம் செய்வதறியாது சிந்தை கலங்கி நொந்தோம்
தீராத நினைவலைகள் தினந்தினமும் வந்தெம்மைத்
தெருட்டுவதும் தெய்வமே அறியாயோ ?
நீரோடுங் கண்களுடன் நிதமும்மைப்போற்றி நின்றோம்
நேயமுடன் வாராயோ ! நிம்மதியைத் தாராயோ

(c 29825) (14,17,20)

இல.14 கோவிலாக்கண்டி,
நாவற்குழி கிழக்கு, கைதடி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## திருட்டு

நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்தவர்கள் கோயில் திருவிழாவுக்குச் சென்றிருந்தவேளையில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து வீட்டு உரிமையாளரால், பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும், அதன்படி விசாரணை முன்னெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளை அடுத்துச் சந்தேகத்தில், துன்னாலையைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்ததாகவும், அவரிடமிருந்த 30 ஆயிரம் ரூபா பணத்தை மீட்டுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார், திருடப்பட்ட நகைகளை அவர் நேற்றுக் காலை வங்கியில் அடகு வைத்தமை தெரியவந்ததாகவும் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விசாரணையின் பின்னர் நீதி மன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.

(த-வ-4-108)

## ஏழாலை

முறைப்படுத்தப்பட வுள்ளது.

பிரிவு 01: காலை 7 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரையிலும், மாலை 6 மணி முதல் இரவு 8மணிவரையிலும், பிரிவு 02 : நண்பகல் 12.30 முதல் மாலை 6 மணி வரையிலும், இரவு 8 மணி முதல் இரவு 10 மணி வரையிலும் இந்த மின் வெட்டு நடை முறைப்படுத்தப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-வ-5)


# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



கடந்த 08.03.2016 சிவபதம் எய்திய

அமரர் ஸ்ரீமதி ஞானாம்பிகை அம்மா சண்முகரத்தினக்குருக்கள்

அவர்களின் ஆன்ம ஈடேற்றக் கிரியைகள் பின்வரும் தினங்களில் இடம்பெறவுள்ளன.

★16.03.2016 (புதன்கிழமை) 6.00 மணி பங்குனித் திங்கள் 3 ஆம் நாள் தசாகம்
★17.03.2016 (வியாழக்கிழமை) 8.00 மணி பங்குனித்திங்கள் 4 ஆம் நாள் ஏகோதிஷ்டம், மாசிகம்
★18.03.2016 (வெள்ளிக்கிழமை) 8.00 மணி பங்குனித்திங்கள் 5 ஆம் நாள் சபிண்டீகரணம்
★19.03.2016 (சனிக்கிழமை) 12.00 மணி பங்குனித்திங்கள் 6 ஆம் நாள் கிருஹயக்ஞம் (சமாராதனை/ மதியபோசனம்)

மேற்படி தினங்களில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளில் பங்கெடுத்து அன்னாரின் ஆத்மா இறையடியில் சாந்திபெற பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வீரபத்திரகோவிலடி,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(69778) (12.13.18.19)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர் திருமதி

அம்பிகையம்மா (கண்ணகி) தியாகராஜா

தோற்றம்
04.05.1942

மறைவு
27.03.2015

ஆண்டு ஒன்று ஆனபோதிலும்
பறந்துசென்ற உங்கள் அன்பினைப் பிரிவதனால்
சோகத்தில் நாமிங்கு தவிக்கின்றோமே - நாள்தோறும்
சோகம் எனும் கடல்தனில் மூழ்குகின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள் இங்கு ஆனபோதும்
எம் தலைவி உங்களுக்கு நிகர் தான் எதுவோ? எம் வாழ்விலே
நீங்கள் இல்லாத எம் கோயில் கொண்டவீடு வெறிச்சோடியது
நிம்மதி ஏதுமின்றித் தவியாய்த் தவிக்கின்றோம்
உற்றவொரு துணைபோன்று உங்கள் ஆத்மா எம்முடன்
உடனிருந்து நல்லதொரு வழியதனைக் காட்டுமம்மா
நீங்கள் எமைக் காலமெல்லாம் கண்களிரண்டின் இமைபோல
காத்திடுவீர் எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே......

அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(69960) (13.18.20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேயா

சேயா சந்தவமி பக்மீதெனிய, கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி வீட்டிலுள்ள கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த போது கடத்தப்பட்டார். அவரைப் பெற்றோர் ஊரார் தேடி வந்த நிலையில், 2 நாள்களின் பின்னர் அவரது வீட்டுக்கு அண்மையிலுள்ள வாய்க்காலிலிருந்து அதாவது 13 ஆம் திகதியன்று, சடலமாக மீட்கப்பட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின்போது, சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்தது. அதன்படி விசாரணையை முன்னெடுத்த பொலிஸார் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் பிரதான சந்தேகநபரான சமன் ஜயலத்தின் சகோதரன் முதலில் கைது செய்யப்பட்டார். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் அவரது சகோதரனான சமன் ஜயலத் கைது செய்யப்பட்டார். அவர் மீதான விசாரணையின் போது, அவர் குற்றம் புரிந்ததை ஏற்றுக் கொண்டார்.

அவரது இரத்த மாதிரி மரபணு அறிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி குறித்த சிறுமியின் சடலத்தில் காணப்பட்ட மரபணுவும் சமன் ஜயலத்தின் மரபணுவும் (டி.என்.ஏ) ஒத்துப்போவதாக நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதனால் மேலதிக விசாரணை மற்றும் வழக்கு விளக்கம் மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது. சாட்சி அட்டவணையில் 30 பேர் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும், அதில் அறுவர் மட்டுமே சாட்சியளித்திருந்தனர். விளக்க விசாரணை ஜனவரி மாதம் 25 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டு, ஜனவரி 29 ஆம் திகதியன்று நிறைவடைந்தது. அதன்மூலமாக சமன் ஜயலத் குற்றவாளி என்று மேல் நீதிமன்றினால் அடையாளம் காணப்பட்டார்.

இந்த வழக்குக்கான தீர்ப்பு கடந்த 3 ஆம் திகதி வழங்கப்படவிருந்த நிலையில், பின்னர் 15 ஆம் திகதிவரை (நேற்று) ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அதன்படி நேற்று இந்த வழக்கு நீதிபதி மீபா ஜானகி ராஜரத்ன முன்னிலையில் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்படி சிறுமியைக் கொலை செய்த குற்றத்துக்காக மட்டும் அவருக்குச் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஏனைய குற்றங்களான சிறுமியைக் கடத்தியமை, துன்புறுத்தியமை வன்புணர்ந்தமை என்பவற்றுக்கு தலா 20 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்த குற்றங்களுக்காக, 45 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்த மேல்நீதிமன்று அபராதம் செலுத்தத் தவறினால் மேலும் 3 வருட கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறித்த வழக்கில் விசாரணைகள் விரைவாக இடம்பெற்று, நீதி வழங்கப்பட்டுள்ளபோதும், வடக்கில் நெடுந்தீவுச் சிறுமி வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டமை, புங்குடுதீவு மாணவி வித்தியா வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டமை உள்ளிட்ட பல வழக்குகள் இன்னும் விசாரணையின்றி நிலுவையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-4)

## அரசுக்கு

ஒன்றை மேற்கொண்ட நிலையில், அரசுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஆர்ப்பாட்டம், நேற்றுக் காலை இடம்பெற்றது. நாடுமுழுவதிலுமுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களையும் ஒன்றுதிரட்டி ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

பல்கலைக்கழகக் கல்வி, தனியார் மயப்படுத்தப்படுவதாகவும் அரசு தனியார்துறைக்கு கல்வியை விற்க முயற்சிப்பதாகவும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் குற்றஞ்சுமத்தினர்.

மேலும் பல்கலைக்கழகத்தினுள் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, மாணவர்களுக்கான சலுகைகளை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய அரசு தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதாகவும், இதனால் அரச பல்கலைக்கழக மாணவர்கள் பெரிய பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் இதற்காகத் தீர்வை அரசு உடனடியாக பெற்றுத்தர வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அரசுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுப் பிற்பகல் கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் நடைபெற்றது. லிப்டன் சுற்று வட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி ஹைட்பார்க் மைதானம் நோக்கிச் சென்றது. அரசின் வேலைத்திட்டங்களை வலுப்படுத்தும் நோக்கில் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார்.

ஒரே நாளில் அரசுக்கு ஆதரவாகவும், எதிராகவும் தலைநகரில் பேரணிகள் இடம்பெற்றதால் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டு மக்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகினர்.

(த-வ-சி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வையத்துள் 03 . 04 . 1947



தெய்வத்துள் 27 . 03 . 2015

**அமரர் சிதம்பரப்பிள்ளை கனகலிங்கம்**

அன்பின் ஊற்றாய் அமைதியின் சிகரமாய்
ஆற்றலின் ஆத்மாவாய்
இல்லத்தின் இனிய துணையாய்-நாம்
இன்புற்றிருக்க இடம் பல நகர்ந்து
ஈட்டம் தேடி இன்னல் களைந்து
உடலாலும் உள்ளத்தாலும் உண்மையான
மனிதமாய் வாழ்ந்திட்ட அப்பாவே
அவசரமாய் ஆண்டவன் தாள் புகுந்ததேனோ
அமைதியாய் அழுகின்றோம் நின் ஆத்மசாந்திக்காய்.

மடத்தடி மேற்கு வீதி,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் சின்னையா
**பொன்னுத்துரை (துரை)**

தோற்றம் 1942.05.18
மறைவு 15.02.2016

கடந்த (15.02.2016) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் சின்னையா பொன்னுத்துரை அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.03.2016) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
(69965) (12.17.20)
குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் அருணாசலம் இந்திரசேனன்**
(எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்-க.வ.ப.நோ.கூ.சங்-பரந்தன்)

01.02.2016 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் அருணாசலம் இந்திரசேனன் அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (16.03.2016) புதன் கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**பூபாலு சிவலிங்கம்**



கொட்டடி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலு சிவலிங்கம் 15.03.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூபாலு ஆச்சிப்பிள்ளை தம்பதியினரியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து-கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும், கோணேஸ்வரன் (ஆஸ்திரேலியா), கௌரி, விஜிதா(பிரான்ஸ்), தர்சினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சுபாசினி(ஆஸ்திரேலியா), கேதீஸ்வரன், ரங்கநாதன்(பிரான்ஸ்), நிமலநாத் ஆகியோரின் அன்பு மாமனாரும், தக்சிகன், சரண், பிரசாந், கார்த்திகா, கிசானி, அமுதா, அபினாஸ், ஆதித்யா, அஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவயோகம், செல்வரத்தினம், செல்வநாயகி, காலஞ்சென்ற வல்லிபுரம், வனிதநாயகி ஆகியோரின் சகோதரனும் செல்லத்துரை, புனிதவதி, சிவஞானம், மைனாவதி, பரமநாதன், லீலாவதி, செல்வதி, நாகராசா, யோகராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் றோட் 2 ஆம் குறுக்குத்தெரு,
கைலாயபிள்ளை வீதி,
சாவகச்சேரி.

**தகவல்**
குடும்பத்தினர்.
077 8837848

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண்ணில் மலர்ந்தது 16 . 09 . 1924



விண்ணில் கலந்தது 16 . 02 . 2016

கடந்த 16.02.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர் திதி: பூர்வபக்க நவமி
**செல்லப்பா சோமசுந்தரம்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 17.03.2016 வியாழக் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. 19.03.2016 சனிக்கிழமை அன்று மு.ப 10.00 மணியளவில் சொர்ணாம்பிகை மண்டபத்தில் (TCT Multi Trade Centre, Nallur) அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

80, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(69976)(15.17)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறைகேடான

வதற்கு நாம் ஒருபோதும் அனுமதியோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளதாவது:-

எமது மக்களுக்கு வீட்டு வசதி என்பது மிகவும் அத்தியாவசியமான ஓர் விடயம். இது மிகவும் அவசரமான விடயமும் ஆகும் . அதற்காக, மீள்குடியேற்ற அமைச்சினால் தற்போது 21 லட்சம் ரூபா பெறுமதியிலான வீட்டுத் திட்டம் அமைப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

இதில் வீடுகளை நிர்மாணிக்கும் நிறுவனத்தைக் கடந்த ஆண்டு ஜூலை மாதம் தேர்வு செய்த பின்பு, கண்துடைப்புக்காக ஒரு தேர்வு முறையை வைத்து அதே நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது .

அதனால் வீட்டுத்திட்டம் செயற்படுத்தப்படும் முறையில் முறைகேடு அல்லது ஊழல் இடம்பெறக்கூடாது என்பது தொடர்பில் நானும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தோம்.

இது தொடர்பாக ஆராய்வதாகப் பிரதமர் எம்மிடம் கூறியிருந்தார்.

அத்துடன், இந்தத் திட்டத்தில் கேள்வி முறை மட்டுமன்றி உலோக அமைப்பு முறைமை , காலநிலைக்கு ஏற்ற தன்மை , எமது மக்களின் வாழ்க்கை முறைமை என்பன வற்றுக்கு ஒத்ததா என்ற கேள்வியும் எழுகின்றது.

அவசர தேவை என்ற காரணத்துக்காக முறைகேடான வகையில் இடம்பெற நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது - என்றார். (த-வ-101)

## 2 அபிவிருத்தி

பின்னரே அவர், இலங்கைக்கு ஆதரவான இரண்டு திட்டங்கள்தொடர்பானஉடன்பாடுகளில்கையெழுத்திடவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தினால் அபிவிருத்திக்காக வழங்கப்படும் உதவிகளுக்குப் பொறுப்பானவராக, நிவென் மிமிகா பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

ஆணையாளர் நிவென் மிமிகா, இலங்கையில் தங்கியிருக்கும்போது, அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக குழுக்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

(த-வ-5)


# மரண அறிவித்தல்

## இராசதுரை செந்தில்குமரன்



நாவுறு கோவில் தெற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பெரியமடு நெடுங்கேணியை வதிவிடமாகவும் கொண்ட இராசதுரை செந்தில்குமரன் 14.03.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கயந்தினியின் அன்புக் கணவரும்,தமிழருவி, நுகர்ணி ஆகியோரின் தந்தையும், இராசதுரை - தவமணிதேவி தம்பதியரின் மகனும், நேசரத்தினம்- புஸ்பராணி தம்பதியரின் மருமகனும், சுகந்தி, வினோ, வசி, கஜிதா,,காலஞ்சென்ற கஜிபன் ஆகியோரின் சகோதரனும், நிரோஜன் ஜெனோகன், காலஞ்சென்ற நிறோஜா, ஐதுசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.03.2016) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பெரியமடு இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(68239) (11,17,20)
**077 041 7276**



# மரண அறிவித்தல்

## சின்னன் கணபதிப்பிள்ளை



எழுதுமட்டு வாழைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னன் கணபதிப்பிள்ளை 14.03.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னன்- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், சறோஜினிதேவி, வசந்தகுமாரி, இராசகுமாரி, சிவானந்தம் (சுவிஸ்) சிவறஞ்சினி (ஆசிரியை-யா/வயா விளான் மத்திய கல்லூரி), சிவாசினி (சங்கானை அரசினர் வைத்தியசாலை), சிவாசன் (ஜேர்மன்) சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்னப்பிள்ளையின் பாசமிகு சகோதரனும், சிவானந்தம் பாலசிங்கம், ஞானசேகரம் (காலஞ்சென்ற), சூட்டி (சுவிஸ்) சிறீகாந் (கல்வி உத்தியோகத்தர்) உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், அருண்பிரசாத் (சுவிஸ் ) அருணந் (சுவிஸ்), கம்ஷா, ஆர்த்திகா (சுவிஸ்), ஆருத்திரன் (சுவிஸ்) தூசானா ஆகியோரின் பேரனும், சியாரா (சுவிஸ்), றியா (சுவிஸ்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2016) புதன்கிழமை ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**எழுதுமட்டுவாழ் தெற்கு.** (69977) (10,17) **குடும்பத்தினர்.**



# மரண அறிவித்தல்



## தம்பு தர்மலிங்கம்

**பிறப்பு - 1940.07.02** **இறப்பு - 14.03.2016**

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கதிரிப்பாய் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தர்மலிங்கம் (மேசன்) கடந்த 14.03.2016 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணை - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தங்கப்பிள்ளையின் அன்புக்கணவரும் சுரேஸ் (பிரான்ஸ்), ரமேஷ் (லண்டன்), ஜெசிந்தா (இத்தாலி), கவிதா, வனதாஸ் (மலேசியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுபநிதா (பிரான்ஸ்), பிரதீபா (லண்டன்), மூர்த்தி (இத்தாலி), மதிவர்ணன் (டனுஸ்கா ரெஸ்ரோறன்ஸ் - உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் இராசா காலஞ்சென்றவர்களான அழகம்மா, இராசமலர் மற்றும் தம்புத்துரை (பிரான்ஸ்) காலஞ்சென்ற இராசமலர் ஆகியோரின் அன்புச்சகோதரனும் செல்லம்மா, அன்னலட்சுமி, பரிமளம், குண்டுமணி, மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஜெனி, கெபின், ஜஸ்வின், பிரீத்தி, ஆர்த்திகா, கனிஸ்ரன், டனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2016) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கதிரிப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**விரபத்திரர் கோயிலடி,**
**கதிரிப்பாய், அச்சுவேலி.** (69979) (15.17) **குடும்பத்தினர்.**



# மரண அறிவித்தல்

**மண்ணில்**
**14 . 01 . 1919**



**விண்ணில்**
**13 . 03 . 2016**

திருமதி
## தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம்

அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம் கடந்த (13.03.2016) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இளையபிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற **Dr.**குலேந்திரசிங்கம் (RMO கிருபோருவ வைத்தியசாலை - எட்டியாந் தோட்டை, சிங்கம் கிளினிக் - மல்லாகம், உடுவில்) மற்றும் கலாநிதி மகேந்திரசிங்கம் (University of Keele U.K), கேந்திரராணி (ஆஸ்திரேலியா), வரதராஜசிங்கம் (பட்டயக் கணக்காளர் U.K),காலஞ்சென்ற கலாநிதி கோபாலசிங்கம் (U.S.A) ஆகியோரின் அன்புத்தாயாரும் ராஜேஸ்வரி, கலாநிதி சாந்தினி (University of Keele), கருணாகரன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), சுமித்திரா (பட்டயக்கணக்காளர் - U.K) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் **Dr.**ராஜசிங்கம் (ராஜன், குமரன் TVER - RUSSIA), பத்மலா, சாமினி (University of Kent), கலாநிதி தேனுஜா (சிரேஸ்ட ஆராய்ச்சியாளர் - கனடா),அருவின் (சிரேஸ்ட அரசாங்க நிர்வாகி - ஆஸ்திரேலியா), **Dr.**கவிதா (U.K), கபிலன் (சட்டக்கல்லூரி மாணவன் - U.K) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2016) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**அம்பலவாணர் வீதி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.** (69975) (15.17) **குடும்பத்தினர்.**

**T.P:076 8035557, 077 4852311, 021 224 1278**



# மரண அறிவித்தல்

**மலர்வு**
**04 . 08 . 1929**



**உதிர்வு**
**13 . 03 . 2016**

## கந்தையா மாணிக்கவாசகர்

(இளைப்பாறிய இரசாயன பகுதி அதிகாரி - சீமெந்துக்கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், திருமகள் சோதி வீதி, நவிண்டில், கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மாணிக்கவாசகர் கடந்த (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மீனாட்சி தம்பதியினரின் தவப்புதல்வனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக்கணவரும் சூரியகுமாரி, கிருஷ்ணகுமாரி (பிரான்ஸ்), ராஜன் (சுவிஸ்), அருள் (கனடா) காலஞ்சென்ற சந்திரகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும் செந்திவேல், கலையழகன் (பிரான்ஸ்), டயானா (சுவிஸ்), செரில் (கனடா) ஆகியோரின் மாமனாரும் விஸ்ணுகரன் (ஜேர்மனி), விஸ்ணுயா (பிரான்ஸ்), விஸ்ணுபிரியா, கார்மேகன் (பிரான்ஸ்), கீர்த்திகன் (பிரான்ஸ்), கோசிகன் (பிரான்ஸ்), சோவ்பியா (சுவிஸ்), சந்திரின் (சுவிஸ்), அத்தையா (கனடா); சந்திறி (கனடா), ரேணு, செந்தூரன் (பிரான்ஸ்), ஐங்கரன் ஆகியோரின் பேரனும் தணிகாசலம், பரம்சோதி, குமாரசாமி, சின்னம்மா ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (17.03.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமகள் சோதி வீதி,**
**நவிண்டில், கரவெட்டி.** (c/29836)(15.17) **குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

**வைகறை வி.கழகத் தொடர்**

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வரு கின்றன. தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணி க்கு இடம்பெறும் ஆட்டத்தில் வசந்தசிறி அணியை எதிர்த்து வள்ளுவர் அணி மோதவுள்ளது.

**குணபாலசிங்கம் ஞாபகார்த்த தொடர்**

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது. தொடர்ந்து 7.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து மோதவுள்ளது.

**றோயல் வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் வடக்கின் சமர் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இன்று புதன்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டமொன்றில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ்அணிமோதவுள்ளது.

**வவுனியா வடக்கு கரப்பந்தாட்டம்**

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் பெண்களுக்கான ஆட்டங்கள் இன்று காலை 8.30மணி முதல் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422-23)



## நடராஜ இராமலிங்க வித்தியாலயம் சம்பியன் கோப்பாய் கோட்ட கரப்பந்தாட்டத் தொடரில்

கோப்பாய், மார்ச் 16

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 19வயது பெண்கள் பிரிவில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி 25:12, 25:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை அத்தியார் இந்துக் கல்லூரி அணி பெற்றது. (ம-422)

## நெடுங்கேணி கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

நெடுங்கேணி பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் காலை 8.30மணி முதல் நெடுங்கேணி பிரதேச பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. ஆண்களுக்கான தொடர் சனிக்கிழமையும் பெண்களுக்கான தொடர் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன. (ம-422)

## சென்.நீக்கிலஸ், சென்.அன்ரனிஸ் அணிகள் அரையிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 16

குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதிகளில் வெற்றிபெற்ற நாவாந்துறை சென்.நீக்கிலஸ், பாசையூர் சென்.அன்ரனிஸ் அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்கு தகுதி பெற்றுள்ளன.

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 7 மணி க்கு இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

## காளியம்பாளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் காளியம்பாள் ‘ஏ’ அணி வெற்றிபெற்றுள்ளது.

ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வள்ளுவர் அணியை எதிர்த்து தாவடிகாளியம்பாள் ‘ஏ’ அணி மோதிக்கொண்டது. இதில் தாவடி காளியம்பாள் ‘ஏ’ அணி 6:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## வென்றது மனோகரா இ.கழகம் கரவெட்டி துடுப்பாட்டத்தொடரில்

கரணவாய், மார்ச் 16

கரவெட்டி இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி வாலிபர் வட்டம் இளைஞர் கழகத்தை 74 ஓட்டங்களால் வீழ்த்தி பிரதேச சம்பியனாகியது மனோகரா இளைஞர் கழகம்.

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் குறித்த இறுதியாட்டம் இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அல்வாய் மனோகரா இளைஞர் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் இழப்பின்றி 91 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக சாதனா 46 ஓட்டங்களையும் சரண்யா 33 ஓட்டங்களையும் குவித்தனர்.



92 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய கரவெட்டி வாலிபர் இளைஞர் அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 17 ஓட்டங்களை மட்டும் பெற்று 74 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. பந்துவீச்சில் சாதனா 3 இலக்குகளையும் சரண்யா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-108)

## வென்றது விண்மீன்

யாழ்ப்பாணம், மார்ச் 16

றோயல் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பலாலி விண்மீன் அணி போராடி வெற்றிபெற்றது.

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டமொன்றில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது. இதில் பலாலி விண்மீன் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## நெடுங்கேணி மத்தி, ஜொலிஸ்ரார் இறுதியில்

நெடுங்கேணி பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நெடுங்கேணி தெற்கு மத்திய விளையாட்டுக்கழகமும், நெடுங்கேணி வடக்கு ஜொலிஸ்ரார் விளையாட்டு கழகமும் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

புளியங்குளம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதலாவது அரையிறுதியாட்டத்தில் நெடுங்கேணி மத்திய அணியை எதிர்த்து புளியங்குளம் புரட்சி அணி மோதியது. முதலில் துடுபெடுத் தாடிய புரட்சி அணியினர் 8பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக துசி 10 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பால்ராஜ் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுபெடுத்தாடிய மத்திய அணி 4 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக நீருஜன் 18 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் நெடுங்கேணி வடக்கு ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து வளர்மதி அணி மோதியது. முதலில் துடுபெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி நிர்ணயிக்கப்பட்ட 8பந்துப் பரிமாற்றங்க ளில் 4 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுகந்தன் 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரதாப், யுஸ்ரின் இருவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுபெடுத்தாடிய வளர்மதி அணி 7.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 41 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக தர்சன் 9 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கோபி, சுகந்தன் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் நுட்பத்தில் வீழ்ந்தது பங்களாதேஷ்

**பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத்தில்**



பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பங்களாதேஷை 72 ஓட்டங்களால் வீழ்த்தி அபார வெற்றியைப் பதிவு செய்தது இந்தியா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியில் உள்ள முன்னணி வீராங்கனைகளின் சிறப்பான துடுப்பாட்டத்தால் ஆரம்பத்திலேயே பலமான நிலையை அடைந்தது. 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அந்த அணி 5 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மிதாலி ராஜ் 42 ஓட்டங்களையும், கஉர் 40 ஓட்டங்களையும், வனித்தா 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக சர்மின் அக்தர் 3 இலக்குகளையும், கபிமா, ருமானா இருவரும் தலா இரு இலக்குகளையும், நட்கிதா அக்தர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷால் இந்தியாவின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க இயலவில்லை. அந்த அணி இலக்குகளை பெரிதளவாக இழக்காவிடினும், ஒருநாள் ஆட்டங்களுக்குரிய சராசரியிலும் கீழாகவே சென்றுகொண்டிருந்தது. இதனால் 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை முழுமையாகத் தாக்குப்பிடித்த போதிலும், பங்களாதேஷால் 5 இலக்குகள் இழப்புக்கு 91 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. அதிகபட்சமாக நிகர் சுல்தானா 27 ஓட்டங்களையும், சர்மின் அக்தர் 21 ஓட்டங்களையும், பாகிமா 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக பூனம் யாதேவ், அனுயா படில் இருவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர். (ம)



# நியூசியின் சுழலில் சுருண்டது இந்தியா

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 47 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது நியூசிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக களமிறங்கினார்கள் குப்திலும் வில்லியம்சனும். முதல் பந்துப்பரிமாற்றத்தை அஸ்வினிடம் ஒப்படைத்தார் டோனி. சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் குப்தில். அடுத்த பந்திலேயே குப்திலை வெளியேற்றினார் அஸ்வின். முன்றோ வந்த வேகத்தில் சிக்சர் ஒன்றை விளாச முதல் பந்துப்பரிமாற்றத்தில் 13 ஓட்டங்களைக் குவித்தது நியூசிலாந்து. முன்றோவை வெளியேற்றினார் நெக்ரா. மின்னல் வேக ஸ்டம்பிங் மூலம் வில்லியம்சனை அனுப்பினார் டோனி. அன்டர்சன் நிலைத்து நின்றாலும் அவரது ஆட்டத்தில் ரி-20 ஆட்டங்களுக்கு உரிய சராசரி இல்லை. 42 பந்துகளில் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொழுது அன்டர்சனை அனுப்பினார் பும்ரா. மொத்தத்தில் அன்டர்சனின் இன்னிங்ஸும் நியூசிலாந்துக்குப் பின்னடைவே. ரெயிலர், சான்நெர், எலியாட் மூவராலும் பெரிதாக சாதிக்க இயலவில்லை. றோஞ்சி பின்வரிசையில் சிறிது மிரட்டினார். 11 பந்துகளை எதிர்கொண்ட அவர் 21 ஓட்டங்களைக் குவிக்க முடிவில் நியூசிலாந்து 7 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக அஸ்வின், நெக்ரா, பும்ரா, ஜடேயா, ரெய்னா ஐவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய இந்தியாவுக்கும் ஆரம்பம் படு மோசமாக அமைந்தது. நாதன் மக்கலம் வீசிய முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார் தவான். ரோகித் சர்மா, ரெய்னா இருவரையும் ஒரே பந்துப்பரிமாற்றத்தில் வெளியேற்றினார் சான்நெர். யுவராஜை அனுப்பினார் நாதன் மக்கலம். தற்பொழுது இந்தியா 26-4. டோனியும் கோக்லியும் இணைந்து அணியை அழைத்துச் சென்றனர். இணைப்பாட்டம் நீடிக்க அனுமதிக்கப்படவில்லை. கோக்லியை வீழ்த்தினார் சொட்கி. இந்தியாவின் தோல்வி கிட்டத்தட்ட உறுதியானாலும் ஒரு முனையில் டோனி தொடர்ந்தும் அச்சுறுத்திக் கொண்டிருந்தார். மறுமுனை பலவீனமாகவே இருந்தது. பாண்டியா ஓர் ஓட்டத்துடனும் ஜடேயா ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். 30 ஓட்டங்களுடன் டோனியின் இன்னிங்ஸும் முடிவுக்குவர கூடவே 78 ஓட்டங்களில் சுருண்டது இந்தியா.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக சான்நெர் 4 இலக்குகளையும் சொட்கி 3 இலக்குகளையும் மக்கலம் இரு இலக்குகளையும் வீழ்த்தினர். சான்நெர் ஆட்ட நாயகனானார். (ம)

# இலங்கை படுதோல்வி

பெண்களுக்கான ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை-நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 7 இலக்குகளால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீராங்கனைகள் சிறப்பாகச் செயற்பட்ட போதிலும், அவர்களின் ஆட்டமிழப்பையடுத்து தொடர்ந்து களமிறங்கியவர்கள் அதிகம் நிதானிக்க, முடிவில் இலங்கை அணி 8 இலக்குகளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுரங்கிகா 37 ஓட்டங்களையும், மெண்டிஸ் 30 ஓட்டங்களையும், ஜெயங்கனி 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக கஸ்பிரேக் 2 இலக்குகளையும், ரகு, வைட், பேடிஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய நியூசிலாந்து ஆரம்ப வீராங்கனைகளின் சிறப்பான செயற்பாட்டால் 15.5 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக பேடிஸ் 37 ஓட்டங்களையும், பிறிரெட்ஸ் 28 ஓட்டங்களையும், எம். சான் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை சார்பாக ரணவீர, சிறிவர்தன இருவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (ம)

# வலிகாம ஹொக்கி

வலிகாமம், மார்ச் 16

வலிகாமக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான இருபாலாருக்குமான ஹொக்கித் தொடர் நாளை வியாழக்கிழமை காலை 8.30மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

# அப்ரிடிக்கு வந்த புதிய சிக்கல்

பாகிஸ்தானை விட இந்தியாவில் உள்ள ரசிகர்கள் அதிக பாசக்காரர்கள் என்று புகழ்ந்து பேசிய அப்ரிடிக்கு புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் அணி பல்வேறு பிரச்சினைகளைத் தாண்டி இந்தியாவுக்கு சென்றிருந்தது. அங்கு நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அப்ரிடி, 'இந்திய ரசிகர்கள் பாகிஸ்தான் ரசிகர்களை விடவும் மிகவும் பாசக்காரர்கள், அவர்களை என்றும் நினைவில் வைத்திருப்பேன். இங்கு பாதுகாப்புப் பிரச்சினைகள் எதுவும் இல்லை' என்று கூறியிருந்தார்.

இந்தியாவை பற்றி அப்ரிடி புகழ்ந்து பேசியதால் இதற்குப் பாகிஸ்தானில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. இந்த நிலையில் அஜார் சாதிக் என்ற மூத்த வழக்கறிஞர் ஒருவர் லாகூர் உயர்நீதிமன்றத்தில் அப்ரிடி மீது வழக்குத் தொடர்ந்துள்ளார். இதனையடுத்து அப்ரிடி தனது கருத்துக்குறித்து 15 நாள்களுக்குள் முறையான விளக்கம் அளிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. (ம)



# கரவெட்டி மெய்வன்மை

கரவெட்டி, மார்ச் 16

கரவெட்டிப் பிரதேச செயலகக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளன. (422)

# மத்தியூஸின் பாட்டன் சாவு

இலங்கை அணியின் தலைவரான மத்தியூஸின் பாட்டனார் நேற்றுச் சாவடைந்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்றுவரும் ரி-20 உலகக் கிண்ணத்துக்கான இலங்கை அணிக்கு மத்தியூஸ் தலைமைதாங்கி வருகிறார். இந்த நிலையில் அவரது பாட்டனார் சாவடைந்துள்ளார். ஆனால் மத்தியூஸ் உலகக் கிண்ணத் தொடருக்கான அணியை வழிநடத்துவதுக்காக, இலங்கைக்கு திரும்பாமல் தொடர்ந்தும் இந்தியாவிலேயே தங்கியுள்ளார். (ம)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை

முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு கீழ் வரும் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

1. வகுப்பறை மேற்பார்வையாளர்கள் (ஆண்கள்)
2. சிற்றூழியர்கள் (ஆண்கள்)

நேர்முகத் தேர்வு - 20.03.2016 - மாலை 3.00மணிக்கு

NEW SCIENCE WORLD
Brown Road,
Navalar Road Junction, Jaffna.
Hot Line - 077 336 4055

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

af

## பிரெஞ்சு மொழி



* பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
* எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA (DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவை யில்லை.

கட்டணம் AF மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 10300/=
பிரெஞ்சு மொழி பெயர்ப்புக்கள்.

*மாணவர்களுக்கு 40% கழிவு*

* இலவசம்: படிக்கும் பாடங்களின் , PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை..

யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.



உடன் அழைத்து பதியவும்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் ➡ புகையிரதகடவை ➡ AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

## மொழி வகுப்புகள்

திருமண பந்தத்தின் மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவாக சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் ஜேர்மன் - Deutsch, நெதெர்லாந்து - Dutch, French, Italian, English வகுப்புகள் நடைபெறுகின்றன.

விவேகானந்தா அக்கடமி
221/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 321 6928, 077 484 2464


## வலிகாம கால்பந்து

வலிகாம வலய கால் பந்தாட்டங்கள் இன்று யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில் நுட்பக்கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளன. (ம-422)


## சொலெக்ஸ்
நீர் பம்பிகள்
உயர்ந்த.நம்பிக்கையான




ரூபா.8450/- முதல்...
0773 658869

## Rent a Car

நாள்,மாத அடிப்படையில்
கார்,வான்கள் வாடகைக்கு உண்டு
T.P:0752040061

## காணியுடன் வீடு விற்பனைக்கு

வவுனியா மாநகர சபைக்கு உட்பட்ட A9 வீதிக்கு அண்மையில் 4 பரப்பு உறுதிக்காணியும் 3 அறை இணைந்த குளியல் அறை மாபிள் பதித்த இரண்டு வரவேற்பு அறையுடன் கூடிய மேல்மாடி அமைப்புள்ள வீடு விற்பனைக்குண்டு. மற்றும் நன்னீர் கிணறு, மா.தென்னை, பலா, தோடை போன்ற பயன்தரு மரங்களை உள்ளடக்கியவாறு அழகான சூழலில் அமைந்துள்ளது.

தொடர்பு:077 695 7580
077 497 2327

## A/L பொருளியல் நூல்

கேள்வி, நிரம்பல், நெகிழ்ச்சி
சந்தைச் சமநிலை
வினா-விடை-2
ரூபா 200



பேராசிரியர்
வி.பி. சிவநாதன்
அவர்களின் 65ஆவது பிறந்த நாளில் அவர் சேவைக்கு சமர்ப்பணம்.
ஆசிரியர். வே.கருணாகரன்

பூபாலசிங்கம் புத்தகசாலை / அன்னை புத்தகசாலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.